விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 புரட்டாதி 13 சனிக்கிழமை (29.09.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 284

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

வடக்கு முதல்வர் தாக்கல் செய்த

## மேன்முறையீட்டை விசாரிக்க உயர் நீதிமன்றம் தீர்மானம்

(கொழும்பு)

மாகாண அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கப்பட்ட பா.டெனீஸ்வரனுக்கு மீண்டும் பதவியை வழங்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய இடைக்காலக் கட்டளைக்கு ஆட்சேபனை தெரிவித்து வட மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுவை எதிர்வரும் 19ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள உயர் நீதிமன்றம் நேற்று தீர்மானித்தது.

உயர் நீதிமன்ற நீதியரசர்கள் ஈவா வனசுந்தர மற்றும் 24☛

## உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகள்

### தமக்கான மருத்துவ சிகிச்சையை நேற்றிலிருந்து நிறுத்தியுள்ளனர்

(யாழ்ப்பாணம்)

அநுராதபுரம் சிறைச்சாலையில் இரு வாரங்களாக தொடர் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகள் நேற்றில் இருந்து தமக்கான மருத்துவ சிகிச்சைகளை நிறுத்தியுள்ளார்கள்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் 10 பேர் தமது விடுதலையை வலியுறுத்தி கடந்த 14 ஆம் திகதியில் இருந்து இன்றுடன் (நேற்று) 16 ஆவது நாளாக தொடர் 24☛

## நீரில் மூழ்கி குடும்பஸ்தர் உயிரிழப்பு

(பூநகரி)

குளத்தில் குளித்த போது நீரில் மூழ்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். பூநகரி முக்கொம்பன் பகுதியைச் சேர்ந்த 23☛

## யாழ். பொது நூலக நினைவு கல்வெட்டை அகற்றத் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொது நூலகத்தில் உள்ள நினைவுக் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ள சில விடயங்கள் தவறான வரலாற்றை பதிவு செய்வதனால் அந்த கல்வெட்டை அகற்றி சரியான விடயங்கள் பொறிக்கப்பட வேண்டும் என யாழ் 24☛

## பாம்புக்கடிக்கு இலக்கான மூவர் வைத்தியசாலையில்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை மூவர் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பாம்புக்கடிக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சரசாலையைச் சேர்ந்த 23☛

# அதிகாரத்தை தாருங்கள்
# வடக்கில் குற்றங்களை கட்டுப்படுத்திக் காட்டுவோம்

## இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மஹேஸ் சேனாநாயக்க தெரிவிப்பு



(கண்டி) இராணுவத்தினருக்கு மீள அதிகாரத்தை தந்தால் வடக்கில் உள்ள வாள்வெட்டுக்குழுக்களை கட்டுப்படுத்திக் காட்டுவோம் என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மஹேஸ் சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

(23-ம் பக்கம் பார்க்க...)

குடும்பப் பெண்ணின்

## தங்கச் சங்கிலி அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வீட்டு முற்றத்தில் நின்ற குடும்பப் பெண்ணின் சங்கிலியை திருடர்கள் அறுத்துச் சென்ற சம்பவம் நேற்று புன்னாலைக்கட்டுவன் பகுதியில் இடம்பெற்று 23☛

## மாநகர எல்லைக்குள் வியாபாரத்தை சட்டமுறைப்படுத்த நடவடிக்கை

### முதல்வர் இ.ஆனோல்ட் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பொதுமக்களின் நன்மை கருதி யாழ். மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இடம்பெறும் வியாபார நடவடிக்கைகளில் உடனடியாக செயற்படுத்தப்பட வேண்டிய சில சட்ட நடைமுறைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக யாழ்.மாநகர முதல்வர் இ.ஆனோல்ட் அறிவித்துள்ளார்.

யாழ் மாநகரசபையின் 6 ஆவது அமர்வு நேற்று இடம்பெற்றது. அதில் இனிவரும் காலங்களில் நடைமுறைப்படுத்தப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் முதல்வர் அறிவித்தல்களை விடுத்தார். 24☛

## இறுதி யுத்தத்தின் இரு வாரங்கள் புலிகள் பலமாக செயற்பட்டனர்

### விமானம் மூலம் கொழும்பை தாக்கவும் திட்டமிட்டிருந்தனர்- ஜனாதிபதி மைத்திரி

(யாழ்ப்பாணம்)

இறுதி யுத்தத்தின் இறுதி இரு வாரங்களிலும் விடுதலைப் புலிகள் பலமான நிலையிலேயே போரிட்டு வந்ததாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா சபையில் பங்கேற்க நியூயோர்க் சென்ற ஜனாதிபதி மைத்திரிபால அங்கு இலங்கைச் சமூகத்தினரைச் சந்தித்த போதே, இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இறுதி தருணத்திலும், 23☛

## பெண்ணின் சங்கிலி அறுத்துச் சென்றவர் மடக்கிப் பிடிப்பு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த பெண்ணின் சங்கிலியை அறுத்துச் சென்ற நபரை அப்பகுதியில் நின்றிருந்த இளைஞர்கள் துரத்தி சென்று பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

நேற்று மாலை 6 மணியளவில் கொக்குவில் பிடாரி அம்மன் கோவில் பகுதியில் மோட் 23☛

ஆனைக்கோட்டை ஆறுகால்மடத்தில்

## வாள்வெட்டுக்குழுவினர் வீடு புகுந்து தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை பகுதியில் உள்ள வீடு ஒன்றின் மீது வாள்வெட்டு குழுவினர் நேற்று இரவு மேற்கொண்ட தாக்குதலில் வீட்டில் உள்ள பொருட்கள் சேதமடைந்துள்ளன.

ஆனைக்கோட்டை ஆறுகால் மடம் புது வீதியில் உள்ள வீடு ஒன்றுக்கு நேற்று இரவு 9 மணிக்கு 2 மோட்டார் சைக்கிள்களில் சென்ற ஆறு பேர் கொண்டு குழுவினர் வீட்டின் கதவு யன்னல் என்பவற்றை பாரிய ஆயுதங்களால் 23☛

## பதின்ம வயது திருமணங்கள் யாழ்ப்பாணத்தில் அதிகரிப்பு

### மாவட்ட சமூக பாதுகாப்புக்குழு கூட்டத்தில் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் பதின்ம வயது திருமணங்கள் மற்றும் இணைந்து குடும்பம் நடத்தும் தம்பதியரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அதனைத் தடுக்க பதின்ம வயது தம்பதியர் அனைவருக்கும் எதிராக நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ்ப்பாண மாவட்ட பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாண மாவட்ட சமூகப் பாதுகாப்புக் குழுக் கூட்டம் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் 23☛

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்

## குமாரசாமி இராசரத்தினம்

(பருத்தித்துறை பனை, தென்னைவள அ.கூ.சங்க முன்னாள் மேற்பார்வையாளர்)

பிறப்பு 05 - 07 - 1942



இறப்பு 28 - 09 - 2018

அல்வாய் வடக்கு, கூத்தாடியம்பதியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட குமாரசாமி இராசரத்தினம் அவர்கள் நேற்று முற்பகல் (28.09.2018) 10.30 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி-செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு-தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், நவமணியின் அன்புக் கணவரும், அமரர் ரவிச்சந்திரன் (ஜேர்மனி), ரவீந்திரன் (இந்திரன்), சுகந்தி, யாழினி (லண்டன்), சந்திரமோகன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சந்திரமணி (ஜேர்மனி), ஜொய்ஸ்சி, ஜெயரூபன், ஸ்ரீஸ்கந்தராசா (லண்டன்), அஜிதா ஆகியோரின் அன்பு மாமனாரும், தங்கவடிவேல், சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், கீர்த்தன் (ஜேர்மனி), தூரிகா (ஜேர்மனி), இந்துசுயா, சன்சுயா, ரஜீந்தன், சர்மிகா, லக்ஸ்மன், லக்ஷி, லதுரி, செரின் (லண்டன்), டெவி (லண்டன்), சப்தரிசி ஆகியோரின் அன்புப் பேரனும், சுஜீவன், விதுரன் ஆகியோரின் திருமண வழி அன்புப் பேரனும், சசாரா, தஸ்விந் ஆகியோரின் அன்புப் பூட்டனும், புஸ்பம், தங்கத்துரை ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.09.2018) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கூத்தாடியம்பதி,
அல்வாய் வடக்கு.

(சி-4002)

தகவல்:-குடும்பத்தினர்
0763427690




## எமது சேவைகள்...

- மிகக் குறைந்த விலையில் சகல நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள்.
- இந்தியா, மலேசியா, தாய்லாந்து, சீனா ஆகிய நாடுகளுக்கான விசா சேவைகள்.
- சகல நாடுகளுக்குமான பயணக் காப்புறுதிகள்
- உள்ளூர், வெளியூர் பிரயாணிகளுக்கான சுற்றுலா வசதிகள்.
- சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்பப்படிவம் பூரணப்படுத்தி ஒழுங்கமைத்தல்.

(சி-3962)

இவை அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்




# அரிகர தேசிய சுவாமிகளின் திருவாசக இசைச் சொற்பொழிவு



(யாழ்ப்பாணம்)

தமிழகத்தைச் சேர்ந்த தவத்திரு அரிகர தேசிக சுவாமிகள் வழங்கும் திருவாசக இசைச்சொற்பொழிவு எதிர்வரும் ஒக்டோபர்மாதம் 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு ஏ9 வீதி, நாவற்குழியில் அமைந்துள்ள திருவாசக அரண்மனையில் இடம் பெறும்.

இது தவிர, சுவாமிகளின் சொற்பொழிவு கள் குறித்த சில பாடசாலைகளிலும் இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

**கட்டார் வேலைவாய்ப்புக்கள்**

வடக்கின் 1வது & ஒரேயொரு வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

ஐந்து நட்சத்திர விருதுவென்ற ஒரே நிறுவனம்

Emerald Isle
Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
License No. 2268

முற்றிலும் இலவச பயணம்

பதிவுக் கட்டணம் 200/- மட்டுமே

**இப்போது யாழ்ப்பாணத்தில்**

மத்திய கிழக்கு - ஐரோப்பா - மேலைத்தேய நாடுகள்

077 00 38 215 ☎ 021 222 00 11

221-1/1. மின்சார நிலைய வீதி. (2ம் ஒழுங்கை). யாழ்ப்பாணம்
www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் கந்தையா நடேசமூர்த்தி



எமது வித்தியாலய ஆசிரியை திருமதி தயாபரன் ரஜீதா அவர்களின் அன்பு மாமனார் அமரர் கந்தையா நடேசமூர்த்தி அவர்கள் கடந்த 13.09.2018 வியாழக்கிழமை அன்று இறைபதமடைந்தமையையிட்டு துயரடைவதுடன் அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
யா/பரமேஸ்வரா வித்தியாலயம்

(5841)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

**கறையான் தொல்லையா?**



கட்டடங்களில் கறையான்களால் ஏற்படும் அல்லது ஏற்பட்டிருக்கும் பாதிப்புக்களை உத்தரவாதத்துடன் இல்லாதொழித்து தரப்படும்

(5 Years- 10 Years Warranty)

**ஆலோசனையும் மதிப்பீடும் இலவசமாக வழங்கப்படும்.**

(5845)

தொடர்பு: ந.ரூபகாந்த் 0771515897, 0703312299, 0214993200

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் 2018/ 2019ஆம் ஆண்டுக்கான காவற்கடமை சேவைக்கான பகிரங்க கூறுவிலை கோரல்

தலைவர், பெறுகைக்குழு அவர்களினால் வலிகாமம் மேற்கு பிரதேச சபையில் 2018/2019 ஆண்டுக்கான அராலி திண்மக்கழிவு தரம் பிரிக்கும் நிலையத்திற்கு 24 மணித்தியால காவற்கடமை (பாதுகாப்புக் கடமை) சேவை வழங்குவதற்கு தகைமையுள்ள சேவை வழங்கு நர்களிடமிருந்து பொறிக்கப்பட்ட கூறு விலைப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

1).சேவை வழங்குநர்கள்

காவற்கடமை சேவை வழங்கலுக்கான வியாபாரப் பதிவுடைய ஒரு நபராகவோ அல்லது ஒரு நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 03 ஆண்டுகள் இச்சேவையை வழங்கியமைக்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.

2).சேவைவழங்குநர்களின் தலைமைக்காரியாலயம் அல்லது கிளைக்காரியாலயம் யாழ்.மாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

3).சேவைவழங்குநர்கள் கூறுவிலை ஆவணங்களை வலிகாமம் மேற்கு பிரதேசபை, சுழிபுரத்தில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் 01.10.2018 - 09.10.2018-ம் திகதிவரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 3.00 மணிவரை மீளளிக்கப்படாத படிவக்கட்டணம் ரூ.1000.00ஐ செலுத்திபெற்றுக் கொள்ளலாம்.

4).கூறுவிலை ஆவணங்கள் 10.10.2018-ம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் நேரடியாகவே உரிய பெட்டியில் இடலாம், அல்லது "தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை சுழிபுரம்" என்ற பெயருக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும். குறித்த நேரத்திற்கு பின்னர் கிடைக்கும் கூறுவிலைகள் யாவும் நிராகரிக்கப்படும்.

5).கிடைக்கப்பெற்ற கூறுவிலைகள் யாவும் 10.10.2018-ம் திகதி பி.ப 2.30 மணிக்கு திறக்கப்படும். இதில் கூறுவிலை தாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்.

6).கிடைக்கப்பெற்ற கூறுவிலைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் கூறுவிலையினை கோருவதற்கும் பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

த.நடனேந்திரன்
தவிசாளர்
வலிகாமம் மேற்கு பிரதேச சபை
சுழிபுரம்

(சி-4000)

# அரசியல் தலைவர்களிடமிருந்து நாட்டைப் பாதுகாக்க வேண்டும்

## மெதகொட அபயதிஸ்ஸ தேரர் வலியுறுத்து

(கொழும்பு)

அரசியல் தலைவர்களிடமிருந்து நாட்டைப் பாதுகாக்க வேண்டிய நிலைமை தற்போது உருவாகியுள்ளதாக ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பாளி மொழி மற்றும் பௌத்தபீடத்தின் பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸ தேரர் தெரித்துள்ளார்.



கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

மக்கள் தங்களது வாழ்க்கையைச் சிறந்த முறையில் வழிநடத்திச் செல்வதற்கும் நாட்டை அபிவிருத்தி பாதையை நோக்கிக் கொண்டு செல்வதற்கும் தங்களுக்கான தலைவர்களைத் தேர்ந்தெடுத்தனர்.

ஆனால், இவ்வாறு நாட்டைப் பாதுகாப்பதற்காகத் தெரிவு செய்யப்பட்ட மக்கள்பிரதிநிதிகள் நாட்டின் வளங்களை அழிப்பது மாத்திரமன்றி, நாட்டின் வளங்களையும் வேறு நாடுகளுக்கு விற்பனை செய்து வருகின்றனர் எனவும் அவர் கவலை வெளியிட்டார்.

இதனால் இன்று நாட்டைப்பாதுகாப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட தலைவர்களிடமிருந்து, நாட்டைப் பாதுகாக்கவேண்டிய நிலைமை மக்களுக்கு உருவாகியுள்ளதாக மெதகொட அபயதிஸ்ஸ தேரர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தமிழ், சிங்கள மொழிப் பிரச்சினை மாகாண சபையில் அமளிதுமளி

(கொழும்பு)

ஊவா மாகாண சபை அமர்வின் நிகழ்ச்சி நிரலில் ஏற்பட்ட குளறுபடி மற்றும் மொழிப் பிரச்சினை ஆகியவற்றால் சபை அமர்வில் பெரும் அமளிதுமளி இடம் பெற்று சபை அமர்வும் சில மணி நேரம் ஒத்திவைக்கப்பட்டது.

ஊவா மாகாண சபை அமர்வு நேற்று காலை அவைத் தலைவர் ஏ.எம். புத்ததாச தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்ற போதே இவ்வாறு அமளி துமளி ஏற்பட்டது.

ஊவா மாகாண சபை அமர்வு நிகழ்ச்சி நிரலில் சபை உறுப்பினர் எம். சச்சிதானந்தனினால் முன்வைக்கப்பட்ட பிரேரணை சிங்கள மொழியில் சரியானதாகவும் தமிழ்மொழியில் பிழையாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

தமிழ் மொழியில் வழங்கப்பட்ட நிகழ்ச்சி நிரலைப் பார்த்து பிரேரணையை முன்வைக்கும்போது தம்மால் முன்வைக்கப்பட்ட பிரேரணை இதுவல்ல என்று சபை உறுப்பினர் எம். சச்சிதானந்தன்கூறியதுடன், சிங்கள மொழியிலான நிகழ்ச்சி நிரலில் தமது பிரேரணை சரியாக குறிப்பிடப்பட்டிருக்கின்றது என்றார்.

தமிழ்மொழி பிரேரணை நிகழ்ச்சி நிரலில் எவ்வகையில் பிழை ஏற்பட்டதென்று சபை உறுப்பினர் எம். சச்சிதானந்தன் கேள்வி எழுப்பினார்.

அதற்கு அவைத்தலைவர் ஏ.எம்.புத்ததாஸ "பிரேரணை நிகழ்ச்சி நிரலில் தமிழ்மொழி பெயர்ப்பில் பிழை ஏற்பட்டிருப்பது உண்மைதான். சபை செயலாளர் அலுவலகத்தினால் இப் பிழை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது போன்ற பிழைகள் இனி மேல் ஏற்பட எவ்வகையிலும் அனுமதிக்க முடியாது. அதனைப் பொருட்படுத்த வேண்டாம். தங்களிடமிருக்கும் பிரேரணைப் பிரதியின் மூலம் தெளிவுபடுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்" என்றார்.

இதையடுத்து சபை உறுப்பினர் எம். சச்சிதானந்தன் தமதுரையினை தமிழ் மொழியில் ஆற்ற முற்பட்டார். இதன்போது சபை உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராய்ச்சி எழுந்து தமது மேசையில் மொழி பெயர்ப்பு ஒலி வாங்கி பொருத்தப்படாமலிருப்பதால் தமிழில் உரையாற்றுவதை எம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆகையினால் அவ் உறுப்பினரை சிங்கள மொழியில் உரையாற்றுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தமிழ்மொழியிலான உரையை எம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. இதனால் தமிழ்மொழியில் உரையாற்றுவதை தவிர்க்கவும்" என்றார்.

இதற்கு சபை உறுப்பினர் எம். சச்சிதானந்தன் தமதுரையில் 13ஆவது திருத்தச் சட்டப் பிரகாரம் தமிழ் மொழியில் எம்மால் பிரேரணைகளை சமர்ப்பிக்க முடியும். இதற்கு எவராலும் எதிர்ப்பு தெரிவிக்க முடியாது. கடந்த மூன்றரை வருடகாலமாக இது போன்ற நிலை தொடர்ந்த வண்ணமுள்ளது.

எம் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை இச சபையில் பிரேரணை யாக கொண்டு வந்து அவற்றினை நிவர்த்தி செய்ய வேண்டியது எமது கடமை. எமக்கு ஏற்படுகின்ற புறக்கணிப்பினால் இச் சபையின் நிர்வாகக் குழு உறுப்பினர் பதவியிலிருந்தும் நான் இராஜினாமாச் செய்கின்றேன்" என்று கூறினார்.

இவ் இராஜினாமாவை தன்னால் ஏற்றுக்கொள்ள முடியாதென்று அவைத் தலைவர் கூறிய போதிலும் சபை உறுப்பினர் சபையின் நிாவாகக் குழு உறுப்பினர் பதவியிலிருந்து எனது இராஜினாமா உறுதியானது எனத் தெரிவித்தார். (இ-7)

# அரசியல் கைதிகளை விடுதலை செய்! யாழ். நகரில் இன்று போராட்டம் த.தே.ம.முன்னணி பூரணஆதரவு

(யாழ்ப்பாணம்)

அநுரதபுரம் சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் கடந்த 14 ஆம் திகதி தொடக்கம் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர்களது உடல்நிலை மிகவும் மோசமடைந்துள்ளது. எனினும் தமது கோரிக்கைகள் அரசினால் புறக்கணிக்கப்பட்டுள்ள நிலையில் இன்று முதல் தமக்கான மருத்துவ உதவிகளையும் புறக்கணிக்க ஆம்பித்துள்ளதாக அறிய முடிகின்றது. ஏற்கனவே பலதடவைகள் தமது விடுதலையை வலியுறுத்தி உண்ணாவிரதமிருந்து உடல்நிலை மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது மேற்கொள்ளும் போராட்டம் அவர்களது உயிருக்கு மேலும் ஆபத்தை ஏற்படுத்தக்கூடும் என்ற நிலையிலும் விரக்தியின் உச்சத்திற்குச் சென்றுள்ள குறித்த இளைஞர்கள் தமது விடுதலையை வலியுறுத்தி உணவு தவிர்ப்பில் ஈடுபட்டனர். தற்போது மருத்துவ உதவியையும் ஏற்க மறுத்துள்ளனர்.

இந்நிலையில் கைதிகளது போராட்டத்தின் நியாயத்தை உலகுக்கு வெளிப்படுத்தும் முகமாகவும் கைதிகளின் போராட்டத்திற்கு பலம் சேர்த்து அவர்களது விடுதலையை விரைவாக்க வலியுறுத்தியும் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் இன்று சனிக்கிழமை நண்பகல் 11.30 மணிக்கு யாழ்.பஸ்நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

இப்போராட்டத்திற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முழுமையான ஆதரவைத் தெரிவித்துக் கொள்கின்றது.

இப்போராட்டத்தில் கலந்து கொண்டு கைதிகளது விடுதலைக்கு வலுச் சேர்க்க வேண்டிய பொறுப்பு அனைத்துத் தமிழ் மக்களுக்கும் உள்ளது. எனவே அனைத்து பொது அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள், உயர் கல்வி நிறுவன மாணவர்கள், ஊழியர்கள், விரிவுரையாளர்கள், ஏனைய கல்விச் சமூகத்தினர், விவசாய அமைப்புக்களை சார்ந்தோர், வர்த்தக சமூகத்தினர், கடற்றொழில் சமூகத்தினர் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களைச் சார்ந்தோர் பொது மக்கள் அனைவரையும் கலந்து கொண்டு வலுச் சேர்க்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் என அந்தக்கட்சியின் செயலாளர் செ.கஜேந்திரன் வீடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# ஒக்டோபர் முதலாம் திகதி முதல் புதிய ரயில்வே கட்டணப்பட்டியல்

## கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு 30 ரூபா அதிகரிப்பு

(கொழும்பு)

ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் ரயில்வே கட்டணங்களை அதிகரிப்பதற்கான திருத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அதற்கமைய, ரயில்வே கட்டணம் 15 வீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளது.

ரயில் கட்டணத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டாலும், 10 ரூபா ஆரம்பக் கட்டணத்தில் எவ்வித மாற்றங்களும் ஏற்படாது என ரயில்வே திணைக்களத்தின் பிரதி வணிக அத்தியட்சகர் என்.ஜே. இத்திபாலகே தெரிவித்தார்.

எனினும், ஆரம்பக் கட்டணத்திற்கான தூரம் 9 கிலோ மீற்றரிலிருந்து 7 கிலோமீற்றராகக் குறைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, கொழும்பு கோட்டையிலிருந்து ஹுனுபிட்டிய வரை இதுவரை காலம் 10 ரூபாவாகக் காணப்பட்ட ரயில் கட்டணம் புதிய திருத்தத்திற்கு அமைய 15 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான கட்டணம் 30 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. கொழும்பிலிருந்து பதுளைக் கான கட்டணம் 70 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

2008 ஆம் ஆண்டுக்கு பின்னர் மேற்கொள்ளப்பட்ட கட்டண திருத்தம் இதுவென ரயில்வே திணைக்களத்தின் பிரதி வணிக அத்தியட்சகர் என்.ஜே. இத்திபாலகே சுட்டிக்காட்டினார். (இ-7)

# தினேஷின் கோரிக்கை பிரதமருக்கு



(கொழும்பு)

பாராளுமன்றத்தை அவசரமாக கூட்டுமாறு பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன விடுத்த கோரிக்கை பிரதமருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் கப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை தொடர்பில் கவனம் செலுத்தும் நோக்கில் பாராளுமன்றத்தில் அவசர கூட்டமொன்றை கோரி பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன கடந்த 26ஆம் திகதி சபாநாயகர் கரு ஜெயசூரியவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

பாராளுமன்ற நிலையியல் கட்டளை 16 இன் பிரகாரம் பாராளுமன்றத்தை அவசரமாக கூட்டும் அதிகாரம் பிரதமருக்கு காணப்படுவதாகவும் சபாநாயகரின் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)

# ஞானசார தேரரின் மனு பிற்போடல்

(கொழும்பு)

சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட ஞானசார தேரர் தனக்கு விதிக்கப்பட்ட தண்டனைக்கு எதிராக செய்துள்ள மேன் முறையீட்டு மனுவை எதிர்வரும் மாதம் 5ஆம் திகதி விசாரிக்க உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

நேற்று இந்த மனு நீதியரசர்களான ஈசா வனசுந்தர, விஜித் மலல்கொட ஆகியோர் முன்னிலையில் அழைக்கப்பட்ட போது இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த மனு மூன்று நீதியரசர்கள் முன்னிலையில் விசாரிக்கப்பட வேண்டும் என்றும், நேற்று நீதியரசர்கள் குழாம் சரியாக ஒழுங்கமைக்கப்படாமையால் மனுவை ஒக்டோபர் 5 ஆம் திகதி வரை பிற்போடுவதாக தீர்மானிக்கப்பட்டது.

நீதிமன்றத்தை அவமதித்ததாக பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரருக்கு கடுமையான உழைப்புடன்06 வருடங்களில் அனுபவிக்கும் படியாக 19 வருடங்கள் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2016ஆம் ஆண்டு ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான வழக்கு ஹோமாகம நீதவான் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும் போது, நீதிமன்றத்திற்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வ்கையில் செயற்பட்டதாக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

அப்போது ஹோமாகம நீதவானாக இருந்த ரங்க திஸாநாயக்கவால் இது தொடர்பில் மேன்முறையீட்டு நீதி மன்றத்தில்முறையிடப்பட்டுவழக்கு விசாரணை இடம்பெற்றது.



இந்த தண்டனைக்கு எதிராக மேன்முறையீடு செய்வதற்கு அனுமதி வழங்குமாறு ஞானசார தேரரால் விடுக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

இந்நிலையில் மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் இந்தத் தீர்மானத்துக்கு எதிராக மேன்முறையீடு செய்வதற்கு அனுமதி வழங்குமாறு கோரிக்கை விடுத்து ஞானசார தேரரால் உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சிம்டான்காரன் யார்?

## ○ ஐ.எஸ்.கால்பந்து அரங்கில்... ○ மீண்டும் சாதிக்குமா சென்னை?

ஐந்தாவது ஐ.எஸ்.எல்., கால்பந்து தொடர் வரும் இன்று கோலாகலமாக ஆரம்பமாகிறது. கடந்த தொடர்களில் சுனில் செத்ரி, ஜீஜே போன்றவர்கள் ரசிகர்களை கவர்ந்து இழுத்தனர். இம்முறை, கண்கள் சிமிட்டாமல் பார்த்து ரசிக்ககூடிய 'சிம்டான்காரன்' வீரனாக வலம் வரப் போவது யார் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்தியன் சுப்பர் லீக் (ஐ.எஸ்.எல்.,) கால்பந்து தொடர் கடந்த 2014ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இத் தொடரின் வெற்றி காரணமாக இந்தியாவில் கால்பந்து வளர்ச்சியில் பெரும் மாற்றமே ஏற்பட்டுள்ளது.

இதுவரை முடிந்த நான்கு சீசன்களில் கொல்கத்தா (2014, 2016), சென்னை (2015, 2017-18) ஆகிய அணிகள் தலா இருமுறை கிண்ணம் வென்றன.

**நெருக்கடி இல்லை**

சென்னை அணி தனது முதல் போட்டியில் பெங்களூருவை (செப். 30) சந்திக்கிறது. இதுகுறித்து சென்னை பயிற்சியாளர் ஜான் கிரகரி கூறுகையில்," இத்தொடருக்காக சிறப்பான முறையில் தயாராகி உள்ளோம். எங்களுக்கு எவ்வித நெருக்கடியும் இல்லை," என்றார்.

இந்நிலையில் 5ஆவது சீசன் இன்று கொல்கத்தாவில் ஆரம்பமாகிறது. 'நடப்பு சம்பியன்' சென்னை அணியை பொறுத்தவரையில் கடந்த சீசனில் பங்கேற்ற தமிழகத்தின் தனபால் கணேஷ் உள்ளிட்ட 12 வீரர்கள் தக்க வைக்கப்பட்டுள்ளனர்.

முழங்கால் காயம் காரணமாக தனபால் கணேசும் கிறிஸ்துமஸ் வரை களமிறங்க முடியாது. எனினும் புதிய வரவுகளான எல் சபியா (பிரேசில்), கார்லஸ் சலோம் (ஆர்ஜென்ரீனா), அன்டிரியோ ஆர்லண்டி (ஸ்பெயின்) உள்ளிட்ட அந்நிய நட்சத்திரங்கள் பயிற்சியாளர் கிரகரிக்கு நம்பிக்கை கொடுக்கலாம்.

தவிர கோல் காப்பாளர் கரண் ஜித் சிங், முன்கள வீரர்கள் ஜீஜே, மொஹமட் ரபி, மத்திய களத்தில் ரபேல் அகஸ்டோ, அனிருத் தபா, தோய் சிங் என பலரும் உள்ளது பலம் தான். புதிய அணித் தலைவர் மெய்ல்சன் ஆல்வ்ஸ் (பிரேசில்) சென்னை அணிக்கு வெற்றி தேடிக் கொடுப்பார் என நம்பப் படுகிறது.

**செத்ரி பலம்**

கடந்த சீசனில் முதன் முறையாக அடியெடுத்து வைத்தது பெங்களூரு அணி, அணித் தலைவர் சுனில் செத்ரி தலைமையில் சிறப்பாக செயற்பட்டு இறுதிக்கு முன்னேறியது. லீக் சுற்றில் மற்றைய அணிகளை விட 8 புள்ளிகள் முன்னிலை பெற்றது.

இம்முறை ஸ்பெயினின் பார்சிலோனா 'பி', வில்லாரியல் 'பி' என வலி மையான அணிகளுக்கு எதிராக பயிற்சி போட்டிகளில் பங்கேற்று திரும்பியுள்ளது. கோல் காப்பாளர் குரீந்தர் சிங் சாந்து, மிக்கு, உடாண்டா உதவும் பட்சத்தில் கிண்ணம் வெல்ல முயற்சிக்கலாம்.

**மீளுமா கொல்கத்தா**

இரு முறை சம்பியன் பட்டம் வென்ற கொல்கத்தா, கடந்த ஆண்டு லீக் சுற்றில் மிக மோசமான இடம் (9ஆவது) பெற்றது. அதில் செய்த தவறுகளை திருத்திக் கொண்டு இம்முறை சிறப்பாக தயாராகியுள்ளது. சமீபத்திய ஐந்து போட்டிகளில் மூன்றில் வெற்றி பெற்றது.

இத்தொடரின் முதல்போட்டியில் கொல்கத்தா அணி, கேரளாவை (செப். 29) சந்திக்கிறது. அர்னாப் மண்டல், காலு உசே, பல்வந்த் சிங் கை கொடுத்தால் வெற்றியுடன் ஆரம்பிக்கலாம்.

**சச்சின் விலகல்**

கடந்த 2014, 2016 என இரு முறை இறுதிக்கு முன்னேறிய அணி கேரளா. இம்முறை அணி உரிமையாளர் சச்சின் விலகிய நிலையில் களம் காண்கிறது. கால்பந்துக்கு உலகளவில் தீவிர ரசிகர்களை கொண்ட கேரளா அணி, எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப செயல்படவில்லை.

கடந்த முறை 18 போட்டிகளில் 6ல் மட்டும்தான் வென்றது (6வது இடம்). புதிய பயிற்சியாளர் டேவிட் ஜேம்ஸ் அணிக்கு இளரத்தம் (சராசரி வயது 24) பாய்ச்சி யுள்ளது எடு படுமா என பொறுத்திருந்து காண லாம்.

இதேபோல நான்கு சீசனில் மூன்று முறை அரையிறுதிக்கு முன்னேறிய கோவா, மும்பை, வடகிழக்கு யுனைடெட், ஜாம் ஷெட்பூர், டில்லி, புனே அணி களும் கிண்ணம் வெல்ல களமிறங்குகின்றன.



சுனில் செத்ரி



ஜீஜே

**கோவா '113'**

இந்தியன் சுப்பர் லீக் (ஐ.எஸ்.எல்.,) கால்பந்து அரங்கில் அதிக கோல் அடித்த அணிகளுக்கான பட்டியலில் கோவா அணி முன்னிலையில் உள்ளது. இந்த அணி 67 போட்டியில், 113 கோல்கள் அடித்துள்ளது.

**ஹியும் '28'**

ஐ.எஸ்.எல்., கால்பந்து அரங்கில் அதிக கோலடித்த வீரர்களுக்கான வரிசையில் கேரளா அணியின் இயான் ஹியும் முன்னிலை வகிக்கிறார். கேரளா (2014, 2017-18), கொல்கத்தா (2015-16) அணிகளுக்காக வி ளை யாடிய இவர், 59 போட்டிகளில், 28 கோல்கள் அடித்துள்ளார்.

**சென்னை '30'**

ஐ.எஸ்.எல்., கால்பந்து வரலாற்றில் அதிக வெற்றியை பதிவு செய்த அணிகளுக்கான பட்டியலில் சென்னை அணி முன்னிலையில் உள்ளது. இந்த அணி 68 போட்டியில் 30 வெற்றி, 18 'சமன்', 20 தோல்விகளை சந்தித்துள்ளது.

**டில்லி '9'**

அதிக 'ரெட் கார்ட்' பெற்ற அணிகளுக் கான பட்டியலில் டில்லி அணி முதலிடத்தில் உள்ளது. இந்த அணிக்கு இதுவரை 9 'ரெட் கார்ட்' வழங்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து கொலகத்தா (8 'ரெட் கார்ட்'), கோவா (7), மும்பை (6), சென்னை (6) அணிகள் அதிக 'ரெட் கார்ட்' பெற்றன.

◆ சென்னை அணிக்கு அதிகபட்சமாக 149 'மஞ் சள் அட்டை' வழங்கப்பட்டுள்ளது. இதனை அடுத்து கொல்கத்தா (135), கோவா (132), வடகிழக்கு யுனைடெட் (119), மும்பை (119) அணிகளுக்கு அதிக 'மஞ்சள் அட்டை' வழங்கப்பட்டன.

**ஆரம்ப விழா 'நோ'**

ஐ.எஸ்.எல்., தொடரை பிரபலப்படுத்தும் வகையில் முதல் சீசனில் பிரியங்கா சோப்ரா, கடந்த முறை காத்ரினா கைப் என பொலிவுட் பிரபலங் கள் ஆரம்பவிழாவில் கலக்கினர்.

தற்போது இத் தொடர் நன்கு பிரபலம் அடைந்து விட்ட தால் சர்வதேச கால்பந்தைப் போல, ஐந்தாவது சீசனில் ஆரம்ப விழாவை கைவிட முடிவு செய துள்ளனர்.

**இதுவரை சாம்பியன்**

ஐ.எஸ்.எல்., கால்பந்து அரங்கில் இதுவரை சென்னை (2015, 2017-18), கொல்கத்தா (2014, 2016) அணிகள் தலா 2 முறை கிண்ணம் வென்றன.

**'கோல்டன் பூட்' விருது**

ஐ.எஸ்.எல்., கால்பந்து அரங்கில் அதிக கோல் அடித்தவருக்கான 'கோல்டன் பூட்' விருதை எலானோ (சென்னை, 2014, 8 கோல்), ஸ்டீவன் மென்டோசா (சென்னை, 2015, 13 கோல்), மார்சிலோ பெரைரா (டில்லி, 2016, 10 கோல்), கோரோமினாஸ் (கோவா, 2017-18, 18 கோல்) ஆகியோர் தலா ஒரு முறை வென்றனர்.

**கோல்டன் கிளவ்' விருது**

சிறந்த கோல்காப்பாளருக்கான 'கோல்டன் கிளவ்' (தங்கக் கையுறை) விருதை ஜோன் செடா (கோவா, 2014), எடிமா எடல் (சென்னை, 2015), அம்ரிந்தர் சிங் (மும்பை, 2016), சுப்ரதா பால் (ஜாம்ஷெத்பூர், 2017-18) ஆகியோர் தலா ஒரு முறை கைப்பற்றினர்.

## ரி20 உலகக் கிண்ணம்

# ஹர்மன்பிரீத் தலைவர்



ரி20' உலக கிண்ண தொடருக்கான இந்திய பெண்கள் அணிக்கு ஹர்மன்பிரீத் கவுர் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளில் பெண்களுக்கான 6ஆவது ஐ.சி.சி., 'ரி20' உலக கிண்ண கிரிக்கெட் தொடர் வரும் நவ. 9-24ல் நடக்கவுள்ளது.

மொத்தம் 10 அணிகள் பங்கேற்கும் இத்தொடரில் இந்திய அணி 'பி' பிரிவில் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, பாகிஸ்தான் மற்றும் அயர்லாந்து அணிகளுடன் இடம் பிடித்துள்ளது.

தனது முதல போட்டியில் நியூசிலாந்தை வரும் நவ. 9ல் கயானாவில் சந்திக்கும் இந்தியா, அதன்பின் பாகிஸ்தான் (நவ. 11), அயர்லாந்து (நவ. 15), அவுஸ்திரேலியா (நவ. 17) அணிகளு டன் விளையாடுகிறது. இத்தொடருக்கான 15 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப் பட்டுள்ளது.

இதில் ஹர்மன்பிரீத் கவுர் அணித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். துணைத் தலைவராக ஸ்மிருதி மந்தனா தேர்வானார். மிதாலி ராஜ், வேதா, தீப்தி சர்மா, பூணம் யாதவ், அனுஜா பாட்டீல் உள்ளிட்டோரும் இடம்பெற்றுள்ளனர்.

**இந்திய அணி விபரம்:** ஹர்மன்பிரீத் கவுர் (அணித் தலைவர்), மந்தனா (துணைத் தலைவர்), மிதாலி ராஜ், ஜெமிமா, வேதா, தீப்தி சர்மா, தானியா பாட்யா (விக்கெட் காப்பாளர்), பூணம் யாதவ், ராதா யாதவ், அனுஜா பாட்டீல், எக்தா பிஷ்ட், ஹேமலதா, மான்சி ஜோஷி, பூஜா, அருந்ததி ரெட்டி,


**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை**
**பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம் மாதகல்**

**ஆதனப் பெயர் மாற்ற அறிவித்தல்**

| | |
|---|---|
| வட்டாரம் | : 14 |
| ஆதன இலக்கம் | : உத்தேச ஆதன இலக்கம் 46/2 |
| வீதி | : முருகமூர்த்தி கோயில் ஒழுங்கை |
| கிராமசேவையாளர் பிரிவு | : J/154 |

வட்டாரம் 14 முருகமூர்த்தி கோயில் ஒழுங்கை, உத்தேச ஆதன இல 46/2 இல் இவ் ஆதனம் அமைந்துள்ளது. உறுதிப்படி வட மாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் மேற்கு தற்போது தென்மேற்கு பகுதி பண்டத்தரிப்பு கோவிற்பற்று சிறுவிளான் இறை **'உயரம்'** எனும் பெயருள்ள நிலப்பரப்பு 01 குளி 3.14 அதற்குரியவைகளும் கொண்ட இவ்வாதனம் இளவாலை மாரீசன்கூடல் அந்தோனிப்பிள்ளை கைத்தாம்பிள்ளை என்பவரால் அவ்வூர் **அன்ரன் ஜெயநாதன் யுஸ்சின் அனற் பெண் அஜிந்தினி** ஆகிய இவர்களுக்கு சீதன உறுதிமூலம் பிரசித்த நொத்தாரிஸ் திரு.சோமசுந்தரம் தேவராஜா அவர்கள் முகதாவில் நிறைவேறிய 6830ம் இலக்க 05.09.2014ம் திகதிய உறுதிமூலம் தமக்கு சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது பண்டத்தரிப்பு கிராம உப அலுவலக (மாதகல்) ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர். நிலஅளவையாளர் திரு.A. சந்தியாப்பிள்ளை அவர்களால் வரையப்பட்ட 1920ஏ இலக்க 26.08.2014ம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ்வாதனமானது **'உயரம்'** நிலப்பரப்பு 01 குளி 3.14 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரித்த திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்துமூலம் அறியத் தருமாறும், அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **அன்ரன் ஜெயநாதன் யுஸ்சின் அனற் பெண் அஜிந்தினி** எனும் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் அறியத் தருகின்றேன். அத்துடன் இவ் ஆதனத்தின் ஆரம்ப உறுதி இலக்கம் குறிப்பிடப்படாது பெற்றோர் வழி முதுசம் எனக் காணப்படுவதால் இவ் விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படுகிறது.




**திரு.அ.ஜெபநேசன்**
**தவிசாளர்**
**வலி.தென்மேற்கு பிரதேச சபை,**
**மானிப்பாய்.**

(5842)




# அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கு யாழில் பட்டயச்சான்றிதழ் கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் உள்ள இந்து சமய கலாசார கற்கைகள் நிறுவனத்தின் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பயிற்சி நிலையத்தினால் வடமாகாண இந்து அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான பட்டயச் சான்றிதழ் கற்கை நெறி வகுப்பு நாளை 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். ஆனைப்பந்தியில் அமைந்துள்ள இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்தில் (குருகுலம்) நடைபெறவுள்ளது.

இக் கற்கை நெறியில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள் புயிற்சி பெறவுள்ளனர் என இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் அறிவித்துள்ளார். (இ)

# பருத்தித்துறையில் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 14.10.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை யா/ வட இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ள பருத்தித் துறை பிரதேச செயலகத்திற்கான "உத்தியோகபூர்வ பணி" நடமாடும் சேவைக்கு முன்னோடியாக பருத்தித்துறை பிரதேச செயலக கிராம சேவை யாளர் பிரிவுகளில் நடமாடும் சேவை நடைபெற்று வருகின்றது.

இதில் பொது மக்கள் பிரதேச செயலகத்தினால் வழங்கப்படும் பல்வேறு சேவைகளைப் பெற்று பயனடைந்து வருகின்றார்கள்.

இக்கிராம சேவையாளர் பிரிவு ரீதியான நடமாடும்சேவையில் தீர்க்கப்படாத பிரச்சினைகள் எதிர்வரும் 14.10.2018 அன்று இறுதியாக இடம்பெற இருக்கும் " உத்தியோகபூர்வ பணி" நடமாடும்சேவைக்கு பாரப்படுத்தப்படவுள்ளன என பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார். (இ)


## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் பா.கிருஷாந்த்

(யாழ். இந்து பழைய மாணவன்)

தோற்றம் 24.01.1994 மறைவு 13.10.2014



திதி பஞ்சமி 29.09.2018

மகனே எங்கு சென்று விட்டாய்
அம்மா உன்னைக் காணாது
கண்ணீர் வடிக்கிறேன்
நீ எப்போ வருவாய்?
உன் ஆத்மா சாந்தி அடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவுகளுடன்
அம்மா, அப்பா, தம்பி, மாமா,
அம்மம்மா, அம்மப்பா.

கொக்குவில்,
யாழ்ப்பாணம்.

(5800)


# வடமாகாண இந்து அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கு சான்றிதழ் கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் உள்ள இந்து சமய கலாசார கற்கைகள் நிறுவனத்தின் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பயிற்சி நிலையத்தி னால் வடமாகாணத்திற்கான அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான சான்றிதழ் கற்கை நெறி வகுப்பு இன்று 29 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெறும்.

இக் கற்நெறியில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள் பயிற்சி பெறவுள்ளனர் என இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அ.உமா மகேஸ்வரன் அறிவித்துள்ளார். (இ)

# மாண்பேற்று மலர் அறிமுக விழா

கனடா ஆத்ம ஜோதி இந்து சமயப் பேரவை பீடாதிபதி சிவ முத்துலிங்கம் ஆற்றும் பணியை நினைவுபடுத்தி சுவிட்சர்லாந்து பூரண ஆச்சிரமத்தால் வெளியிடப்பட்ட "மாண் பேற்று மலர்" அறிமுக விழா இன்று 29ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3மணியளவில் குப்பிளான், கன்னிமார் கௌரி அம்மன் ஆலய பரிபாலன சபைத் தலைவர் சோ. பரமநாதன் தலைமை யில் நடைபெறும். இதில் ஆசியுரையை சிவஸ்ரீ.குமாரராஜ குருக்கள் வழங்குவார். சிறப்புரையை சமூகவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ.ராஜேஸ்கண்ணன் சமூக வளர்ச்சியில் சமய நிறுவனங்களின் பங்கு எனும் தலைப்பில் வழங்குவார் . (இ)


## சட்டறிங் வேலை

ஒப்பந்த அடிப்படையில் சட்டறிங் வேலைகள் , கட்டட வேலைகள் தரமாக செய்து கொடுக்கப்படும்.

லக்ஸ்மி கொன்ரக்சன்ஸ்
நீர்வேலி தெற்கு. 076 171 1231 (3981)

## விற்பனைக்கு

திருக்கல் வண்டில் (ரயர்),கரம் சுண்டல் வண்டில் , மோர் மிளகாய் வடகம் என்பன விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு
077 139 4217 (5820)

## துர்க்கா மெடிக்கல் கிளினிக்கிற்கு பெண் ஆய்வுகூட உதவியாளர் தேவை

யாழ் .நகரில் இயங்கும் துர்க்கா மெடிக்கல் கிளினிக்கிற்கு பெண்ஆய்வு கூட உதவியாளர் தேவை.பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு
077 379 7111 (5831)

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் ஜீவானந்தன்
பிரகாஷ்

தோற்றம் 28.04.1988 மறைவு 29.09.2008

திதி : 8 ஆம் திகதி புரட்டாதி அமாவாசை

10 ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
மறைந்தவர்கள் மண்ணாவதில்லை மாறாக
மறைந்தும் மறையாத சூரியனாய் என்றும் என்
மனதில் அழியாது வாழ்பவர் என் தெய்வம்.
இறைவனின் அன்பினை அனுபவிக்க
எண்ணின்றோ கோடி கோடியாய் கொட்டிக்
கொடுத்தாலும் உம் நினைவுகள்
நெஞ்சைவிட்டு அகன்றிடுமோ



20A , செட்டித்தெரு லேன்,
நல்லூர்.

(5828)

என்னுயிர் உள்ளவரை
உமது அம்மம்மா
M.சறோஜினிதேவி


## இராசி பலன்

**மீனம்:** முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், வழிபாட்டால் வளர்ச்சியைக் கூட்டிக் கொள்வீர்கள், பகை விலகி பாசம் கூடும் நாள், போசன சுகமுண்டு.

**மேடம்:** கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**இடபம்:** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், பணம் பற்றிய கவலை தீரும், கனிவாகப் பேசி காரியம் சாதித்துக் கொள்வீர்கள்.

**மிதுனம்:** எடுத்த காரியத்தை முடிக்க ஒரு முறைக்கு இருமுறை அலையும் சூழ்நிலை ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சயன சுகக் குறைவான நாள்.

**கும்பம்:** பெற்றோர் மீது பிரியம் கூடும், நல்ல தகவல்கள் வந்து சேரலாம், நீங்கள் தேடிச் செல்ல நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம், வாகன சுகமுண்டு.

**கடகம்:** மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலையொன்றை நீங்கள் எளிதாக செய்து முடிப்பீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும்.

**மகரம்:** வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், ஏட்டிக்கு போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**தனுசு:** கடன் சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள், வியாபார விரோதம் விலகும், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**விருச்சிகம்:** பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், காரிய அனுகூலமுண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம் பெறலாம்.

**துலாம்:** விரயங்கள் மேலோங்கும் நாள், சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், கௌரவக் குறைவான நாள்.

**கன்னி:** சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடிவுக்கு வரும்.

### கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | சந் | | |
| | இராசி பலன் | | ராகு |
| செவ், கேது | | | |
| சனி | | குரு, சுக் | சூரி, புத |

சந்திராஷ்டமம்
சுவாதி
காலை 9.03 மணிக்கு
இடப-சந்

**29.09.2018**

புரட்டாதி 13, சனிக்கிழமை
சூரிய உதயம் காலை 06.03 மணிக்கு
சதுர்த்தி முற்பகல் 7.51 மணிவரை
கார்த்திகை பின்னிரவு 2.33 மணிவரை
சுபநேரம் 03.02-04.32 மணிவரை
இராகுகாலம் 19.02-10.32 மணிவரை
கார்த்திகை விரதம்
புரட்டாதிச் சனி

வளவன்

# வடக்கில் கௌரவம் பெறும் கலைஞர் விபரம்

வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் வருடா வருடம் வழங்கப்படும் சிறந்த கலைஞருக்கான விருதான முதலமைச்சர் விருது, இளம் கலைஞர் ஊக்குவிப்பு பரிசு பெறும் கலைஞர்கள், சிறந்த நூல் பரிசிற்காக தெரிவுசெய்யப்பட்டவர்கள், அரச உத்தியோகத்தர் ஆக்கத்திறன் போட்டி, மன்றங்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டி ஆகியவற்றில் தெரிவு செய்யப்பட்டவர்கள் விபரங்கள்,

## முதலமைச்சர் விருது தெரிவு

சுப்பிரமணியம் லோகநாதன்-நாடகம் (நல்லூர்), கார்த்திகேசு சச்சிதானந்தன்-நாவல் (நல்லூர்), ஐயாத்துரை சாந்தன்-சிறுகதை (சண்டிலிப்பாய்), சின்னத்துரை சண்முகராசா-ஓவியம் (உடுவில்), பரம்சோதி பரராசசிங்கம்-இசை நாடகம் (பருத்தித்துறை), முருகேசு சடாட்சரம்-வாத்தியக்கலை (சங்கானை), மரியநாயகம் அன்ரன் யோசவ்-சிற்பம் (யாழ்ப்பா ணம்), எலியாஸ் வரப்பிரகாசம்-கூத்து (யாழ்ப்பாணம்), சரவணை விநாயகமூர்த்தி-கூத்து (ஒட்டுசுட்டான்), கந்தன் பாலன்-கவிதை இலக்கியம் (கரவெட்டி), கந்தையா நடராசா-இசை (தெல்லிப்பழை), பேரின்ப நாயகி சிவகுரு-நடனம் (கரவெட்டி), சின்னப்பெடியன் ஐயாத்துரை-ஒப்பனைக்கலை (தெல்லிப்பழை), நடராஜாசிவசுப்ரமணியம்-கைவினைக்கலை (கோப்பாய்), சின்னத்தம்பி நாகராஜா-கிராமியக்கலை (சாவகச்சேரி), லோரன்ஸ் கொன்சால்லால் சூஞ்ஞ-ஊடகம் (மன்னார்), கந்தப்பு நடராஜா-விசேடதுறை (தொல்பொருள் பாதுகாவலர்) (காரைநகர்), வேலுப்பிள்ளை பரமநாதபிள்ளை-விசேடதுறை (தமிழ்த்தொண்டு) (கரைச்சி), சூசைப்பிள்ளை நோபேட் ஞானப்பிரகாசநாதன்-இசை நாடகம் (வவுனியா), கிறிஸ்தோகு சந்தியோகு-வாத்தியக்கலை (மாந்தை மேற்கு).

## ஆக்கத்திறன் போட்டி முடிவுகள் (அரச ஊழியர்கள்)

### குறுநாடகவாக்கம்

முதலாமிடம் மூவர் திருமதி. விநோதன் தசோனியா-கல்வி அமைச்சு, வடமாகாணம், சுகேஸ்குமார் நாகலோஜினி-சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ்ப்பாணம், பிள்ளையான் ஜெகதீஸ்வரன்-பிரதேச வைத்தியசாலை, கோப்பாய், நான்காமிடம் தம்பிப்பிள்ளை சுதன்-வு/விநாயகர் வித்தியாலயம், கணேசபுரம், ஐந்தாமிடம் Rev.Sr.கத்தரீன் மரியதாஸ்-யா/இளவாலை கன்னியர்மடம்.

### சிறுகதையாக்கம்

முதலாமிடம் இராசரத்தினம் தனஞ்சயன்-யா/வயாவிளான் மத்திய கல்லூரி, வயாவிளான், இரண்டாமிடம் தருமராசா அஜந்தகுமார்-யா/ஆழியவளை சி.சி.த.க.வித்தியாலயம், மூன்றாமிடம் கனகரத்தினம் கனகேஸ்வரன்-வலிகாமம் வலயக்கல்வி அலுவலகம் மருதனார்மடம், நான்காமிடம் திருமதி.கிருஸ்ணவேணி சிங்கராஜன்-யா/வயாவிளான் மத்திய கல்லூரி வயாவிளான், கைலைநாதன் சரவணன்-யா/சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம்.

### பாடலாக்கம்

முதலாமிடம் கீதபொன்கலன் கியோமார்-யா/சிதம்பரக் கல்லூரி, இரண்டாமிடம் திருமதி.வெலிசிற்றாறமணி ஜெறாட் ஜெயந்தன்-யா/இளவாலை கன்னியர் மடம் ம.வி., மூன்றாமிடம் கிருஷ்ணவேணி சிங்கராஜன்-யா/வயாவிளான் மத்திய கல்லூரி வயாவிளான், நான்காமிடம் இருவர் சுப்ரமணியம் சுதாகரன்-உள்ளூராட்சித் திணைக்களம், பூங்கோதை பாலபாஸ்கரன்-நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்.

### கவிதையாக்கம்

முதலாமிடம் தில்லையம்பலம் சாந்தகுமார்-யா/கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை, இரண்டாமிடம் பூங்கோதை பால பாஸ்கரன்-நல்லூர் பிரதேச சபை, கொக்குவில், மூன்றாமிடம் சிவமாலதி கேசவன்-பிரதேச செயலகம், பருத்தித்துறை, நான்காமிடம் ரேணுகா சக்திதாஸ்-பிரதேச செயலகம், துணுக்காய், ஐந்தாமிடம் செபஸ்தி றொபின்சன்-ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை.

### ஓவியம்

முதலாமிடம் ஜெயசிங்கம் ஷதுசன்-கால்நடை வைத்திய அலுவலகம், வவுனியா, இரண்டாமிடம் கோபாலகிருஷ்ணன் நிரோசன்-மு/முல்லைத்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ் மகளிர் பாடசாலை, மூன்றாமிடம் திருமதி.சிவதர்சினி கோகிலன்-யா/ஏழாலை மகா வித்தியாலயம், நான்காமிடம் திருநாவுக்கரசு தீபன்-யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி, ஐந்தாமிடம் பாலசுந்தரம் இரமணாகரன்-யா/மாதகல் சென்யோசப் மகாவித்தியாலயம்.

### தனிநடிப்பு

முதலாமிடம் இராசசிங்கன் ஸ்ரீதரன்-கிளி/அக்கராயன் மகாவித்தியாலயம், இரண்டாமிடம் சங்கரப்பிள்ளை கிருபானந்தன்-வலிகாமம் கல்வி வலயம் மருதனார்மடம், மூன்றாமிடம் திருமதி. மேரி றெஜினா சசிந்திரசிங்கம்-மு/கலைகள் வித்தியாலயம், முள்ளியவளை, நான்காமிடம் இருவர் பிள்ளையான் ஜெகதீஸ்வரன்-பிரதேச வைத்தியசாலை கோப்பாய், திருமதி.சாந்தகுமாரி கமலகாந்தன்-மு/வற்றாப்பளை மகா வித்தியாலயம்.

### தனி நடனம்

முதலாமிடம் இருவர் செல்லத்துரை ஸ்ரீகண்ணன்-பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம், முல்லைத்தீவு, வர்மிளா பாலச்சந்திரன்-தொழிற்றுறை திணைக்களம் முதியோர் இல்ல வளாகம் கண்டி வீதி கைதடி, மூன்றாமிடம் ஜஸ்மினி சிவகுமாரன்-மு/வற்றாப்பளை மகாவித்தியாலயம், நான்காமிடம் திருமதி.விணோஜிதா சோமசேகரன்-மு/முல்லைத்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ் மகளிர் பாடசாலை.

இளம் கலைஞர், அரச உத்தியோகத்தர், ஆக்கத்திறன் போட்டிக்கான விருது இன்று 29.09.2018 சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கும் முதலமைச்சர் விருது, சிறந்த நூல் பரிசு 30.09.2018 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தின் கற்சிலை மடு கிராமத்தில் அமைந்துள்ள பண்டாரவன்னியன் மகா வித்தியாலயத்தில் நடைபெறும் மாகாண பண்பாட்டு விழாவில் வழங்கப்படவுள்ளன. பரிசில்கள், விருதுகளை பெறுபவர்கள் உரிய தினத்தில் வருகைதந்து அவ்விருதினைப் பெற்றுக்கொள்ளுமாறு வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

## சிறந்த நூற்பரிசுத் தேர்வு-2017 (2018)

தியாகராசசர்மா மயூரகிரி-மரபுக்கவிதை (குமார காவியம்) (கோப்பாய்), கனகரத்தினம் சட்டநாதன்-புதுக்கவிதை(நீரின் நிறம்) (நல்லூர்), அப்புத்துரை அரவிந்தன்-சிறுகதை(பாழ்வெளி) (பருத்தித்துறை), கணேசபிள்ளை சிவகரன்- சிறுகதை (இரங்கி-சிறுகதைத் தொகுப்பு) (உடுவில்), நாராயணி யோகேந்திரநாதன்-நாவல்(பூநகரியிலிருந்து புதுமாத்தளன் வரை நீந்திக்கடந்த நெருப்பாறு) (கோப்பாய்), வல்லிபுரம் ஏழுமலைப்பிள்ளை-நாடகம்(சதுரங்க வேட்டை) (கரைச்சி), நாகலிங்கம் தர்மராஜா-ஆன்மீகம் (ஞானப்பழம்) (வவுனியா), சோமசுந்தரம் பிள்ளை பத்மநாதன்-மொழி பெயர்ப்பு (தென்னாசியக் கவிதைகள்) (நல்லூர்), திருச்செல்வம் செல்வமனோகரன்-ஆய்வு நூல்கள் (காஷ்மீரசைவமும் சைவசித்தாந்தமும்) (நல்லூர்), திருச்செல்வம் தவரத்தினம்-அறிவியல் (வனவளம்) (காரைநகர்), சின்னத்தம்பி செல்லையா தியாகராஜா-வரலாறு மற்றும் தொல்லியல் (உலக மாமேதை ஜி.ஜி) (சங்கானை), நெலோமி அன்ரனிகுரூஸ்-சிறுவர் இலக்கியம் (பாட்டுப் பாடவா) (வெங்கலச்செட்டிக்குளம்), பேராயர் சுப்பிரமணியம் ஜெபநேசன்-ஏனைய துறைகள் (ஆங்கில இலக்கிய வரலாறு-தமிழில்) (யாழ்ப்பாணம்).

## ஆக்கத்திறன் போட்டி-கலை மன்றங்கள்

### சிறுகதை

முதலாமிடம் ந.மயூரரூபன் (கரவெட்டி), இரண்டாமிடம் பாலாஜினி பாலசிங்கம் (பளை), மூன்றாமிடம் ஜெ.ஜெயப்பிரசாந்தி (மருதங்கேணி), நான்காமிடம் அம்பிகை பஞ்சலிங்கம் (நல்லூர்), ஐந்தாமிடம் ஜோர்ச் ஜெஸ்ரின் (யாழ்ப்பாணம்).

### பாடலாக்கம்

முதலாமிடம் நடராசா இராமநாதன் (புதுக்குடியிருப்பு), இரண்டாமிடம் யோகராசா கோபிநாத் (கண்டாவளை), மூன்றாமிடம் இராசசிங்கம் சிறிதரன் (கரைச்சி), நான்காமிடம் யோகேந்திரம் தாட்சாயினி (புதுக்குடியிருப்பு), ஐந்தாமிடம் கிருஸ்ணபிள்ளை தவராசா (கரைதுறைப்பற்று).

### கவிதையாக்கம்

முதலாமிடம் இராசசிங்கம் சிறிதரன் (கரைச்சி), இரண்டாமிடம் அந்தோனிப்பிள்ளை மங்களராசா (கரைச்சி), மூன்றாமிடம் க.பாலன் (கரவெட்டி), நான்காமிடம் செபஸ்தியான் மாசிலாமணி (நானாட்டான்), ஐந்தாமிடம் சவேரியன் பற்றிக்லெம்பேட் (மன்னார்).

### நாடகவாக்கம்

முதலாமிடம் க.பாலன் (கரவெட்டி), இரண்டாமிடம் ஜெயம் கிறிஸ்ரிராசா (புதுக்குடியிருப்பு), மூன்றாமிடம் ஜோர்ச் ஜெஸ்ரின் (யாழ்ப்பாணம்), நான்காமிடம் சிவரூபன் சர்வேஸ்வரி (தெல்லிப்பழை), ஐந்தாமிடம் வேலாயுதபிள்ளை சிவக்குமாரன் (நல்லூர்).

### ஓவியம்

முதலாமிடம் லைனஸ் அபிஷ்கிளைன் (யாழ்ப்பாணம்), இரண்டாமிடம் மேரி நிரூபா பாவிலு (மன்னார்), மூன்றாமிடம் மாஹிர்-பாத்திமா மாஹிரா (பூநகரி), நான்காமிடம் ஜெகசீலன் சனார்த்தனன் (வேலணை), ஐந்தாமிடம் யோண்சன் சுபிக்சன் (முசலி).

### புகைப்படம்

முதலாமிடம் ஜெயம் கிறிஸ்ரிராசா (புதுக்குடியிருப்பு), இரண்டாமிடம் ஜோர்ஜ் ஜெவின் மஜித்ரா (யாழ்ப்பாணம்), மூன்றாமிடம் ஜோர்ச் ஜெஸ்ரின் (யாழ்ப்பாணம்), நான்காமிடம் யோண்சன் சுபிக்சன் (முசலி).

### சிங்கள பிரிவு-பாடலாக்கம்

முதலாமிடம் டபிள்யூ.பி.எல்.ஜி. செனவிரத்ன- (வவுனியா தெற்கு), இரண்டாமிடம் கே.சந்திரவத்தே- (வவுனியா தெற்கு), மூன்றாமிடம் சுசந்த சந்னி பியதாஸ- (வவுனியா தெற்கு).

### சிறுகதை

முதலாமிடம் கே.கீதாஞ்சலி- (வவுனியா தெற்கு), இரண்டாமிடம் பி.திலகரத்னே (வவுனியா தெற்கு).

### கவிதை

முதலாமிடம் டபிள்யூ.பி.எல்.ஜி. செனவிரத்ன- (வவுனியா தெற்கு), இரண்டாமிடம் டி.ஜே.ஏ.பிரடினந்து (வவுனியா தெற்கு), மூன்றாமிடம் சுசந்த சந்னி பியதாஸ (வவுனியா தெற்கு).

### குழுநடனம்

முதலாமிடம் இரண்டு ஜானு அரங்காற்றுகையகம் (கரைச்சி), நுண்கலைக் கல்லூரி முள்ளியவளை (கரைதுறைப்பற்று), மூன்றாமிடம் சிறி அகிலாண்டேஸ்வரி அருளகம் (வவுனியா).

### தனிநடனம்

முதலாமிடம் செ.ஆரணி (கோப்பாய்), இரண்டாமிடம் தேவிகா இளங்கோ (சங்காணை), மூன்றாமிடம் இருவர் அபிராமி திவாகரவர்மா (கோப்பாய்), தேவராசா கேதீஸ்வரன் (மன்னார்).

### தனி நடிப்பு

முதலாமிடம் அ.அன்றுயூலியஸ் (யாழ்ப்பாணம்), இரண்டாமிடம் பொ.உமாகாந்தன் (கரைச்சி), மூன்றாமிடம் கே.கதீஸ் (நல்லூர்).

### வில்லுப்பாட்டு

முதலாமிடம் நாராயணா கலை மன்றம் (நல்லூர்), இரண்டாமிடம் முல்லைக்கிளி கலாமன்றம் (புதுக்குடியிருப்பு), மூன்றாமிடம் குபேரகா கலைமன்றம் (உடுவில்).

### நாடகம்

முதலாமிடம் சிறி அகிலாண்டேஸ்வரி அருளகம் (வவுனியா), இரண்டாமிடம் தம்பாட்டி காந்திஜீ நாடக மன்றம் (ஊர்காவற்றுறை), மூன்றாமிடம் கலாலயம்-கிளிநொச்சி (கரைச்சி).

### நாட்டிய நாடகம்

முதலாமிடம் இரண்டு பொன்னாலை சந்திர கலாலயம் (சங்காணை), நிருத்திய நிவேதன நுண்கலைக்கல்லூரி (வவுனியா).

## இளம் கலைஞர் ஊக்குவிப்பு பரிசு-2018

நவரத்தினம் மயூரரூபன்-சிறுகதை (கரவெட்டி), தருமராசா அஜந்தகுமார்-கவிதை (கரவெட்டி), ஜெயம் கிறிஸ்ரிராசா (புதுக்குடியிருப்பு), மகேந்திரன் லோகேந்திரன்-வாத்தியக்கலை (சங்கானை), கந்தப்பு ஜெயந்தன்-இசை (வவுனியா), மனுவேல் மக்ஸ்வெல் றொபின்சன்-நாடகம் (சண்டிலிப்பாய்), கோபிநாத் தேவிப்பிரியா-நடனம் (கண்டாவளை), யேசுதாசன் சாரா நீரஜா-ஓவியம் (மாந்தை மேற்கு), மோசஸ் ஷாந்தன் சத்தியகீர்த்தி-ஊடகம் (நல்லூர்), நாகப்பு தவநாகம்னேஸ்-கைவினைக்கலை (சங்கானை), அன்ரனி மரியநிரோஜினி-கூத்து (ஊர்காவற்றுறை), இரத்தினசிங்கம் ஜெயக்காந்தன்-இசைநாடகம் (யாழ்ப்பாணம்), ஏழுமலைப்பிள்ளை மூவேந்தன்-குறும்படம் (கரைச்சி). (இ)



கரவெட்டி ஸ்ரீநாரதா வித்தியாலயத்தின் பொன் விழா நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற போது விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுச்சாமி இராதாகிருஷ்ணன், வடமாகாண கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் ஆகியோர் மங்கல விளக்கு ஏற்றுவதையும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:- பொ.சோபிகா, மகாலிங்கம்)

# பயம் இன்றி பயிர் செய்வோம் யாழில் சுற்றறிக்கை வெளியீடு





(யாழ்ப்பாணம்)

பயம் இன்றி பயிர் செய்வோம் என்னும் தொனிப் பொருளில் 2018/2019 ஆண்டுக்கான தமிழ் மொழி மூலமான காலபோக உரமானியம் வழங்கும் சுற்றறிக்கை செயற்றிட்டம் நேற்று முன்தினம் விவசாய பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் உரையாற்றிய விவசாய பிரதி அமைச்சர் சிறந்த விவசாய துறைசார் வல்லுநர்களின் கடின உழைப்போடு குறுகிய காலப் பரப்பினுள் பரந்தளவிலான வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.அதன் பிரதிபலனாகவே காலபோக செய்கையை கருத்தில் கொண்டு இம்முறை விவசாய செய்கையாளர்களுக்கு உரிய தருணத்தில் உரமானியங்கள் வழங்குவதற்கு சிறந்த தமிழ் மொழிமூலமான சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டிருப்பதாகவும்,பயமின்றிய விவசாய செய்கைக்கு காப்புறுதிகள் வழங்கப்பட்டு, கொள்வனவுகள் அதிகரிக்கப்பட்டு உற்பத்திகளும் அதிகரிக்க நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

விவசாய உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக 35 ஆயிரம் மில்லியன் ரூபாய் அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக் காட்டியிருந்தார். சிறிய விவசாயபரப்பினுள் உற்பத்திகளை அதிகரிக்க சிறந்த விளைதிறனான விதை களை விவசாய அமைச்சு அறிமுகம் செய்துள்ளதாக வும், முன்னெப்பொழுதும் இல்லாதவாறு பல்வேறு சிறப்புக்கள் விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டு ஊக்குவித்திருப்பதாகவும் தெரிவித்தார்.

மரபு ரீதியிலான விவசாய நடவடிக்கைகளை இந்த நூற்றாண்டிலும் காலாதிகாலமாக முன்னெடுத்தும் வருகின்றனர். அவற்றோடு நவீன விவசாய கொள்கை திட்டங்களையும்,நவீன விவசாய உற்பத்திகளின் ஊடாக சிறந்த விவசாய வலையமைப்பை உருவாக்கலாம் எனவும் தெரிவித்தார்.

வரும் காலங்களில் காலபோக செய்கை ஆரம்பிக்க உள்ள நிலையில் விவசாயிகளுடனான இணைப்பு, செய்கைகளை ஊக்குவிப்பதோடு சிறந்த தகவல் தொடர்பாடுகளை ஏற்படுத்தும் எனவும் தெரிவித்தார்.

இந்த சுற்றறிக்கையில் உர வகைகளை அளவுடன் உபயோகப்படுத்த குறிப்பிடப்பட்டுள்ளது.விவசாய அடையாள அட்டைகள் வழங்க நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதுடன். பதிவு செய்யப்படாத விவசாயிகள் பதிவு செய்யப்பட வேண்டும் எனவும் எதிர்காலத்தில் விவசாயிகள் சிறப்பான வளங்களைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. ஆவணங்கள் இல்லாது பயிர்ச் செய்கைகள் மேற் கொள்ளும் பிரதேச பகுதிகளை கமநல சேவை நிலையங்கள் உறுதிப்படுத் துவதன் ஊடாக உரமானியங் களை பெற்றுக் கொள்ளவும் சுற்றறிக்கை யில் உள்வாங்கப்பட்டுள்ளது. (இ-7)


## கடல்வாழ் உயிரினக் குஞ்சுகள் வழங்குவதற்கான கேள்விப்பத்திரம் கோரல்

கடல் வாழ் உயிரினக் குஞ்சுகள் (மீன், கடலட்டை) உணவுகள் வழங்குவதற்கான கேள்விப் பத்திரம் பூநகரி க.தொ.கூ.ச.சமாசத்தால் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை 02.10.2018 இற்கு முன்பாக பொது முகாமையாளர் க.தொ.கூ.ச. சமாசம், ஜெயபுரம், பூநகரி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேலதிக தொடர்புகளுக்கு
077 465 9877
077 463 1200

சி.கிருபாகரன்,
பொது முகாமையாளர்
க.தொ.கூ.ச.சமாசம்,
ஜெயபுரம், பூநகரி.

(5832)



## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம் மாதகல்

### ஆதனப்பெயர் மாற்ற அறிவித்தல்




வட்டாரம்:- 14
உத்தேச ஆதன இல:- வெற்றிலக்கம் 9/2
வீதி:- கோடாலிக்காட்டு ஒழுங்கை
கிராம சேவையாளர் பிரிவு:-J/150

எமது இடாப்பில் வட்டாரம் 14, கோடாலிக்காட்டு ஒழுங்கை, ஆதன இல:- 9/2 இல் சொந்தக்காரர் உடேரா சின்னத்துரை (மாஸ்ரர்) என்னும் பெயரில் இவ் ஆதனம் அமைந்துள்ளது. உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் மேற்கு பகுதி தற்போது வலிகாமம் தென்மேற்கு பகுதி பண்டத்தரிப்பு கோவிற்பற்று சிறுவிளான் இறை "அறுகம்புலம்" எனும் பெயருள்ள நிலப்பரப்பு இலா 07 குளி 09 இல் பிரித்து விடப்பட்ட நிலபர.இலா01 உம் கொண்ட இவ்வாதனம் இளவாலை தாமோதரம்பிள்ளை சின்னத்தரை கைம்பெண் சிவநாயகியும் தாமோதரம் பிள்ளை சின்னத்தரை மகள் பவதாரணியும் ஆகியவர்களால் மாதகல் சகாய புரத்தைச் சேர்ந்த பத்திநாதர் ஜெனோசியஸ் றீகனுக்கும் பெண் கலாவுக்கும் அறுதி உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் வே.த.கதிர்காமநாதன் அவர்கள் முகதாவில் நிறைவேறிய 6510 ஆம் இலக்க 02.12.2004 ஆம் திகதிய உறுதி மூலம் வழங்கியதால் தமக்கு சொந்தம் எனவும் ஈட்டு உறுதி இல.859 திகதி 27.03.2016 மூலம் 1971 ஜனவரி மாதம் 31 ஆம் திகதி ஜே/1550 ஆம் இலக்கத்தில் பதிவுபெற்ற வரையறுக்கப்பட்ட பண்டத்தரிப்பு பரிஸ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஈட்டுறுதி எழுதிக் கொடுக்கப்பட்டு ஈடு இரத்துச் செய்யப்பட்டு R-27/117 இல் 26.09.2018 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ளதால் தமக்கு சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது பண்டத்தரிப்பு கிராம உப அலுவலக (மாதகல்) ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர். நில அளவையாளர் திரு A.சத்தியாப்பிள்ளை அவர்களால் வரையப்பட்ட 2909 ஆம் இலக்க 04.07.2018 ஆம் திகதிய நில அளவைப் படத்தின் பிரகாரம் நிலப்பரப்பு குளி 17.36 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரித்த திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது பத்திநாதர் ஜெனோசியஸ் றீகனுக்கும் பெண் கலாவுக்கும் எனும் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் இந்த ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத் தருகிறேன். அத்துடன் இவ் ஆதனத்தின் ஆரம்ப உறுதி வெளிப்படுத்தலாக காணப்படுவதால் இவ் விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படுகிறது.

அ.ஜெபநேசன்
தவிசாளர்
வலி.தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

(5836)


## காந்தி ஜெயந்தி பேச்சுப் போட்டி பரிசளிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை காந்தி சேவா மகாத்மா காந்தியடிகளின் 149 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு வட மாகாணப் பாடசாலை மாணவர்கள் மத்தியில் பேச்சுப் போட்டியின் பரிசளிப்பு வைபவம் எதிர்வரும் 02.10. 2018 செவ் வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அகில இலங்கை காந்தி சேவா சங்கம், யாழ். இந்திய துணைத் தூதரகம் மற்றும் சென். ஜோன்ஸ் கல்லூரிச் சமூகம் ஆகி யன இணைந்து நடத்தும் சர்வதேச அகிம்சை தின விழாவில் இடம் பெறவுள்ளது.

இப்போட்டியில் பங்கு பற்றிய அனைத்து மாணவர்க ளுக்கும் பரிசில் மற்றும் சான்றிதழ் என்பன வழங்கப்படவிருப்பதால் சம்பந்தப்பட்ட அனைத்து மாணவர்களையும் பாடசாலைச் சீருடையில் குறித்த நேரத்திற்கு சமூகம்தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (இ)


## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச்சேர்ந்த 1974 இல் பிறந்த 9 கிரகபாவம் மீன இலக்கினமும் பூர நட்சத்திரமும் உடைய மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு
076 930 0727

(5839)



## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: சூரிசெவ் 10 இல்<br>உயரம்: 6'2"<br>தகைமை/தொழில்:கணக்காளர்/ லண்டன் PR<br>தொ.இ: B/8901 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 17<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BSc/வங்கியாளர்<br>தொ.இ: G/8902 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 21<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:NCT/தனியார் தொழில்<br>தொ.இ: B/8903 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 4<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/8904 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 11செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:O/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/8905 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 29 செவ் 7 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/8907 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 52 செவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:B.Ed/ஆசிரியர்<br>தொ.இ: B/8806 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 37<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்:சித்தவைத்தியர்<br>தொ.இ: G/8908 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# நில அபகரிப்பு இல்லாமல் மகாவலி நீர் வடக்கிற்கு வரவேண்டும்

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் தவநாதன் சுட்டிக்காட்டு



(கிளிநொச்சி)

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி அதிகாரப் பகிர்வை வழங்க வேண்டும், வடக்கு மாகாணத்துக்கான முழுமையான தேவை பகுப்பாய்வு அறிக்கை தயாரிக்கப்படல் வேண்டும், நில அபகரிப்பு இல்லாமல் மகாவலி நீர் வடக்கிற்கு வர வேண்டும், இனங்களுக்கிடையே நல்லிணக்கம் ஏற்படும் வரை வடக்கு மாகாணத்திற்கு வெளியே உள்ள மக்களை திட்டமிட்டு குடியேற்றுவதை நிறுத்த வேண்டும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் வைத்தியநாதன் தவநாதன் ஜப்பானிய தூதரக அரசியல் விவகாரப் பிரிவின் ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை அதிகாரியிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜப்பானிய தூதரக அரசியல் விவகாரப் பிரிவின் ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை அதிகாரியான யுனாமயெகாவா அண்மையில் மாகாணசபை உறுப்பினர் வை.தவநாதனை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தில் சந்தித்தார்.

இந்த சந்திப்பின் போதே மாகாணசபை உறுப்பினர் தவநாதன் குறித்த விடயங்களை சுட்டிக்காட்டினார்.

சமகால சமூக பொருளாதார அரசியல் விடயங்கள் தொடர்பான பல விடயங்களையும் குறிப்பாக அரசினால் ஏற்படுத்தப்பட்ட காணாமல் போனோர் அலுவலகம், நட்டஈட்டு பணியகம், நல்லிணக்கப்பொறிமுறை மற்றும் புதிய அரசியலமைப்பு முயற்சிகள் போன்றவற்றின் முன்னேற்றங்கள் தொடர்பாகவும் யுனா மயெகாவா கேட்டறிந்து கொண்டார். (2)

# கிராமிய சந்தைகள் அமைப்பதற்கு இடம் தெரிவாகி வேலைகள் ஆரம்பம்

## கரைச்சி பிரதேச சபை தவிசாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்ட ஆனையிறவு, ஊற்றுப்புலம்,சாந்தபுரம் ஆகிய பகுதிகளில் புதிய கிராமிய சந்தைகள் அமைக்கப்படவுள்ளதாக கரைச்சிப் பிரதேச சபை தவிசாளர் தெரிவித்துள்ளார்.

ஆனையிறவு, ஊற்றுப்புலம், சாந்தபுரம் ஆகிய பிரதேசங்களில் சந்தை வசதிகள் இன்மையால் மேற்படி பிரதேசங்களில் வாழும் மக்கள் தமக்கான உற்பத்தி பொருட்களைச் சந்தைப்படுத்துவதிலும் தமக்கான பொருட்களைப் பெற்றுக் கொள்வதிலும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் மேற்படி பிரதேசங்களில் புதிய கிராமிய சந்தைகளை அமைப்பதற்கான வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவற்றுக்கான இடங்கள் தெரிவு செய்யப்பட்டு அவை துப்புரவு செய்யப்பட்டு வேலைகள் நடைபெற்று வருவதாக கரைச்சிப் பிரதேச சபை தவிசாளர் தெரிவித்துள்ளார். (2-315)

# மைற்றா தடுப்பு வேலைத்திட்டங்கள்

# தென்னை பயிர்ச்செய்கையாளர்களுக்கு மைற்றா பக்கெற்றுக்கள் வழங்கல்

(கிளிநொச்சி)



தென்னை பயிர்ச்செய்கை சபையினால் கடந்த மாதங்களில் கிளிநொச்சி கோணாவில் பிரதேசத்தில் பரவலாக மைற்றா ஒழிப்பு விழிப்புணர்வு கூட்டங்கள் நடைபெற்றது.

கடைசி தினமான கடந்த 26ஆம் திகதி பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தலைமையில் கோணாவில் பிரதேசத்தின் 5 கிராம தென்னை பயிர்ச்செய்கையாளர்களுக்கு ஆயிரம் மைற்றா பக்கெற்றுகள் வழங்கப்பட்டன.



இந் நிகழ்வில் கருத்து தெரிவித்த பிராந்திய முகாமையாளர் மைற்றாவை ஒழிப்பதற்கு அனைத்து மக்களும் ஒன்றிணைந்து செயற்படுவது அவசியம்.

மைற்றா பக்கெற் ஒன்றின் உற்பத்தி செலவு 35 ரூபாவாக இருந்த போதும் தென்னை பயிர்ச்செய்கை சபையினால் பயனாளிகளுக்கு மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

கோணாவில் பிரதேசத்தில் உள்ள அனைவரும் மைற்றா பக்கெற்றுகளை உரிய முறையில் பிரயோகிக்கும் பட்சத்தில் மைற்றாத் தாக்கத்தை கட்டுப்படுத்த முடியும் என அவர் வலியுறுத்தினார். (2)

# அரசியல் கைதிகளின் நிலைமை மோசம்; அநீதி இழைக்கப்பட்டுள்ளது

## சிவமோகன் எம்.பி தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

அநுராதபுரம் சிறைச்சாலையில் கடந்த 15 நாட்களாக உணவு தவிர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளும் தமிழ் அரசியல் கைதிகளுக்கு அரசாங்கத்தினால் அப்பட்டமான அநீதி இழைக்கபட்டுள்ளதாக தமிழத்தேசிய கூட்டமைப்பு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் சி. சிவமோகன் தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் சிறைச்சாலைக்கு நேற்று முன்தினம் நேரடியாகச் சென்று அங்கு கைதிகளின் நிலைமைகளை கேட்டறிந்ததுடன் அவர்களின் நிலைமைகளையும் பார்வையிட்ட பின்னர் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் கடந்த 15 நாட்களாக அநுராதபுரம் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டு வருகின்றார்கள். அவர்களின் நிலைமைகளை நேரில் சென்று பார்வையிட்டு தேவைகளையும் கேட்டறிந்தேன்.

மிகவும் கவலைக்கிடமான விடயம் என்னவென்றால் உணவு இன்றி தண்ணீர் மற்றும் ஜீவனியை மாத்திரமே அருந்தி தமது போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறு மேலும் நாட்கள் செல்லுமானால் நிலைமை மேலும் மோசமடையும்.

சிறைகளிலுள்ளவர்களுக்கு ஆகக்கூடிய தண்டனை 10 வருடம் அரசாங்கமானது இழுத்தடிப்பு செய்து வருகின்றார்கள். இங்கு நடைபெறுவது அப்பட்டமான அநீதி 80முதல் 100இற்கும் இடைப்பட்ட கைதிகள் குறுகிய காலத்தில் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட் வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-281)




# வவுனியா நகரில் பொருத்தப்பட்டுள்ள மின்குமிழ்கள் ஒளிர்வதில்லை

## பொதுமக்கள் குற்றச்சாட்டு

(குருமன்காடு)

வவுனியா நகர வீதிகளில் பொருத்தப்பட்டுள்ள மின்குமிழ்கள் இரவு வேளைகளில் ஒளிர்வதில்லை. இதனால் இரவு வேளைகளில் அச்சத்துடன் பயணம் மேற்கொள்ள வேண்டியுள்ளதாகவும், திருடர்களின் அச்சுறுத்தல்களும் ஏற்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக பழைய பேருந்து நிலையத்தினை அண்டிய பகுதிகள் இரவு வேளைகளில் இருளில் மூழ்கியுள்ளதை காணக்கூடியதாக உள்ளது. தற்போது மழையுடனான கால நிலை காரணமாக மாலை 6 மணிக்கு இருள் சூழ்ந்து கொள்கின்றது என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இரவு வேளைகளில்வியாபார நிலையங்களிலிருந்து வேலை முடிந்து செல்லும் இளைஞர்கள், யுவதிகள், வியாபார நிலைய உரிமையாளர்கள் எனப்பலருக்கு நகரில் பொருத்தப்பட்ட மின் விளக்குகள் இரவு வேளைகளில் ஒளிர்வதில்லை எனவும் இதனால் இரவில் செல்வதில் அச்சுறுத்தல் தமக்கு ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளனர்.

இவ்வருடம் முற்பகுதியில் வீதிகளில் பொருத்தப்பட்ட மின் விளக்குகள் தற்போது காலாவதியாகியுள்ளதுடன், அதனை ஒளிர வைக்க எந்த நடவடிக்கையும் நகர சபையினால் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் இரவு வேளைகளில் செல்லும் பயணிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர். புகையிரதத்தில் தூர இடங்களிலிருந்து வந்திறங்கும் பயணிகளும் வெளிச்சமின்றி அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர். (2-250)

# நன்கொடையாக வழங்கிய காணியில் 7 மில்.ரூபா செலவில் கட்டடங்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சி பச்சிலைப் பள்ளி பிரதேச சபையின் முள்ளிப்பற்று உப அலுவலகம், ஆயுள்வேத வைத்தியசாலை, நூலகம் என்பவற்றுக்கான புதிய கட்டடம் ஏழு மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகின்றன.

பச்சிலைப்பள்ளிப்பிரதேச் சபைக்குட்பட்ட உப அலுவலகமான முள்ளிப்பற்று உப அலுவலகம் அதனுடன் இணைந்த ஆயுள்வேத வைத்திய சாலை, நூலகம் என்பன தற்போது அமைக்கப்பட்டு வருகின்றன.

தனியார் ஒருவர் நன்கொடையாக வழங்கிய காணியில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதி மற்றும் பிரதேச சபை நிதி என்பவற்றின் மூலம் சுமார் ஏழு மில்லியன் ரூபா செலவில் இதற்கான கட்டுமானப்பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இப்பிரதேசத்திற்கான உபஅலுவலகம் கடந்த காலங்களில் பல்வேறு சிரமங்களின் மத்தியில் இயங்கி வந்துள்ளதுடன், இங்குள்ள மக்கள் தமக்கான ஆயுள்வேத சிகிச்சைகளை பெறுவதற்கும் நூலக வசதிகளைப் பெறுவதற்கும் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வந்த நிலையில் மக்களின் தேவை கருதி கட்டடங்கள் தற்போது அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-315)

# இலவச புற்றுநோய் விழிப்புணர்வு மற்றும் கண்டறிதல் முகாம்

## கிளிநொச்சியில் நாளை நடைபெறும்

(கிளிநொச்சி)

உதவும் கரங்கள் ஊடாக **CANE** அமைப்பு யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடம் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை, **Run to Beat Cancer in Sri Lanka Organization UK** ஆகியோருடன் இணைந்து மாபெரும் இலவசப் புற்றுநோய் விழிப்புணர்வு மற்றும் கண்டறிதல் முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கிளி/பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தின் சுப்பையா நினைவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களின் நேரடியான உரைகள், மருத்துவக் குழுவின் புற்று நோய் சம்பந்தப்பட்ட படத் தொகுப்புக்கள் ஆரம்பத்திலேயே கண்டறியும் வழிமுறைகள் மற்றும் வராமல் தடுக்கும் வழிமுறைகள் ஆகிய விபரங்களோடும் நீங்கள் விரும்பும் பட்சத்தில் இலவசமாக உங்களுக்கு நோய்த்தாக்கம் இருக்கின்றதா? என பரிசோதனையும் செய்யப்படும்.

மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் 'உதவும் உறவுகள்' தலைமை அலுவலகம் இல.37, ஏ-9வீதி, பரந்தன், கிளிநொச்சி எனும் முகவரியிலோ அல்லது 021 228 0040, 077 645 3302 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2)

# அரசியல் கைதிகள் விடுவிப்பை வலியுறுத்தி கிளிநொச்சியில் போராட்டம்

(பரந்தன்)

நீண்டகாலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கிளிநொச்சியில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப் படவுள்ளது.

சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை காலை ஒன்பது மணிக்கு கிளிநொச்சி டிப்போச் சந்திக் கருகில் போராட்டம் இடம் பெறவுள்ளது என சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் தலைவர் மு. சந்திரகுமார் அறிவித்துள்ளார்.

அத்தோடு குறித்த போராட்டத்தில் அரசியல் வேறுபாடுகளை கடந்து அனைவரையும் பங்குகொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (2-312)

## அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி

# வவுனியா பண்டாரவன்னியன் சதுக்கம் முன்பாக முதலாம் திகதி சத்தியாக்கிரகப் போராட்டம்

(குருமன்காடு)

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வவுனியாவில் எதிர்வரும் முதலாம் திகதி மாபெரும் சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது என வவுனியா மாவட்ட பொது அமைப்புக்களின் ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.

கடந்த 22 ஆம் திகதி நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் பின்னர் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக அரசாங்கம் உரிய பதிலை வழங்காத நிலையில் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் அரசியல் கைதிகள் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் வவுனியா மாவட்ட பொது அமைப்புக்கள் நேற்று முன்தினம் அவசரமாகக் கூடி அரசியல் கைதிகளுக்கான அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பாக கலந்துரையாடியிருந்தனர்.

பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் என பலரும் இதன்போது கலந்து கொண்டு எதிர்வரும் முதலாம் திகதி காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை வவுனியா பண்டாரவன்னியன் சதுக்கத்திற்கு முன்பாக மாபெரும் போராட்டம் ஒன்றை முன்னெடுக்க தீர்மானித்துள்ளனர்.

இதன் பின்னரும் தீர்க்கமான முடிவு கிடைக்காத பட்சத்தில் வவுனியா மாவட்டத்தில் தொடர்ச்சியான போராட்டத்தை முன்னெடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.(2-250)




## வெங்காய வெடியை உட்கொண்ட யானை ஆபத்தான நிலையில்



(மன்னார்)

மன்னார் மடு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பரசன்குளம் பகுதியில் மக்களுடைய விவசாய காணியில் காட்டு யானை ஒன்று நோய் வாய்ப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தினுள் தொடர்ச்சியாக காட்டுயானை ஊருக்குள் வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் வருகை தந்த வட பிராந்திய வனஜீவராசிகள் திணைக்கள வைத்தியர் எஸ்.கிரிதரன் யானைக்கு மருத்துவம் செய்தார்.


இதன்போது யானை வெங்காய வெடியை உட்கொண்டதால்வெடி வெடித்து யானையின் வாய் உட்பகுதி பாதிக்கப்பட்டதனால் உணவு உட்கொள்ள முடியாமல் போனதால் நோய் வாய்ப்பட்டுள்ளதாக வைத்தியர் குறிப்பிட்டார்.

மேலும் யானையின் நிலை கவலைக்கிடமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# தொழில் செய்வதற்கு இடம் போதாது பாப்பாமோட்டை மீனவர்கள் கவனயீர்ப்பு

## மன்னார் மாவட்ட அரச அதிபரிடம் மகஜர் கையளிப்பு







(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் மாந்தை பிரதேச சபைக் குட்பட்ட பாப்பாமோட்டை பிரதேசத்தைச் சேர்ந்த மீனவர்கள் மாந்தை மேற்கு பிரதேச செயலகத்திற்கு முன்பாகவும் மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன்பாகவும் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

இந்த கவனயீர்ப்புப் போராட்டம் நேற்றுக் காலை 9 மணியளவில் ஆரம்பமாகி நடைபெற்றது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

யுத்தகாலத்தில் மக்கள் இடம்பெயர்ந்தபோது மன்னார் தோட்டவெளி கிராமத்து மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்திற் கொண்டு மாந்தை மேற்கு பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்ட பாப்பாமோட்டை களப்புப் பகுதியில் தற்காலிகமாக மீன்பிடியில் ஈடுபட அப்போதைய அரசாங்க அதிபர் மற்றும் பிரதேச செயலாளர் அனுமதி வழங்கியிருந்தனர். நாட்டில் யுத்தம் முடிவடைந்த பின்னர் தோட்ட வெளி மக்களுக்கு இரண்டு இடங்களில் மீன்பிடியில் ஈடுபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தற்காலிகமாக அனுமதி வழங்கப்பட்ட பாப்பாமோட்டைப் பகுதியில் நிரந்தரமாக உரிமை கோரி தோட்டவெளி மீனவர்கள் செயற்படுகின்றனர்.

இதனால் பாப்பாமோட்டையை பூர்வீகமாக கொண்ட தங்கள் பகுதி மீனவர்களின் வாழ்வாதாரம் வெகுவாக பாதிக்கப்படுவதாகவும் பாப்பாமோட்டைப் பகுதியில் இருந்து யுத்தத்தின் காரணமாக இந்தியாவிற்குச் சென்ற அதிகமான மக்கள் இந்தியாவிலிருந்து ஊர் திரும்புவதற்கு ஆயத்தமாக இருக்கின்றார்கள்.

அவர்கள் வரும்பட்சத்தில் தொழில் செய்ய இடம் போதாது. எனவே இந்த பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வை தரக்கோரி மாந்தை பாப்பாமோட்டை பிரதேசத்தைச் சேர்ந்த மீனவர்கள் நேற்று மாந்தை மேற்கு பிரதேச செயலகத்திற்கு முன்பாக காலை 9 மணியளவிலும் மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக முற்பகல் 11 மணியளவிலும் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டதுடன் குறித்த பிரச்சினைக்கு உடனடியாக தீர்வைப் பெற்றுத்தரக் கோரி மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளனர்.(2)

## மழை காலத்திற்கு முன் வீதிகள் சீர்செய்யப்படும்

### பூநகரி பிரதேச சபை தவிசாளர்

(பூநகரி)

பூநகரிப் பிரதேசத்தில் உள்ள சகல கிராமத்தின் பிரதேசசபைக்குச் சொந்தமான உள்வீதிகளையும் தமது கனரக வாகனங்களைப் பயன்படுத்தி மழை காலத்திற்கு முன்பதாக சீர் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கான திருத்த வேலைகளை ஆரம்பித்துள்ளதாகவும் பூநகரி பிரதேச சபைத்தவிசாளர் அருணாசலம் ஐயம்பிள்ளை தெரிவித்துள்ளார். முன்னுரிமை அடிப் படையில் நீண்ட நாட்களாக புனரமைக்கப்படாத வீதிகளின் வேலைகளையும் ஆரம்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (2-84)

## பொது நூலக வாசகர் வட்டமும் நூலக ஆலோசனைக்குழுத் தெரிவும்

(பூநகரி)

பூநகரி பிரதேச சபையின் பொது நூலக வாசகர் வட்டமும் நூலக ஆலோசனைக் குழுத் தெரிவும் பூநகரி பிரதேச சபை மகாநாட்டு மண்டபத்தில் சபைத் தவிசாளர் அருணாசலம் ஐயம்பிள்ளை தலைமையில் அண்மையில் இடம் பெற்றது.

இக்கூட்டத்தில் உள்ளூராட்சித் திணைக்கள சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் ரி.தனபாலசிங்கம், பிரதேச சபைச் செயலாளர் மு.இராசகோபால் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

இதன்போது நூலக ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் தெரிவு இடம்பெற்றது.

இதற்கமைவாக தலைவராக அ.ஐயம்பிள்ளை, உபதலைவராக மு.இராசகோபால், செயலாளராக கா.தர்சினி ஆகியோர் தெரிவாகினர்.

நூலக ஆலோசனைக் குழு உறுப்பினர்களாக நல்லூர் ம.வித்தியாலய அதிபர் இ.சூரியகுமாரி, ஓய்வுநிலை அதிபர் பொன்.தில்லைநாதன், ஓய்வு நிலை தொழில் நுட்ப அலுவலர் ந.சிவபால சுந்தரம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து வாசகர் வட்டத் தெரிவும் நடைபெற்றது. (2-84)

# 18 கமக்கார அமைப்புகளுக்கான காலபோக விதைப்பு அட்டவணை

## பூநகரி கமநலசேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவிப்பு

(பூநகரி)

பூநகரி கமநல சேவை நிலைய எல்லைக்குட்பட்ட 18 கமக்கார அமைப்புக ளுக்குகான காலபோக நெற் செய்கைக்குரிய விவசாயக் கூட்டங்கள் அண்மையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் விவசாயகளின் ஆலோசனைக்கமைவாக நெல் விதைப்புக்கான ஆரம்பத் திகதி, கால் நடைகளைக் கட்டுப்படுத்தல் தொடர்பான கால அட்டவணை பூநகரி கமநலசேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் மு.இருகுநாதனினால் அறிவிக்கப்பட்டது.

இதன்படி எதிர்வரும் 21 ஆம் திகதி காலபோக ஆரம்ப விதைப்புத் திகதி எனவும் எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் கால் நடைகளைக் கட்டிப் பராமரிக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டது.

காலபோக விதைப்பில் 3, 3 1/2 மாத நெல்லுக்கான இறுதி விதைப்புத் திகதி எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதி எனத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் நான்கு மாத நெல்விதைப்புக்கான இறுதித்திகதி எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டது.

நெல் அறுவடை இறுதித் திகதி 15.02.2019 எனவும் கால் நடைகளுக்கான கட்டுப்பாடு தளர்த்தல் திகதி 31.03.2019 எனவும் அறிவிக்கப்பட்டது.

இதேவேளை ஐந்து கமக்கார அமைப்புக்களிலில் கட்டாக்காலி கால்நடைகளைப் பிடிப்பதற்காக பிடிகாரர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் எனத் தெரிவித்தார்.

இதேவேளை ஏனைய கமக்கார அமைப்புக்களும் கட்டாக்காலியாக விடப்படும் கால் நடைகளைப் பிடிப்பதற்குரிய பிடிகாரர்களை நியமிக்க வேண்டுமென வும் மக்கள் கோரிக்கை விடுத்தனர். (2-84)

## முதியோர் தின விழாவும் மதிப்பளித்தல் நிகழ்வும்

(கண்டாவளை)

கிளிநொச்சி செல்வாநகர் முதியோர்தின பெருவிழாவும் முதியோர் மதிப்பளித்தல் நிகழ்வும் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 2 ஆம் திகதி செவ்வாய்கிழமை காலை 8.30 மணிக்கு செல்வாநகர் முதியோர் சங்க ஆலோசகர் முனியாண்டி சிவபாலன் தலைமையில் செல்வாநகர் சிறுவர் கழக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு மக்கள் பிரதிநிதிகள், அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள், முதியோர்களின் தொடர் அனுசரணையாளர்கள், ஆதரவாளர்கள், மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்கள் என முதியோர் சங்கதலைவர் ச.சண்முகராசி தெரிவித்துள்ளார்கள். (2-315)

## போரினால் சேதமடைந்த ஆலயங்களை புனரமைப்பதற்கு நிதியொதுக்கீடு

(பூநகரி)

பூநகரி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட போரினால் சேதமடைந்த எட்டு ஆலயங்களைப் புனரமைப்பதற்காக இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில்13 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அந்தந்த ஆலய பரிபாலன சபையினருக்கு காசோலைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பூநகரிப் பிரதேச இந்து கலாசார அலுவலர்கள் உத்தியோகத்தரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூநகரி கௌதாரி முனையில் அமைந்துள்ள சோழர் காலத்து மண்ணித்தலை சிவன் ஆலயத்தின் புனரமைப்பு வேலைகளுக்காக 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-84)

# இன்று புரட்டாதி சனி 02

உளவியல் ரீதியாகவும் மனோதத்துவ ரீதியாகவும் மனிதனின் மனதுக்கு பரிகாரங்கள் அவசியாகவுள்ளது. ஜோதிடர்கள் சொல்லாவிட்டாலும் இவராகவே கேட்டு அறிகிறார். பிறகு அதனை எப்பாடு பட்டாவது செய்து மனதில் சமாதானம் அடைகின்றார்.

புராணங்கள் மற்றும் ஸ்தல வரலாற்று செய்திகளில் உள்ளவற்றை செய்யலாம். ஆனால் தற்போது ஜோதிடம் ஒரு தொழிலாகவே வளர்ந்து முதலீடு இல்லாத சுலபமான வருமானம் என்று மாறி வருகிறது. மக்களின் மனதை படிக்கத் தெரிந்தோர் சுலபமாக பரிகார வலைக்குள் சிக்கவைத்து பணம் பார்க்கின்றனர்.

மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சி வந்தாலே இவற்றை நேராக்க முடியும். கோவிலின் முன்பாக வியாபாரம் செய்வோர் புதிய உத்திகளை தாங்களே கண்டுபிடித்து அதனை மெதுவாக மக்களிடையே பரப்பிவருகின்றனர்.

இதற்கு உதாரணமாக எலுமிச்சை விளக்கு, பூசணி விளக்கு, கொண்டைக்கடலை மாலை என்று வெகு பொருத்தமாக ஜனங்களுக்கு கவனத்தை ஏற்படுத்தி உள்ளனர். இவை போன்ற வேத விரோதங்களை நாம் பரிகாரங்களாகச் செய்யக்கூடாது.

ஒரு தவறை பல வருடங்களாக செய்து வருவதாலேயே அது சரியென்று ஆகிவிடாது. எனது தாத்தாசெய்த பாவங்களை நானும் செய்வேன் என்பதோ யாருமே இவ்வாறு எதிர்க்கவில்லை என்பதாலோ அந்த வழிக்காட்டுதல்கள் சட்டமாகிவிடாது.

எனவே இங்கு இனி தரப்படவுள்ள சரியான பரிகாரங்களை மட்டுமே செய்து நல்ல பலன்களை பரிசாக அடைந்துய்ய வேண்டுகிறேன்.

சனியால் உங்களுக்கு எவ்விதமான எந்தப் பாதிப்பு வந்துள்ளது என்று தெரிய வருகின்ற காலங்களில் எல்லாம் கீழ்க்கண்ட பரிகாரங்களை செய்யுங்கள். உண்மையான சிரத்தை மற்றும் பக்தியுடன் செய்யும் பரிகாரங்களே பலிதமாகும். உங்கள் கஷ்டம் சரியாக நீங்கள் தான் செய்ய வேண்டும்.

**1. ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மர் வழிபாடு**

சனீச்சர பகவான், ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மரை உபாசிக்கும் உத்தம ஜீவன் ஆவார். அவரது விருப்ப தெய்வத்தை நாமும் வழிபட்டால் நமது கஷ்டங்கள் நிச்சயம் நீங்கும். வீட்டில் ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மரின் படத்தை வைத்து பூஜிக்க இயலாதவர்கள் ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மரின் கோவிலுக்குச் சென்று வழிபடவும்.

ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மரை பிரதோச காலங்களிலும் புதன், வெள்ளிக்கிழமைகளிலும் சுவாதி நட்சத்திரத்திலும் வழிபட வேண்டும். தினமும் ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமம் பாராயணம் செய்வது நன்று. வடமொழி அறிந்தோர் சனிபகவான் இயற்றியுள்ள ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம ஸ்தோத்திரத்தை குருமுகமாகப் பெற்று பாராயணம் செய்யவும்.

"மாதா ந்ருஸிம்ஹஸ்ய பிதா ந்ருஸிம்ஹோ
பிதா ந்ருஸிம்ஹச்ச ஸகா ந்ருஸிம்ஹ:
வித்யா ந்ருஸிம்ஹோ த்ரவிணம் ந்ருஸிம்ஹ:
ஸ்வாமி ந்ருஸிம்ஹ: சகலம் ந்ருஸிம்ஹ:"

அன்னையும் நீயே, தந்தையும் நீயே, அண்ணனும் நீயே, நண்பனும் நீயே, எனது கல்வியும் நீயே, எனது செல்வங்களும் நீயே, எனது தலைவனும் நீயே, எனக்கு உள்ள எல்லாமும் நீயே, எல்லாம் வல்ல ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மரே, உம்மை சரணடைகிறேன் காத்தருள்வீராக.

**2.ஸ்ரீ ஆஞ்சநேயர்-வழிபாடு**

இறைவனுக்கு அடுத்த இடத்தில் இருக்கும் வாயுதேவரான ஸ்ரீ ஆஞ்சநேயரை வழிபட சனியால் வருகின்ற கஷ்டங்கள் நீங்கும். ஜீவோத்தமரான முக்யப்ராண தேவர் நமது குற்றங்களை மன்னித்து அருளுவார். சகலவிதமான தேவர்களும் ஸ்ரீ ஆஞ்சநேயருக்கு கட்டுப்பட்டவர்கள் ஆதலால் இவரது கருணையுள்ள ஆணைக்கு சனியும் இரங்கி அருள்புரிவார்.

ஸ்ரீ ஆஞ்சநேயருக்கு சந்தனக் காப்பு செய்யவும் வெற்றிலை மாலை போடுவது சிறப்பு ஆகும். வெண்ணெய் சாற்றுவது, வடை மாலை போடுவது கூடாது. பவள மல்லி மாலை சாற்றவும் இராமாயணத்தில் சுந்தரகாண்டத்தை பாராயணம் செய்யவும். கோவில் திருப்பணிகளுக்கு நன்கொடைகள் கொடுக்கலாம்.

அபிஷேகங்கள் செய்ய நன்று. ஒவ்வொரு சனிக்கிழமையையும் ஸ்ரீஆஞ்சநேயர் கோவிலுக்குச் சென்று வரவும்.

"நமஸ்தேஸ்து மஹாவீர
நமஸ்தே வாயுநந்தன
விலோக்ய க்ருபயா நித்யம்
த்ராஹிமாம் பக்தவத்ஸல"

ஆஞ்சநேய சுவாமியே மகா வீரரே வாயுவின் குமாரரே எப்போதும் என்னுடனே இருந்து தினமும் எக்காலத்தும் எவ்விடத்தும் என்னை காத்தருளிட வேண்டுமாய் பக்த வத்சலரான உம்மிடம் வேண்டுகிறேன்.

**3. சிவாலய வழிபாடு**

நமது தமிழகத்தில் சிவாலயங்களில் தான் நவக்கிரகங்கள் சனிபகவானுக்கு தனியாக இடம் அளிக்கப்பட்டுள்ளது. சனிபகவான் சிவநெறிச் செல்வராகவும் காணப்படுகிறார். பிரதோசம், திங்கட்கிழமை போன்றவை சிவாலய வழிபாட்டுக்கு மிகவும் உகந்தவை ஆகும். சில ஊர்களில் நவீனமாக கதம்பம் போன்ற கோவில்கள் உற்பத்தியாகி உள்ளன. அங்கும் உங்களது வழிபாடுகளை செலுத்தலாம்.

எல்லா உயிர்களின் பாப புண்ணியங்களை உற்றுநோக்கி அவரவர் வினைகளுக்கு ஏற்ப அருள் வழங்கும் பிரானாக கொலு வீற்றிருக்கும் பரமசிவனிடம் சரணாகதி அடையுங்கள். விளக்கேற்றல், அன்னதானம், அர்ச்சனை வழிபாடுகளை நடத்தி தேவாரம், திருவாசகம் போன்ற ஞானிகளின் நூல்களை பாராயணம் செய்யுங்கள்.

"ம்ருத்யுஞ்ஜயாய ருத்ராய
நீலகண்டாய சம்பவே
அம்ருதேஸாய சர்வாய
மஹாதேவாய தே நம:4"

ம்ருத்யு பயம் போக்கும் ம்ருதயுஞ்ஜய மந்திர நாயகரே, திரு நீலகண்டத்தை உடையவரே அம்ருதம் என்கிற ஞானத்தை பூரணமாக உடையவரே, எமக்கு எல்லாமுமாக இருப்பவரே, மஹாதேவரே உமக்கு எனது பணிவான வணக்கங்கள்.

**4. அம்பாள் வழிபாடு**

அம்பிகையை சரண்புகுந்தால் அதிகவரம் பெறலாம் என்ற மகாகவியின்பாடல் நூறுசதவீத உண்மை ஆகும். உலக உயிர்கள் அனைத்துக்கும் அன்னையைப் போற்றினால் அனைத்து துன்பங்களும் விலகும் என்று ஞானிகள் கூறியுள்ளனர். அந்த அன்னை காமாட்சி, மீனாட்சி, விசாலாட்சி, பார்வதி, அபிராமி என்று அநேக வடிவங்களில் நமக்கு அருளுகின்றாள். தினசரி மாலையில் அம்பிகையை வழிபடுவது சாலச்சிறந்தது ஆகும்.

அம்பாளை வழிபடுவதால் ஏழரைச் சனி மட்டுமல்லாது ஜாதகத்தில் சனியால் வருகின்ற அனைத்து விதமான இன்னல்களில் இருந்தும் விடுதலை பெற்று நிம்மதியைப் பெற முடியும். திருவிளக்கு வழிபாடு, வெள்ளிக்கிழமை விரதம், கலச வழிபாடு போன்றவற்றை வீட்டிலேயே செய்யலாம்.

வீட்டில் விசேடமாக செய்ய இயலாதோர் அம்பிகையின் ஆலயங்களுக்குச் சென்று வழிபடலாம். அம்மனுக்கு வெள்ளை மற்றும் சிவப்பு நிறமுள்ள மலர்களை உங்கள் கையால் மாலையாகக் கட்டி சமர்ப்பிப்பது நன்று.

"சர்வ மங்கள மாங்கல்யே
சிவே சர்வார்த்த சாதகே
சரண்யே த்ரயம்பிகே தேவி
நாராயணி நமோஸ்துதே"

எல்லா மங்களங்களும் பொருந்திய தாயே, நித்ய சுமங்கலியே, சிவை என்ற சக்தியே, எமது அனைத்து நற்செயல்களையும் வெற்றியாக்குபவளே, சரணடையதக்க சரணார விந்தங்களை உடையவளே, லக்ஷ்மி ஸரஸ்வதி பார்வதி என்னும் மூன்று வடிவிலும் விளங்குபவளே நாராயணனின் தங்கையே உன்னை பக்தியுடன் வணங்குகிறேன்.

**5. மகா கணபதி பூஜை**

வினை தீர்க்கும் விநாயகனை பூஜித்தல் சர்வ வினைகளும் பறந்தோடும், சகல செல்வங்களும் கைகூடும் என்று கூறுவர். தமிழகத்தில் விநாயகர் கோவில் இல்லாத ஊரே இல்லை எனலாம்.

விநாயகரை வழிபடுவோரை சனிபகவான் துன்புறுத்த மாட்டார் என்ற சொல் வழக்கு காலங்காலமாய் நம்மிடையே நிலவுகிறது. திங்கட்கிழமையன்று விநாயகரை வழிபடுவது மிகச் சிறப்பான வரங்களைத் தருகின்றது.

பிள்ளையாரை பிடித்தும் வழிபடலாம். தூர்வாபத்ரம் என்ற அறுகம்புல்லை சாற்றி வழிபடவேண்டும். அரசமரத்தடிப் பிள்ளையாருக்கு வரசக்தி அதிகம் என்பர். சனி முதலிய நவமென வழங்கப்படும் கோள்கள் ஒன்பதும் கணபதியின் பக்தனை ஒன்றும் செய்யாது.

விநாயக புராணத்தில் சொல்லியுள்ளபடி இருபத்தொரு நாட்கள் தொடர்ந்து அறுகால் விநாயகரை வழிபட்டால்எண்ணியதுநிறைவேறும்.

"கஜானனம்பூதகணாதிசேவிதம்
கபித்த ஜம்பூபல சார பக்ஷிதம்
உமாசுதம்சோகவினாஸகாரணம்
நமாமி விக்னேஸ்வர பாத பங்கஜம்"



ஆனை முகத்தவனே சிவபூத கணங்களின் தலைவனே விளாம்பழம், நாகாபழம் முதலிய கனிகளை விரும்பி ஏற்பவரே உமா தேவியாரின் மகனே எமது துக்கத்தை நிவர்த்தி செய்பவரே விக்னேஸ்வரனான உம்முடைய தாமரை மலர் பாதங்களை வணங்குகின்றேன்.

**6. சனிக்கிழமை விரதம்**

தனக்காகவும் தனது குடும்ப உறுப்பினர்களின் நலனுக்காகவும் ஒவ்வொருவரும் அவசியம் செய்ய வேண்டியதாக சனிக்கிழமை விரதம் கூறப்பட்டுள்ளது. அன்று எள்ளெண்ணெய் தேய்த்துக் குளித்து பூஜைகள் செய்த பின்னர் கோவிலுக்குச் சென்று வணங்கிய பின்னர் மதிய உணவை மட்டும் ஏற்பது என்ற விதிகள் உள்ளன.

சிலர் நெடுங்காலமாக பெருமாளை நினைந்து இந்த விரதத்தை இன்றளவும் செய்து வருகின்றனர். கலியுகத்தில் கைமேற் பலன் என்பதாக இந்த விரதம் உள்ளது.

பெருமாளை குலதெய்வமாக கொண்டுள்ள குடும்பத்தாருக்கு இதனை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதை வழிவழியாய் வந்துள்ள பெரியோர்கள் சொல்லிக் கொடுப்பர். மற்றவர்கள் இதனை செய்து வருபவர்களிடம் நன்கு கேட்டறிந்து செய்ய வேண்டும்.

பச்சை மாவில் நெய்விளக்கு ஏற்றுவது முக்கியமாகும். ஏழைகளுக்கு சனிக்கிழமையன்று தருகின்ற அன்னதானத்தின் பலனால் சனிக்கோளின் உக்கிரம் தனிந்து வாழ்க்கையில் அமைதி நிலவும்.

"நீலாஞ்சன சமாபாஸம்
ரவிபுத்ரம் யமாக்ரஜம்
சாயா மார்த்தாண்ட சம்பூதம்
தம் நமாமி சனைச்சரம்"

**7. ஷேத்ராடன வழிபாடு**

மகான்களுக்கு தெய்வம் தரிசனம் தந்த கோவில்கள் உள்ள ஊர்களுக்குச்சென்று அங்கேயே சில நாட்கள் தங்கி இருந்து விரதங்களைக்கடைப்பிடித்து வருவதை ஷேத்ராடன வழிபாடு என்பர்.

இதில் பாடல் பெற்ற தலங்கள் என்று சில ஊர்களும் பரிகாரத் தலங்கள் என்ற ஊர்களும் அடங்கும். மூர்த்தி, தலம், தீர்த்தம் என்றவற்றை முறையாக வணங்குவோருக்கு ஞானோபதேசம் கிடைக்கும் என்று தாயுமானவ சுவாமிகள் பாடியுள்ளார்.

ஷேத்ரங்களுக்கு தம்பதிகளாக செல்ல வேண்டும். அங்கு பிரம்மசர்யம் முதலான விரதங்களை கடைப்பிடிக்க வேண்டும்.

தேகத்தாலும் மனதாலும் வாக்காலும் சேவை செய்ய வேண்டும். அன்னதானம் முதலியவற்றை முடிந்த அளவு செய்ய வேண்டும்.

மடம், மண்டபம், வீடு போன்ற ஆசாரமுள்ள இடத்தில் தங்கி விரதம் காக்க வேண்டும். எந்தப் பிரச்சினையையும் வாதப் பிரதிவாதம் செய்யாது சொந்த ஊருக்கு வரவேண்டும். விழித்திருக்கும் நேரங்களில் எல்லாம் பகவத் சிந்தனையோடு இருந்து விரத சங்கல்பம் முடித்து வந்து சேர வேண்டும்.

"அயோத்யா மதுரா மாயா
காசி காஞ்சி அவந்திகா
புரி த்வாராவதி சைவ
சப்தைதா மோஷ தாயகா"

**8. சனீச்சர பகவான் வழிபாடு**

யாருடைய கோபம் நீங்க வேண்டுமோ அவரது பாதங்களில் தண்டமென விழுந்து கதறி அழுது மன்னிப்புக் கோருவது போல் சனீச்சர பகவானை சரண் புகுந்து உமது குற்றங்களுக்கு மன்னிப்பு கேளுங்கள். அவருக்கு சனிக்கிழமையன்று அபிஷேக பூஜைகளை நடத்துங்கள். எள்ளுசாதம் செய்து நிவேதனம் தந்து அதனை ஏழைகளுக்கு பரிமாறுங்கள்.

அகல் விளக்கில் எள்ளெண்ணெய் தீபம் ஏற்றுதல் நன்று. கோவிலுக்கு உழவாரப்பணி போன்ற தொண்டுகளை மனமாற பக்தியுடனும் முழு ஈடுபாட்டுடனும் செய்யுங்கள். தேச பக்தியுடன் கூடியதாக உங்கள் தெய்வபக்தி இருக்க வேண்டும். ஆசாரங்கள் மிகவும் அவசியமாதலால் சுத்தம் என்பதுடன் சுகாதாரத்தையும் கைகொண்டு உங்கள் வழிபாடுகளை நடத்துங்கள். சனிபகவான் மந்திரங்களை சனி பகவான் அஷ்டோத்தரசத நாமாவளிகளை நன்கு கற்று பாராயணம் செய்யுங்கள்.

'ஜோதிஷ வித்யாவாசஸ்பதி'
**என்.நாராயணராவ்**

## மைத்திரி–மகிந்த குடும்ப கொலைச் சதித்திட்டம்

# இந்தியர் குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு எந்தத் தகவலையும் வெளிப்படுத்தவில்லை

## பொலிஸ் பேச்சாளர் ருவான் தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்பத்தினரைப் படுகொலை செய்யும் சதித் திட்டம் தொடர்பாக, இந்தியர் குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு எந்தத் தகவலையும் வெளிப்படுத்தவில்லை என்று பொலிஸ் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பு நீதவான் நீதிமன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை, குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சமர்ப்பித்த பி அறிக்கையில், படுகொலைச் சதி பற்றி இந்தியர் வெளிப்படுத்தியதாக எதுவுமே கூறப்பட்டிருக்கவில்லை.

நாமல் குமார வழங்கிய தகவலின் பேரில், இந்தியக் குடிமகனான மேர்சில் தோமஸ், கடந்த 21 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

பல தனிநபர்களுக்கு அச்சுறுத்தல் இருப்பதாக, நாமல் குமார காணொலி மற்றும் ஒலிப்பதிவுகளை வெளியிட்டதை அடுத்து ஊடகங்களில் அவை வெளியாகின.

அதுபற்றி விசாரிப்பதற்காகவே, தான் நாமலின் இல்லத்துக்குச் சென்றதாக மாத்திரமே சந்தேக நபர் தெரிவித்துள்ளார்.

குறித்த இந்தியர் 2017 ஜனவரியில் இலங்கைக்கு வந்துள்ளார். பல இடங்களில் தங்கியிருந்துள்ளார். எனினும், அவர் எங்கிருந்து, எப்படி பண உதவிகளைப் பெற்றார் என்பது இன்னமும் தெரியவில்லை.

அவரைத் தடுத்து வைத்து குற்றப் புலனாய்வுப் பிரிவு தொடர்ந்து விசாரித்து வருகிறது" என்றும் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

அதேவேளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்பத்தினரைப் படுகொலை செய்யும் சதித் திட்டம் ஒன்று இருப்பதை, கைது செய்யப்பட்ட இந்தியர் உறுதிப்படுத்தியிருப்பதாக வெளியான செய்திகளை நிதியமைச்சர் மங்கள சமரவீரவும் நிராகரித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## உலகத் தரப்படுத்தலில் கொழும்புப் பல்கலைக்கு 1001 ஆவது இடம்

2019 ஆம் ஆண்டிற்கான உலகின் சிறந்த பல்கலைக்கழக தரப்படுத்தலில் கொழும்பு பல்கலைக்கழகமும் இடம்பிடித்துள்ளது. புதிய தரப்படுத்தலுக்கு அமைய கொழும்பு பல்கலைக்கழகம் 1001 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் முதலாம் மற்றும் இரண்டாம் இடங்களை பிடித்துள்ளன. ஈராக்கின் பெக்டெட் பல்கலைக்கழகம் உலகில் முதல் முறையாக சிறந்த 1250 பல்கலைக்கழகங்களுக்குள் தெரிவாகியுள்ளது.

**Times Higher Education World University Rankings** என்ற இணையத்தளத்தின் தரப்படுத்தலுக்கு அமைய இந்த புள்ளிவிபரங்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடதக்கது. (இ)

## மலேசிய உயர்ஸ்தானிகரை தாக்கிய மூவருக்கு அபராதம்

(முலே)

இலங்கைக்கான மலேசிய உயர்ஸ்தானிகர் ஐ.அன்சார் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் மூவருக்கு அந்நாட்டு நீதிமன்றம் தலா 9500 ரூபாய் அபராதம் விதித்துள்ளது.

இலங்கைக்கான மலேசிய உயர்ஸ்தானிகரை தாக்கிய சம்பவம் உட்பட நான்கு குற்றங்களை அவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகளான கலைமுகிலன், வீ. பாலமுருகன் மற்றும் ரகுநாதன் ஆகியோருக்கே இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சட்ட விரோத கூட்டம் ஒன்றில் கலந்து கொண்ட குற்றத்திற்காக அவர்களுக்கு 2500 மலேசிய ரூபாய் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மிரட்டல் மற்றும் இலங்கைக்கான மலேசிய உயர்ஸ்தானிகரின் மூக்குக் கண்ணாடியை சேதப்படுத்தியதற்காக 3000 மலேசிய ரூபாய் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், கோலாலம்பூர் விமான நிலையத்தில் பதற்ற நிலைமையை ஏற்படுத்திய குற்றத்திற்காக 3000 மலேசிய ரூபாய் அபராதமாகவும் இலங்கைக்கான மலேசிய உயர்ஸ்தானிகர் ஐ.அன்சாரை தாக்கியமைக்காக 1000 மலேசிய ரூபாய் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 4 ஆம் திகதி கோலாலம்பூர் விமான நிலையத்தில் வைத்து இலங்கைக்கான மலேசிய உயர்ஸ்தானிகர் ஐ.அன்சார் தாக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஜனாதிபதி கொலைச் சதி குறித்து கைதான இந்தியர் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்கிறது இந்திய அரசு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபஷ மற்றும் அவரது குடும்பத்தினரைப் படுகொலை செய்யும் சதித் திட்டம் தொடர்பாக கைது செய்யப்பட்ட இந்தியர் மன நிலை பாதிக்கப்பட்டவர் என்று கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

படுகொலைச் சதித் திட்டத்தை வெளிப்படுத்திய நாமல் குமாரவின் இல்லத்துக்கு அடிக்கடி சென்றார் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட இந்தியர், இந்தப் படுகொலைச் சதித் திட்டம் பற்றி அறிந்திருந்தார் என்று பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள இந்தியத்தூதரகப் பேச்சாளர் ஒருவர், 'இந்த விவகாரம் தொடர்பாக ஊடகங்களில் அறிந்து கொண்டதும் அதனைத் தீவிரமாக எடுத்து, இலங்கை பொலிஸ்துறையிடமிருந்து கிடைத்த குறைந்தளவு தகவல்களைக் கொண்டு, இந்தியாவிலுள்ள அதிகாரிகள் மூலம், குறிப்பிட்ட நபர் பற்றிய பின்னணித் தகவல்கள் பெறப்பட்டன.

இதன்படி இலங்கை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இந்தியர் 2000 ஆம் ஆண்டிலிருந்து மனநிலை பாதிக்கப்பட்டிருப்பவர் என்று ஆரம்பக் கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாங்கள் இலங்கை அதிகாரிகளுடன் தகவல்களைப் பகிர்ந்து கொண்டுள்ளோம். இதுபற்றிய முழுமையான விசாரணைகளை நடத்துவதற்கு அவர்களுக்கு முழுமையான ஒத்துழைப்பை அளிப்பதாக வாக்குறுதி அளித்துள்ளோம்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## சருகுப் புலி இரவில் அட்டகாசம் கால்நடை வளர்ப்போர் கவலை



(யாழ்ப்பாணம்)

ஏழாலையில் சருகுப் புலியின் அட்டகாசத்தினால் ஆடுகள், கோழிகள் என்பன இரையாக்கப்படுகின்றன. நள்ளிரவு வேளையில் இச் சம்பவம் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. மனிதர்கள் நடமாட்டம் கண்டவுடன் மறைவான இடங்களை நோக்கி ஓடி விடுகிறது. சருகுப்புலியின் தாக்குதலால் கால் நடைகள் இறப்பதால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக கால் நடை வளர்ப்போர் கவலை வெளியிட்டுள்ளனர். (இ)



வடமராட்சி கல்வி வலய ஆங்கில பாட உதவிக்கல்விப் பணிப்பாளர், ஐ.செல்வராசாவின் மணிவிழா அண்மையில் வதிரி திரு இருதயக் கல்லூரியில் இடம்பெற்றது. இதில் வடமாகாணக் கல்விப்பணிப்பாளர் செ.உதயகுமார், ஓய்வு பெற்ற வடமாகாண கல்விப் பணிப்பாளர் வை.செல்வராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.




### ஏழு தமிழர்கள் விடுதலை

# ஆளுநர் ஒப்புதல் கொடுத்தால் எல்லாம் நல்லதாக நடக்கும்

## பேரறிவாளனின் தாய் அற்புதம் நம்பிக்கை



இந்தியாவின் பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டமை தொடர்பில், குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட எழுவரையும் விடுதலை செய்வதற்கான அங்கீகாரத்தை, தமிழக ஆளுநர் பன்வரிலால் புரோஹித் வழங்குவார் என்ற நம்பிக்கையை, அவர்களில் ஒருவரான பேரறிவாளனின் தாயார் வெளிப்படுத்தியுள்ளார்.

எழுவரையும் விடுதலை செய்வதற்கான அதிகாரம், தமிழக அரசாங்கத்துக்கு உள்ளது என, இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதைத் தொடர்ந்து, அது தொடர்பான தீர்மானத்தை, தமிழக அரசாங்கம் நிறைவேற்றியுள்ளது. அத்தீர்மானத்தில், தமிழக ஆளுநர் கையெழுத்திட்டால், அவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட முடியும்.

இந்நிலையில், தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமியையும் ஆளுநர் புரோஹித்தையும், பேரறிவாளனின் தாயார் அற்புதம் அம்மாள், சந்தித்துள்ளார். இது தொடர்பாக, இந்திய ஊடகமொன்று அவரிடம் கேள்வியெழுப்பிய போதே, விடுதலை தொடர்பான தனது நம்பிக்கையை வெளியிட்டார்.

விசாரணை அதிகாரி தியாகராஜன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம், சிறையில் பேரறிவாளனின் நடத்தை தொடர்பான ஆவணங்கள் உட்பட பல ஆவணங்களை, தமிழக ஆளுநரிடம் வழங்கியதாகக் குறிப்பிட்ட அற்புதம் அம்மாள், "இது இருபத்தெட்டு வருட வேதனை. நீங்கள் ஒரு கையெழுத்துப் போட்டால், எனது பிள்ளையை விடுதலை செய்துவிடுவார்கள் என்று கூறுகிறார்கள். நீங்கள் கையெழுத்துப் போட்டு, எனது குழந்தையைக் காப்பாற்ற வேண்டும்" என்று, ஆளுநரிடம் கோரிக்கை விடுத்ததாகக் கூறினார். அதற்கு ஆளுநர், "சரி" எனப் பதிலளித்தார் என்று, அவர் தெரிவித்தார்.

மகன் விடுதலை செய்யப்படுவாரா எனக் கேட்ட போது, "உச்சநீதிமன்றத்தில் தெளிவான ஒரு முடிவு சொல்லியிருக்கிறார்கள். ஆளுநர் ஒப்புதல் கொடுத்தால், எல்லாம் நல்லதாக நடக்கும். மனிதர்களின் நல்லெண்ணங்களைத்தான் நம்பிக் கொண்டிருக்கிறேன்" என, அவர் பதிலளித்தார். (7)

# மாலியில் திடீரென கு
# 8 பேர் உடல் சிதறி



(பமாகோ)

மாலி நாட்டில் ஏற்பட்ட வெடிகுண்டு விபத்தில் 7 இராணுவ வீரர்களுடன் பொதுமக்களில் ஒருவரும் பலியான சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

உலக நாடுகள் முழுவதும் பயங்கரவாதத்துக்கு எதிரான வழி முறையை மேற்கொள்ளும் நிலையில், பயங்கரவாதிகள் தங்களது தாக்குதல்களையும் தீவிரப்படுத்தி வருகின்றனர். பயங்கரவாதிகளின் தாக்குதல்களினால் பொதுமக்கள், இராணுவ வீரர்கள் என பலர் தங்கள் வாழ்வை இழக்கின்றனர்.

# படையினர்-பயங்கரவாதிகள் இடையே பாகிஸ்தானில் துப்பாக்கிச் சண்டை





பாகிஸ்தானிய படையினருக்கும் பயங்கரவாத அமைப்பினருக்குமிடையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் 4 பயங்கரவாதிகளும் 2 படையினரும் உயிரிழந்துள்ளனர்.

பாகிஸ்தான் பலுசிஸ்தான் மாகாணத்தில் கலாத் என்ற இடத்தில் மங்கோசார் பகுதியில் பயங்கரவாதிகள் பதுங்கி இருப்பதாகவும் அவர்கள் குறித்த மாகாணத்தில் பயங்கரவாத தாக்குதல்கள் நடத்துவதற்கு சதித்திட்டம் தீட்டியுள்ளதாகவும் பாதுகாப்பு படையினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலைத் தொடர்ந்து அப் பகுதிக்கு படையினர் விரைந்தனர்.

படையினரை பார்த்ததும் பதுங்கியிருந்த பயங்கரவாதிகள் அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள அவர்களை சரணடையுமாறு பாதுகாப்பு படையினர் வலியுறுத்தினர்.

பாதுகாப்பு படையினரின் கருத்துக்கு செவிசாய்க்காத அவர்கள் தொடர்ந்தும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதனால், படையினரும் அவர்கள் மீது எதிர்த் தாக்குதல் மேற்கொண்டனர். இதில் ஆறு பேர் உயிரிழந்தனர். (7)

# சுற்றுச் சூழலை காக்கும் அரியவகை வண்ணத்துப் பூச்சிகள்



அருணாசல பிரதேசத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்பினை ஊக்குவிக்கும் முயற்சிக்காக நடந்த 2 நாள் கூட்டத்தில் அரியவகை 171 வண்ணத்துப்பூச்சி இனங்கள் கண்டறியப்பட்டு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

பூமியின் சூழல் மண்டலத்தில் ஆரோக்கியம் நிறைந்த சுற்றுச்சூழலுக்கு அடையாளம் ஆக வண்ணத்துப் பூச்சிகள் இருந்து வருகின்றன. இவற்றால் பூக்களில் மகரந்தச் சேர்க்கை ஏற்படுவதுடன், இயற்கையான பூச்சி கொல்லிகளாகவும் இவை செயற்படுகின்றன. (7)

# மனித குலத்தின் தவறுகளால் சுழற்சியில் தள்ளாடும் பூமி

## நாசா எச்சரிக்கை

கலிபோர்னியாவிலுள்ள விண்வெளி நிறுவனத்தின் ஜெட் புரோபல்சன் ஆய்வகத்தில் பணிபுரியும் விஞ்ஞானிகள் பூமி தள்ளாடுவதை கண்டறிந்து உள்ளனர்.

பூமி சறுக்கல் மற்றும் அதன் அச்சில் மிகவும் சற்று சாய்ந்து கொண்டிருப்பதால், அது ஒரு சரியான கோளம் அல்ல. அதனால் சுமுகமாக சுழன்று விடாது.

இப்போது கிரகமானது இந்த வழியில் நகர்வதற்குரிய மூன்று முக்கிய காரணங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

பூமி தள்ளாடுவதற்கு முதல்காரணம் பனி உறைவு மாற்றங்கள். பனிப்பாறைகள் மாசுபாடு மாற்றங்களால் உருகுவதால் பூமியின் வெகுஜனத்தை இது மறுவிநியோகம் செய்கிறது. கடந்த பனிக்கட்டி காலம் 26,000 ஆண்டுகளுக்கு முன்பு முடிவடைந்த போதிலும், கிரகம் இன்னும் மெதுவாக அந்த வடிவத்துக்கு மாறவுள்ளது.

இரண்டாவது காரணம் "மேன்டில் கன்வெக்ஷன்" என்று அழைக்கப்படுகிறது. இதில் பூமியின் மையத்தில் பெரிய பாறைகள் மாற்றுவதற்கு ஒரு தள்ளாட்டம் ஏற்படுகிறது.

ஆனால் மூன்றாவது மற்றும் இறுதிக் காரணம் ஒரு விரைவாக வெப்பமாக்கும் சூழல் காலநிலை மாற்றம். இதற்கு மனிதர்களும் காரணமாகும்.

கிரீன்லாந்தில் உள்ள பனிப்பகுதிகள் உருகுவதால் 7,500 கிக்டன்கள் பனிக்கட்டிகள் கடலில் நீராக கலந்து விட்டன. இது எடையின் பரிமாணத்தை மாற்றியமைக்கலாம். இதனால் தள்ளாட்டத்திற்கு பங்கிருக்கலாம்.

ஜெட் புரோபல்சன் எரிக் ஐவின்ஸ் கூறும் போது,

இங்கே நீங்கள் வட துருவம் இருந்து 45 டிகிரி என்று ஒரு வெகுஜன இருந்தால் ஒரு வடிவியல் விளைவு -கிரீன்லாந்து - அல்லது தென் துருவத்தில் இருந்து (பராகோனிய பனிப்பாறைகள் போன்றவை) அது துருவத்திற்கு அருகே இருக்கும் ஒரு வெகுஜனத்தை விட பூமியின் சுழற்சியை மாற்றுவதில் ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

இங்கே நீங்கள் வட துருவத்திலிருந்து 45 டிகிரிக்கு (அதாவது கிரீன்லாந்து) அல்லது தென் துருவத்திலிருந்து (பராகோனிய பனிப் பாறைகள் போன்றவை) 45 டிகிரி என்று இருந்தால், பூமியின் சுழற்சியை அகற்றுவதில் ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். (7)

# பாலியல் குற்றச்சாட்டுக்களால் சபைக்கும் இளைஞர்களுக்குமான விரிசல் அதிகரிப்பு

## போப் பிரான்சிஸ் கவலை



0

கிறிஸ்தவ பாதிரியார்கள் மீதான பாலியல் குற்றச்சாட்டுகள், சபைக்கும் இளைஞர்களுக்கும் இடையே விரிசல் அதிகரித்து விட்டதாக கத்தோலிக்க திருச் சபையின் தலைவரான போப் பிரான்சிஸ் கவலை தெரிவித்துள்ளார்.

மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு நான்கு நாள் சுற்றுப்பயணமாக மேற்கொண்டு சென்ற போப் பிரான்சிஸ், எஸ்டோனியாவில் உரையாற்றினார்.

இதன்போது திருச்சபைகள் மீது தொடர்ந்து பாலியல் புகார்கள் கூறப்பட்டு வருவதாகவும், பென்சில்வேனியாவில், 300 பாதிரியார்களால் ஆயிரம் குழந்தைகள் பலாத்காரம் செய்யப்பட்டதாக வெளியான அறிக்கையையும் சுட்டிக்காட்டினார்.

மேலும், திருச்சபைகளை கண்காணிப்பது என்பது கத்தோலிக்க திருச்சபை நிர்வாகத்தால் முடியாத காரியம் என்றும், அதற்கு அரசுகளும் உதவி செய்ய வேண்டும் எனவும் போப் பிரான்ஸிஸ் தெரிவித்தார்.

தொடர் பாலியல் குற்றச்சாட்டுகளால், திருச்சபை மீது இளைஞர்களுக்கு அதிருப்தி ஏற்பட்டுள்ளதாகவும், இளைஞர்களின் நம்பிக்கையைப் பெற திருச்சபையினர் தங்களது வழிகளை மாற்றிக் கொள்ள வேண்டும் எனவும் போப் பிரான்ஸிஸ் வலியுறுத்தினார். (7)

# வெளிநாடு



## ... குண்டுவெடிப்பு ...றி உயிரிழப்பு !



இந்நிலையில், நேற்று மாலி நாட்டில் இராணுவ வீரர்களை குறிவைத்து வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்த தாக்குதலில் 7 இராணுவ வீரர்கள் பலியாகியுள்ளனர். மேலும், அப்பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரும் வெடிகுண்டால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தார்.

இந்த வெடிகுண்டு தாக்குதலுக்கு இதுவரை எவ்வித பயங்கரவாத அமைப்பும் பொறுப்பேற்காத நிலையில், இதுதொடர்பாக விசாரணை நடத்தப்பட்டு வருகிறமை குறிப்பிடத்தக்கது. (7)

### மனிதநேயத்திற்கு எதிரான குற்றச் செயல்கள்

## வெனிசுவெலா மீது சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும்- கனடா கோரிக்கை

(டொரண்டோ)

வெனிசுவெலா மீது சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் விசாரணை நடத்த வேண்டும் என்று கனடா மற்றும் சில லத்தீன் அமெரிக்க நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன.

மனிதநேயத்திற்கு எதிரான குற்றச்செயல்கள் மற்றும் அரசியல் எதிரிகளை அடக்குவதற்கு தனது அழுத்தத்தை பிரயோகிப்பது தொடர்பாக வெனிசுவெலா அரசாங்கம் மீது குறித்த நாடுகள் கடந்த புதன்கிழமை தமது குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தன.

நெதர்லாந்தின் ஹேக் நகரை தளமாகக் கொண்ட சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் உறுப்பு நாடுகள் சக அங்கத்துவ நாடொன்றுக்கு எதிராக குற்றச்சாட்டை முன்வைக்கும் முதல் தடவை இதுவாகும். பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியில் சிக்கியுள்ள வெனிசுவெலா ஜனாதிபதி நிக்கோலஸ் மடுரோவின் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பெரு, ஆர்ஜென்டீனா, சிலி, கொலம்பியா மற்றும் பராகுவே நாடுகளின் ஜனாதிபதிகளும், கனடாவின் பிரதமர் ஜஸ்டின் ட்ருடோவும் கைச்சாத்திட்ட மனு சர்வதேச நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. (7)

## சிரிய அகதிகளை நாட்டுக்குச் செல்லுமாறு லெபனான் ஜனாதிபதி மீண்டும் வலியுறுத்து



லெபனானில் தஞ்சமடைந்திருக்கும் சிரிய அகதிகளை தங்களின் சொந்த நாட்டிக்கு திரும்பிச் செல்லுமாறு லெபனான் ஜனாதிபதி மிச்சேல் ஆவுன் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொது சபை அமர்வில் கடந்த புதன்கிழமை கலந்து கொண்டு உரையாற்றிய அவர், "எனது நாட்டை கௌரவமான, பாதுகாப்பான மற்றும் நிலையான திருப்பத்தைத் தேடும் தேசமாக கட்டியெழுப்ப நான் எண்ணியுள்ளேன்.

இதனால் என் நிலைப்பாட்டை மீண்டும் இங்கு வலியுறுத்துகிறேன். புலம்பெயர்ந்து எமது நாட்டுக்குள் வந்துள்ளவர்கள் மீண்டும் அவர்களின் சொந்த நாட்டிற்கு செல்லவேண்டும்" என்று குறிப்பிட்டார்.

இதனிடையே, சிரிய ஜனாதிபதி பஷர் அல் அஸாத் நாட்டின் பெரும்பாகத்தை கைப்பற்றியுள்ள நிலையில், தஞ்சம் கோரி வந்துள்ளவர்கள் தமது நாட்டுக்கு திரும்ப வேண்டும் என்று லெபனான் அரசியல்வாதிகளும் தொடர்ந்து கோரி வந்தமை குறிப்பிடத்தக்கது.

லெபனான் அதன் சொந்த பிரஜைகளின், கால் பகுதிக்குச் சமமான அகதிகளின் எண்ணிக்கையை சமாளிக்க முடியாது என்று சுட்டிக் காட்டியுள்ளது. (7)

## கனடா மன்னிப்புக் கேட்காதவரை அந்த நாட்டின் மீதான தடையை நீக்க முடியாது!

### சவுதி அரேபியா அறிவிப்பு

(டுபாய்)

கனடா மன்னிப்பு கேட்காதவரை அந்த நாட்டின் மீதான தடையை நீக்க முடியாது என சவுதி அரேபியாவின் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

'இரண்டு பெண் சமூக ஆர்வலர்களை சவுதி அரேபியா அரசு சிறையில் தள்ளிய விவகாரத்தில் தலையிட்ட கனடா அரசு, கடந்த ஓகஸ்ட் மாதம் சவுதி அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்தது. இதனையடுத்து சவுதி அரேபியா கனடா மீது நடவடிக்கை எடுக்க முடிவு செய்ததுடன், விமான போக்குவரத்து உள்ளிட்ட சேவைகளையும் இரத்து செய்தது.

கனடா மன்னிப்பு கேட்காதவரை அந்த நாட்டின் மீதான தடையை நீக்க முடியாது என சவுதி அரேபியாவின் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார். அது மட்டுமின்றி தங்கள் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளாதவரை கட்டார் நாடு மீதான தடை நீடிக்கும் என்றும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

சவுதி, ஐக்கிய அமீரகம், பஹ்ரின், எகிப்து ஆகிய நாடுகள் முன்வைத்துள்ள கோரிக்கைகளை கட்டார் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மனித உரிமைகள் தொடர்பில் கனேடிய அரசு மேற்கொண்ட விமர்சனம் பொறுப்பற்ற செயல் மட்டுமல்ல விரோதத்தை பிற்படுத்தும் வகையில் அமைந்திருந்தது எனவும் சவுதி வெளிவிவகார அமைச்சர் ஆதில் அல் ஜுபைர் தெரிவித்துள்ளார். சவுதி அரேபியா ஒரு மதிப்புமிக்க நாடு என கனேடிய அரசு கருதுகிறது எனில் உடனடியாக இதுவரை எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுகளுக்காக மன்னிப்பு கேட்க வேண்டும் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (7)

## எங்களிடமிருந்து இந்தியா தொடர்ந்து கச்சாய் எண்ணெய் இறக்குமதி செய்யும்

### ஈரான் வெளியுறுவுத்துறை அமைச்சர் தெரிவிப்பு

(நியூயோர்க்)

ஈரானிடம் இருந்து இந்தியா கச்சாய் எண்ணெய் இறக்குமதி செய்வது தொடரும் என ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் முகமது ஜாவத் ஜாரிப் தெரிவித்துள்ளார்.

ஈரான் மீது பொருளாதாரத் தடைகளை விதித்துள்ள அமெரிக்கா அந்நாட்டிடம் இருந்து யாரும் கச்சாய் எண்ணெய் இறக்குமதி செய்யக்கூடாது என உத்தரவிட்டது. மீறி இறக்குமதி செய்யும் நாடுகள் மீதும் பொருளாதாரத் தடை விதிக்கப்படும் என எச்சரித்துள்ளது. ஈரானிடம் இருந்து அதிகளவு கச்சாய் எண்ணெய் இறக்குமதி செய்யும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று.

ஆனால், அமெரிக்காவின் எச்சரிக்கை காரணமாக ஈரானிடம் இருந்து கச்சாய் எண்ணெய் இறக்குமதி செய்யும் அளவை குறைக்க இந்தியா திட்டமிட்டது. அதேசமயம் இந்த விவகாரத்தில் இந்தியாவுக்கு விலக்கு அளிக்க வேண்டும் என அமெரிக்காவிடம் கோரியுள்ளது.

கடந்த வாரம் இந்தியா வந்திருந்த அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மைக் பாம்பியோ இந்த விவகாரத்தில் இந்தியாவுக்கு விலக்கு அளிப்பது தொடர்பாக அமெரிக்க அரசு பரிசீலிக்கும் என தெரிவித்தார். ஒருவேளை அதற்கு ஒப்புதல் கிடைத்தாலும் அந்த விலக்கு குறைந்த காலத்துக்குத்தான் வழங்கப்படும் என மைக் பாம்பியோ கூறினார்.

ஈரான் மீது அமெரிக்கா விதித்துள்ள பொருளாதார தடைகள் வரும் நவம்பர் மாதம் முதல் நடைமுறைக்கு வருகின்றன. அதன் பின் அந்நாட்டிடம் இருந்து கச்சாய் எண்ணெய் இறக்குமதி செய்யக்கூடாது என்பது அமெரிக்காவின் உத்தரவு.

இந்நிலையில், நியூயோர்க்கில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் பொதுச் சபை கூட்டத்தின் போது இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் மற்றும் ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் முகமது ஜாவத் ஜாரிப் இடையே சந்திப்பு நடைபெற்றது. இந்த சந்திப்பிற்கு பிறகு பேசிய முகமது ஜாவத், ஈரானிடம் இந்தியா கச்சாய் எண்ணெய் இறக்குமதி செய்வது தொடரும் என தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் குறிப்பிட்டுள்ளதாவது, 'எங்கள் இந்திய நண்பர்கள், பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் ஈரானில் இருந்து எண்ணெய் இறக்குமதி போன்றவற்றை நோக்கத்தின் அடிப்படையில் செய்பவர்கள். இதே கருத்தைத் தான் சுஷ்மா சுவராஜும் என்னிடம் தெரிவித்தார். நாங்கள் இந்தியாவுடன் விரிவான ஒத்துழைப்பை வழங்கி வருகிறோம்.

இந்த ஒத்துழைப்பு எரிசக்தி துறையிலும் தொடர்கிறது. ஏனென்றால், இந்தியாவின் நம்பகமான எரிசக்தி விநியோகஸ்தராக ஈரான் எப்பொழுதும் இருந்து வருகிறது. எனவே; ஈரானிடம் இருந்து கச்சாய் எண்ணெய் இறக்குமதி செய்வதை இந்தியா தொடரும்' என அவர் தெரிவித்தார்.

ஈரானிடன் இருந்து சீனாவுக்கு அடுத்ததாக அதிகளவு கச்சாய் எண்ணெய் இறக்குமதி செய்யும் இரண்டாவது நாடு இந்தியாவாகும். அமெரிக்காவின் பொருளாதார தடைகளுக்கு பிறகு ஈரானிடம் இருந்து இறக்குமதி செய்யும் எண்ணெயின் அளவை இந்தியா குறைத்துள்ளதே தவிர முற்றிலும் நிறுத்திவிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (7)

## மியன்மார் குறித்த வழக்குக் கோப்புகளை தயாரிப்பதற்கு ஐ.நாவால் குழு நியமனம்



மியன்மாரில் மனிதவுரிமை மீறல்கள் மற்றும் இனவழிப்பிற்கான சாத்தியப்பாடுகள் தொடர்பான ஆதாரங்களை திரட்டி வழக்குக் கோப்புகளை தயாரிக்கும் முகமாக குழுவொன்றை நியமிப்பதற்கு ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமைகள் ஆணையகம் ஆதரவாக வாக்களித்துள்ளது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற இந்த வாக்கெடுப்பில் 47 உறுப்பினர்களை கொண்ட சபையில் 35 உறுப்பினர்கள் சார்பாக வாக்களித்துள்ளனர். சீனா, பிலிப்பைன்ஸ் மற்றும் புரூண்டி ஆகிய நாடுகளின் அங்கத்தவர்கள் தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்துள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு ஆகியவற்றால் கொண்டுவரப்பட்ட தீர்மானம் தொடர்பிலேயே இந்த வாக்கெடுப்பு இடம்பெற்றுள்ளது.

இந்த தீர்மானம் ஐக்கிய நாடுகளின் உண்மை கண்டறியும் குறிக்கோளின் (FFM) அடிப்படையில் அமைத்துள்ள நிலையில், அதனை மியன்மார் அரசாங்கம் நிராகரிப்பதாக மியன்மார் தூதுவர் கியாவ் மொய்டன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அது சமநிலையற்ற ஒருதலைப்பட்சமான தீர்மானம் என்றும் நாட்டில் ஒற்றுமையின்மையை தோற்றுவிக்க மேற்கொள்ளும் முயற்சி என்றும் குற்றம் சுமத்தியுள்ளார்.

எவ்வாறாயினும், இந்த தீர்மானத்தின் ஊடாக, மியன்மாரில் கடந்த 2011 இல் இருந்து இடம்பெற்ற சர்வதேச குற்றங்கள் மற்றும் சர்வதேச சட்ட மீறல்களின் ஆதாரங்களை சேகரித்தல், ஒருங்கிணைத்தல், பாதுகாத்தல், ஆய்வு செய்தல், நியாயமான மற்றும் சுயாதீனமான குற்றவியல் நடவடிக்கைகளை விரைவுபடுத்துதல், துரிதமாக கோப்புகளை தயார் செய்தல் போன்ற பணிகளுக்கான குழுவொன்று ஸ்தாபிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# கொலைச்சதி; விசாரணை வளையத்திற்குள் உயர்மட்ட பொலிஸ் அதிகாரிகள்!

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்டவர்களைப் படுகொலை செய்ய சதித் திட்டம் தீட்டியமை தொடர்பாக சிறப்பு அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி உள்ளிட்ட உயர் பொலிஸ் அதிகாரிகளிடம் விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

பாதாள உலகத் தலைவர் மாகந்துரே மதூஸ் உதவியுடன் இந்த சதித் திட்டத்தைத் தீட்டினார் என்று தீவிரவாத தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரியாக இருந்த நாலக சில்வா மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள நிலையில், இது தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சிறப்பு அதிரடிப்படையின் கட்டளை அதிகாரியான பிரதிப் பொலிஸ்மா அதிபர் லதீப் மற்றும் பிரதி பொலிஸ்மா அதிபர் நந்தன முணசிங்க ஆகியோரிடம் நேற்று முன்தினம் விசாரணை நடத்தப்பட்டு வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டன.

இந்த நிலையில் அரச புலனாய்வுச் சேவை பணிப்பாளரான பிரதி பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜெயவர்த்தனவிடம், விசாரணை நடத்தப்பட்டு வாக்குமூலம் பெறப்படவுள்ளது.

நாலக சில்வாவுக்கும் நாமல் குமாரவுக்கும் இடையிலான தொலைபேசி உரையாடலில், பிரதிப் பொலிஸ்மா அதிபர்களான லதீப், முணசிங்க, ஜெயவர்த்தன ஆகியோரின் பெயர்களும் வருவதால், அவர்களிடம் விசாரணை நடத்தி வாக்குமூலம் பெறப்பட வேண்டிய தேவை இருப்பதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-7)

# இலங்கையுடனான நடைமுறை ஒத்துழைப்பு துரித வளர்ச்சி- சீனத் தூதுவர் பெருமிதம்






(கொழும்பு)

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான நடைமுறை ஒத்துழைப்பு கடந்த ஆண்டில் துரிதமாக வளர்ச்சியடைந்துள்ளது என இலங்கைக்கான சீனத் தூதுவர் செங் ஷியுவான் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடந்த சீனாவின் தேசிய நாள் நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளும் சீனர்களின் எண்ணிக்கை இந்த ஆண்டு கணிசமாக அதிகரிக்கும். 2017 இல் 2 இலட்சத்து 60 ஆயிரம் சீனர்கள் இலங்கைக்கு சுற்றுலாப் பயணம் மேற்கொண்டிருந்தனர். இந்த எண்ணிக்கை, 2018 இல் மூன்று இலட்சமாக அதிகரிக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

அதிகமான இலங்கையர்கள், சீனாவுக்குப் பயணம் செய்து கொண்டிருக்கிறார்கள். இலங்கையர்களுக்கு உயர்கல்வி மற்றும் பயிற்சிக்கான முக்கியமான இடமாக சீனா மாறியிருக்கிறது.

கொழும்பு துறைமுக நகருக்கான நிலத்தை மீட்கும் பணிகள் விரைவில் முடிவடையும். அதன் பின்னர் இரண்டாவது கட்ட அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்படும். துறைமுக நகரம், இலங்கையின் அபிவிருத் திக்குப் பெரும் வாய்ப்பாக இருக்கும்.

கடந்த ஒரு ஆண்டுக்கு மேலாக இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான, நட்புறவு தொடர்ந்து விரிவடைந்து வருகிறது. உயர் மட்டப் பயணங்கள் கிரமமாக இடம்பெறுகின்றன.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான நட்புறவு மற்றும் நடைமுறை ஒத்துழைப்பு விடயத்தில் வரலாற்றிலேயே இது மிகச் சிறந்த காலகட்டம்.

எதிர்வரும் நவம்பர் மாதம் சீனா முதலாவது, அனைத்துலக இறக்குமதி, ஏற்றுமதி கண்காட்சியை ஷங்காயில் நடத்தவுள்ளது. இந்தக் கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வில் இலங்கை குழுவுடன் பங்கேற்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அதிகாரபூர்வ அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை தனது ஏராளமான உற்பத்திகளை 1.3 பில்லியன் சீன மக்கள் மத்தியில் பிரபலப்படுத்தும் வாய்ப்பை இது ஏற்படுத்திக் கொடுக்கும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் அமைச்சர் மகிந்த சமரசிங்க, சபாநாயகர் கரு ஜெயசூரிய, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், இராணுவ அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ-7)

# அலோசியஸ், பலிசேனவின் மறியல் நீடிப்பு



அர்ஜுன் அலோசியஸ் மற்றும் கசுன் பலிசேன ஆகியோரை எதிர்வரும் நவம்பர் மாதம் 10 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். பேர்பேச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸ் மற்றும் அந் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் இருவரையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதவான் நேற்று முன்தினம் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணைமுறி விநியோக மோசடி தொடர்பிலேயே இருவரும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

ஏற்க முடியாதவற்றை ஏற்பது எப்படி?

நமக்கென்று சில இரசனைகள் அசைக்க முடியாதபடி அமைந்து விடுகின்றன.

பறங்கிக்காய் பிடிக்காது என்பது முதல் பேருந்தில் போக மாட்டேன் என்பது வரை, நான் இளையராஜாவின் இசையை விரும்பாதவன் என்பது முதல் வேலைக்குப் போவதெல்லாம் நமக்குச் சரிப்பட்டு வராது பிஸினஸ் தான் என்பது வரை சில விடயங்களில் நாம் அசைக்க முடியாதவர்களாக இருக்கிறோம். பிரச்சினை இதோடு முடிவதில்லை.

உலகின் சக்தி வாய்ந்த மனிதரான கிளின்டனுக்குக்கூட அவர் விருப்பப்படி எல்லாமே நடப்பதில்லை.

வேறு வழியே இல்லாத போது கூட ஒரே பிடியாய் பழசையே பிடித்துக் கொள்கிறவர்கள் பாடு கஷ்டம் தான்.

இரவில் தயிர்ச்சாதம் சாப்பிட்டால் தான் என் நண்பருக்குத் தூக்கம் வரும். சொந்த வீட்டில் இது சாத்தியம். போகிற இடங்களிலெல்லாம் தயிர்ச் சாதத்திற்கு எங்கே போவது? நண்பர் பட்டினி கிடப்பாரே தவிர வேறு எதுவும் சாப்பிட மாட்டார். இவர் வெளிநாடு போனால் என்ன செய்வது?

நமக்கு எவரேனும் ஏதும் எடுத்துச் சொன்னால் அது பிடிப்பதில்லை. "எனக்கே புத்தி சொல்ல வந்துட்டியா?'' என்று கோபம் தான் வருகிறது. அந்தப் புத்திமதியில் நன்மை கிடைக்குமானால் ஏற்றுக்கொள்ளலாமே. உடல் நலத்திற்காக இவற்றையெல்லாம் ஏற்றுக்கொள்வதில்லையா?

நல்ல நட்புக்காக, மிக நெருங்கியவர்களுக்காகச் சிறுசிறு கஷ்டங்களையும் நஷ்டங்களையும் ஏற்றுக் கொள்ளக்கூடாதா?

மனைவியோ கணவனோ அழகற்றவர்களாக அமைந்துவிடுகிறார்கள். அவர்களை வெறுத்து ஒதுக்காமல் அவர்களது அன்பிற்காக அவர்களை ஏற்றுக்கொள்ளக்கூடாதா?

தவறுகளை செய்துவிட்டு தப்பிக்கப் பார்ப்பது எந்த வகையில் சரி? அசிங்கம் என்றாலும் அவமானம் என்றாலும் செய்த தவறுக்கான தண்டனையை ஏற்றுக்கொள்ள முன்வர வேண்டாமா?

பிடித்ததை மட்டுமே ஏற்றுக்கொள்வேன்; பிடிக்காதவற்றை அவை எத்தகையை தன்மையை உடையவாக இருந்தாலும்-எவ்வளவு நன்மையை செய்யுமானாலும் ஏற்றுக்கொள்ளவே மாட்டேன் என்று அடியோடு உதறித் தள்ளுபவர்களுக்கு ஒரு வார்த்தை.

அவை உங்கள் மீது வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படும் வாய்ப்பு மிக அதிகம்!

லேனா தமிழ்வாணன்



ஜனாதிபதி மக்கள் சேவை திட்டத்தின் கீழ் உள்நாட்டலுவல்கள்அமைச்சின் ஏற்பாட்டில் “உத்தியோகபூர்வ பணி”எனும் தலைப்பிலான நடமாடும் சேவை தென்மராட்சி பிரதேச செயலக ஏற்பாட்டில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் அமைச்சர் வஜிர அபேவர்த்தன, வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன், சாவகச்சேரி நகரசபை, பிரதேசசபை தவிசாளர்கள், உறுப்பினர்கள், யாழ்.மாவட்ட அரச அதிபர், தென்மராட்சி பிரதேச செயலாளர் உள்ளிட்ட உயரதிகாரிகள் கலந்து சிறப்பித்தனர். இந் நிகழ்வில் மாணவர்களுக்கான பரிசில்களும் தெரிவு செய்யப்பட்ட வறுமைக்கோட்டுக்குட்பட்டவர்களுக்கு தையல் இயந்திரமும் வழங்கப்பட்டன. (படங்கள்:-விஜயவாசன், சுபேசன்)

# வடக்கு மாகாண பண்பாட்டு பெருவிழா பண்டாரவன்னியன் ம.வித்தி.கலையரங்கில்

## இன்றும் நாளையும் நடைபெறும்

(மல்லாவி )

வடக்கு மாகாண பண்பாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண பண்பாட்டு பெருவிழா 2018, இரண்டு நாள் நிகழ்வுகளாக இம்முறை ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கற்சிலை மடுக் கிராமத்தில் உள்ள மு/பண்டாரவன்னியன் மகா வித்தியாலய கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இதன்போது முதலாம் நாள் நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை இரண்டு அமர்வுகளாக வடக்கு மாகாண பண்பாட்டு திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி. பா.அபிராமி தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன்போது தமிழர் தம் பண்பாட்டு விழுமியங்களை தாங்கிய இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழ் கலை கலாசார நிகழ்வுகளை பல்வேறு துறைசார்ந்த கலைஞர்கள் அரங்கேற்றவுள்ளனர்.

இதன் முதலாவது அமர்வு காலை9.30,மணிக்குமேற்படி வித்தியாலய "அண்ணாவியார் இரத்தினம் ஞாபகார்த்த கலையரங்கில்" நடைபெறவுள்ளது.

இரண்டாவது அமர்வு பிற்பகல் 2 மணிக்கு மேற்படி வித்தியாலய "லீலாம்பிகை செல்வராஜா ஞாபகார்த்த கலையரங்கில்" நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராகவடக்குமாகாண கல்வி அமைச்சர் கலாநிதி. கந்தையா சர்வேஸ்வரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி. சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராகவடக்குமாகாண சபையின் முதலமைச்சர் சி. வி. விக்னேஸ்வரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இந்த இரண்டு நாட்கள் நடைபெறும்பண்பாட்டு விழாவின்போதும், வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கலாநிதி. கந்தையா சர்வேஸ்வரன், வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பல்வேறு திணைக்களங்களின் தலைவர்கள், அதிகாரிகள், பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பொதுமக்கள், வர்த்தகர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலதரப்பட்டவர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்கள். (2-15)

# மின்சாரம் தாக்கி முதியவர் உயிரிழப்பு

(மல்லாவி )

வவுனியா மாவட்டத்தின் பூவரசங்குளம் பொலிஸ் நிலையப் பிரிவிற்குட்பட்ட குருக்கள் புதுக்குளம் கிராமத்தில் அதி சக்தி வாய்ந்த மின்சாரம் தாக்கி முதியவர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளதாக பூவரசங்குளம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம்வியாழக்கிழமை காலை 7.40, மணியளவில்நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

மின்சாரவயரில்தென்னை மரத்தின் ஓலைகள் தொடுவதை அவதானித்த முதியவர் அதை வெட்டிய போது ஓலை ஒன்று அருகே இருந்த அதி சக்தி வாய்ந்த மின்சாரக் கம்பிகளின் மீது விழுந்ததுடன் முதியவர் மீது மின்சாரம் பாய்ந்ததில் அவர் தூக்கி வீசப்பட்ட நிலையில் உடனடியாக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அனுமதிக்கப்பட்டார். பரிசோதனை செய்த வைத்தியர்கள் அவர் ஏற்கனவே உயிரிழந்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தில் வவுனியா குருக்கள் புதுக்குளம் பூவரசங்குளம் என்ற முகவரியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை - தங்கராசா வயது - 65, என்ற முதியவரே மின்சாரம் தாக்கி உயிரிழந்தவராவார்.(2-15)

# ஜனாதிபதி கொலைச்சதி

# கைது செய்யப்பட்ட இந்தியரின் நடவடிக்கை குறித்து சந்தேகம்

## சட்டம் ஒழுங்கு அமைச்சர்



(கொழும்பு)

ஜனாதிபதி கொலைச்சதி முயற்சி தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள இந்தியப் பிரஜையின் நடவடிக்கைகள் குறித்து சந்தேகம் எழுந்துள்ளதாக சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குடும்பத்தவர்களையும் கொலை செய்வதற்கான சதி முயற்சியுடன் தொடர்புபட்டவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ள தோமஸ் என்ற இந்திய பிரஜை தொடர்பிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தோமஸ் என்ற இந்திய பிரஜையும் அவரது குடும்பத்தினரும் இலங்கையில் எந்த வித வருமானமும் இன்றி ஒன்றரை வருடங்களாக வாழ்ந்து வந்துள்ளனர் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கைதுசெய்யப்பட்டுள்ள இந்திய பிரஜை குறித்து சி.ஐ.டியினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் எனவும் தெரிவித்துள்ள அமைச்சர் அவருடைய சகாக்கள் யார் என்பது குறித்து விசாரணைகள் இடம்பெறுவதாகவும் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒன்றரை வருடங்களாக அவர் யாருடன் தொடர்பிலிருந்தார் என்பதை கண்டறிவதற்காக அவருடைய தொலைபேசி உரையாடல்கள் குறித்து ஆராயப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கைது செய்யப்பட்ட நபர் தொடர்பில் சி.ஐ. டியினர் இந்திய பொலிஸாருடன் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என சி.ஐ.டி. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை மற்றுமோர் ஊடகத்திற்கு கருத்து தெரிவித்துள்ள சட்டம் ஒழுங்கு அமைச்சர் அச்சு இலத்திரனியல் ஊடகங்கள் பொய்யான தகவல்களை பொது மக்களுக்கு வழங்குகின்றன எனவும் குற்றம்சாட்டியுள்ளார்.

முக்கிய தலைவர்கள் கொலை முயற்சி தொடர்பில் உறுதிப்படுத்தப்படாத ஆதாரமற்ற தகவல்கள் ஊடகங்களில்வெளியாகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

விசாரணைகள் இடம்பெறுவதன் காரணமாகவே அரசாங்கம் இந்த விடயம் குறித்து கருத்து தெரிவிக்காமலிருந்தது. எனினும் அரசியல் நோக்கங்களை அடிப்படையாக கொண்ட செய்திகள் ஊடகங்களில் வெளியாகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பல ஊடக நிறுவனங்கள் தங்களிற்கு வழங்கப்பட்ட சுதந்திரத்தை கண்மூடித்தனமாக பயன்படுத்துகின்றன எனவும் சட்டமொழுங்கு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் திணைக்களத்திற்கு சொந்தமான சினைப்பர் காணாமல்போனமை குறித்து தகவல்கள் வெளியாகியுள்ளன. எனினும் பொலிஸ் திணைக்களம் அவ்வாறான குற்றச்சாட்டை மறுத்துள்ளதுடன் சி.ஐ.டியினருக்கு ஆயுதங்கள் எதனையும் வழங்கவில்லை எனவும் ரஞ்சித் மத்தும பண்டார மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# பயங்கரவாத குற்றச்சாட்டில் கைதான நிசாம்தீன் பிணையில் விடுவிப்பு



(சிட்னி)

அவுஸ்திரேலியாவில்கைது செய்யப்பட்ட இலங்கைப் பிரஜையான 25 வயதுடைய மொஹமட் நிசாம்தீன் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

சிட்னி பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் இவர், ஐ.எஸ். தீவிரவாத அமைப்பின் சார்பாக சிட்னி நகரை குண்டு வைத்துத் தகர்த்தல் மற்றும் அவுஸ்திரேலியாவின் முன்னணி ஆளுமைகளைப் படுகொலை செய்தல் ஆகிய குற்றச்செயல்களுக்கான திட்டங்களைத் தீட்டிய குற்றச்சாட்டில் கடந்த ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அரசியல் முக்கியஸ்தர்களுக்குப் பாதுகாப்பு மகிந்த தனது ஆட்சியில் வழங்கினாரா?

## ஐ.தே.க.எம்.பி. கவின்த கேள்வி

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வருவதற்கு எவ்விதமான தார்மீக உரிமையும் கூட்டு எதிர்க்கட்சிக்கு கிடையாது எனப் பாராளுமன்ற உறுப்பினர் கவின்த ஜெயவர்தன தெரிவித்தார்.

மேலும் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு காணப்படுகின்ற பாதுகாப்பே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் அரசியல் முக்கியஸ்தர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் என்ற விடயத்தை மகிந்த அவரது காலத்தில் பின்பற்றினாரா.



முறையற்ற செயற்பாடு மற்றும் பதவி துஷ்பிரயோகம் போன்ற விடயங்களுக்கு நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவர வேண்டுமாயின் கடந்த அரசாங்கத்தில் பலருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வந்திருக்க வேண்டும்.

தேசிய அரசாங்கத்தில் பொலிஸ் ஆணைக்குழு சுயாதீனப்படுத்தப்பட்டுள்ளது. இது வரைக்கும் பொலிஸ்மா அதிபர் எவ்விடயத்திலும் அரசியல் தொடர்பில் கருத்துக்களை வெளியிட்டது கிடையாது. இவரது செயற்பாட்டின் காரணமாக நாட்டின் தேசிய பாதுகாப்பில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமையினை ஏற்றுக் கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)




நல்லூர் பிரதேச மூத்தோர் பேரவையின் தலைவர் சு.பரம்சோதி தலைமையில் கடந்த 24 ஆம் திகதி முதியோர் ஆன்மீகச் சுற்றுலா மேற்கொண்டனர். இச்சுற்றுலாவின் போது நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனை, திருக்கேதீஸ்வர ஆலயம், மன்னார் மடுமாதா ஆலயம் என்பன தரிசிக்கப்பட்டன.



கோண்டாவில் ஞானவீர முன்பள்ளிக்கு புதிய கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்றுக் காலை இடம்பெற்றது. இந்நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டு கட்டடத்துக்கான அடிக்கல்லை நாட்டிவைத்தார். (படங்கள்:-கிஷோர்)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்


## எண் 7 (கேது)

### (தன்வழி நடப்பவர்கள்)

எதையாவது எப்போதும் எதிர்ப்பதிலேயே குறிக்கோளாக இருப்பார்கள். எதிர்ப்பதே இவர்களுக்கு உற்சாகமூட்டும். துன்பம் அதிகமானால் தீவிரவாதியாக மாறிவிடுவார்கள். எல்லாத்துறைகளிலும் இவர்களுக்குக் கண்டிப்பாக எதிர்ப்புகள் இருந்து கொண்டேயிருக்கும். இவர்களுடைய நியாயமான வெற்றிகள்கூட மற்றவர்களைப் பொறாமைப்பட வைக்கும். இந்தக் கேது ஆதிக்கத்தினருக்கு மனதிற்கு இசைந்த மனைவி அமைவது கடினம். எதிர்மறையான கொள்கை கொண்ட மனைவி அமைந்து விடும். குழந்தை பிறக்காமையாலும், பல்வேறு குடும்ப கஷ்டத்தாலும் மிகவும் துன்பத்திற்கும் சோகம் சூழ்ந்த வாழ்க்கைக்கும் ஆளாவார்கள்.

மனம் நொந்து போன வாழ்வு அமைந்துவிடும். மிகவும் துரதிர்ஷ்டசாலிகள். இந்த எண் பெண்கள் தனது அந்தஸ்துக்கு மீறிய ஆணையே மணப்பார்கள். மிகவும் அழகாகவும், சிலர் அங்க வளர்ச்சி குறைவாகவும் அமைவார்கள். நல்ல உழைப்பாளிகள். எப்போதும் வேலையிலேயே மூழ்கிக் கிடப்பார்கள். சூழ்நிலை சரியாக அமைந்தால் பெரிய காரியங்களைச் சாதிப்பார்கள். குறிப்பிட்ட ஒரு சிலர் தான் நெருங்கிய நண்பர்களாக இருப்பார்கள். சில கேது ஆதிக்கத்தினர் உலகமே மாயை, உலகத்தவர்கள் அனைவரும் ஏமாற்றுக்காரர்கள் என்றும் எண்ணுவார்கள். கேது ஆதிக்கத்தில் பிறந்த சிலர் "விதி என்னை சதா சதி செய்கிறது" என்று புலம்புவார்கள். உள்ளே ஒன்று வைத்து உதட்டளவில் பேசக்கூடத் தெரியாது. ஆதலால் இவர்களிடம் நண்பர்கள் அதிகம் சேர மாட்டார்கள். சிலநேரம் கண்டிப்புடனும், கடுமையாகவும், அழுத்தமாகவும் பேசுவார்கள். நயமாகப் பேசிப் பழகத் தெரியாததால் இவர்களிடம் நண்பர்கள் அதிகமாக ஒட்ட மாட்டார்கள். இவர்கள் முகம் சோகம், அமைதி, சிந்தனை, கலையுணர்வு என்று மாறிமாறிக் காணப்படும். திருமணத் தடைகளால் மிகவும் வருத்தப்படுவார்கள். அப்படித் திருமணம் ஆனாலும் மனைவி சரியாக அமையாமல் துன்பப்படுகின்றனர்.

உடல்பலத்தை விட மனபலத்தை விருத்தி செய்து கொள்ள வேண்டும். சிலர் துன்பம் வந்தாலும் பெரிதாகி விடுமோ என்று கற்பனை செய்து கலங்குவார்கள். எதிர்காலத்தைப் பற்றிய பயம் இருந்து கொண்டேயிருக்கும். சகஜமாக இவர்கள் பிறரைப் பின்பற்றவே மாட்டார்கள். எந்த தொழிலில் ஈடுபட்டாலும் சுதந்திர மனப்பான்மையுடன், பிரத்தியேகமான கருத்துக்களைச் செயல்படுத்தி வெற்றி பெறுவார்கள். சுலபமாக மக்கள் இவர்களைப் பின்பற்றுவார்கள். பொதுவாழ்க்கையில் புகழ் பெற்று விளங்கும் இவர்களின் சுய வாழ்க்கை சுகமற்றுப்போகும். இவர்கள் வாழ்க்கை அனுபவத்தில் ஒருவிதக் காந்தசக்தி தன்னுடன் இருப்பதாக உணர்வார்கள். பலபேர் கவர்ச்சி இருந்தும் துரதிர்ஷ்டசாலியாகவே இருக்கின்றனர். பிறவியிலேயே அபூர்வமான மூளை படைத்தவர்கள். உழைப்பால் மேன்மை அடைகின்றனர்.




மகான்களாகவும், மேதாவியாகவும் மாறிய இவர்கள் அனைவரும் உழைப்பால் உயர்ந்தவர்கள். இவர்களில் பலபேருக்கு கனவுகள் சகஜமாகப் பலிதமாகும். பலபேருக்குக் கனவில் தெய்வீகக் காட்சிகள் உருவாகும். இவர்களுக்கு எளிதில் சித்தி கிடைப்பதில்லை. பயங்கரமான போராட்டத்திற்குப் பின்னர்தான் சித்தியடைவார்கள். முற்றுப்பெறாத ஆசைகளுடன் வாழப் பிறந்தவர்கள். வாழ்வின் இறுதிவரை ஏதாவது குறை இருந்து கொண்டிருக்கும். சாதாரண விடயத்திலும் முடிவில் வெற்றி பறிபோகும் துரதிர்ஷ்டசாலிகள். எதிலும் பின்வாங்குவாங்கும் அம்சமும் இவர்களிடம் காணப்படும்.

பெரிய காரியத்தில் இறங்கி அந்தஸ்துக்கு ஒத்துவராத அற்பக் காரியங்களையும் செய்வார்கள். இவர்கள் சுயநலமில்லா மல் ஈடுபடும் எந்தக் காரியமும் வெற்றி பெறும். இவர்கள் பெயர் அமரத் தன்மை அடையும். புகழ் எட்டுத்திக்கும் பரவும். சரீர சுகத்தைத் தியாகம் செய்த மனிதர்களுக்கு இவ்வுலகமே வசியமாகும். புகழ், வெற்றிகள் மலைபோலக் குவியும். இவர்களுடைய மேலான ஆசைகள் நிறைவேறும். குழந்தை மனத்துடன் செயற்பட்டால் எண்ணிய எண்ணமெல்லாம் ஈடேறும். கேது ஆதிக்கத்தினர் சிலபேர் மிகுந்த சுயநலத்தால் வாழ்க்கையில் முக்கிய சம்பவத்தின் போது நண்பர்களால்கூட கைவிடப்படுகின்றார்கள். மற்றவர்கள் மனதை புண்படும் அளவு பேசி சச்சரவில் மாட்டிக் கொள்கின்றனர். திருமண பந்தத்தில் அதிகமாக பிரிவினையை சந்திக்கவே செய்கின்றனர். தங்களுடைய பிடிவாத குணத்தால் மிகவும் துன்பத்திற்கு ஆளாகின்றனர். இவர்கள் மனதைப் புரிந்து கொண்ட வாழ்க்கைத்துணை அமைவதில்லை. தாம்பத்திய சுகத்தை முழுமையாக இவர்கள் அனுபவிக்க இவர்களின் ஞானத்தைத் தேடும் புத்தி தடையாக அமைந்து விடுகின்றது. பலருக்கு அவர்களின் வாய்ப் பேச்சும், அவசரப்புத்தியும் பெரும் துன்பத்தை வரவழைக்கின்றது. சமுதாயத்திற்கு எச்சரிக்கை விடும் வேதாந்திகள். தன்னிலை மறந்து தகாத செயல்களில் ஈடுபடும் மனித சமுதாயத்தை திருத்தி தெய்வீக நம்பிக்கையை ஊட்டும் ஆன்மீகவாதிகள். மக்களை ஆன்மீக வழியிலும், அகிம்சை வழியிலும் நடத்தும் மகான்கள் ஆவார்கள்.

(தொடரும்....)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

56



பாண்டிய அரசு தென்னிந்தியாவில் வீழ்ச்சியுற்றதனால், யாழ்ப்பாண இராச்சியத்தில் நீண்ட காலம் வலிமையுடன் ஆட்சிசெய்த இராமேஸ்வர ஆரியச்சக்கரவர்த்திகள் யாவரும் தொடர்ந்து யாழ்ப்பாண அரசை ஆட்சி செய்யாது, திரும்பவும் இராமேஸ்வரத்துக்குப் போய்விட்டார்கள் என்று கொள்ளலாகுமா? மேலும், போர்த்துக்கீசர் யாழ்ப்பாண இராச்சியத்தில் தலையிடும் காலமாகிய பதினாறாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில், அதாவது 1560களில் மன்னார் போர்த்துக்கீசர்வசம் வந்த போது, யாழ்ப்பாண இராச்சியத்தில் வலுவுடனிருந்த முதலாவது சங்கிலிமன்னன் பலத்த எதிர்ப்புக் கொடுப்பதை போர்த்துக்கீச ஆவணங்கள் காட்டி நிற்கின்றன.

1560களில் மன்னாரைக் கைப்பற்றிய போர்த்துக்கீசர், பின்னர் 1619ஆம் ஆண்டில்தான் இரண்டாம் சங்கிலி மன்னனைச் சிறைப்பிடித்து சிரச்சேதம் செய்துவிட்டு, யாழ்ப்பாண இராச்சியத்தைத் தம்வசமாக்க முடிந்தது.

இந்த இரு தமிழ் மன்னர்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் புவிராஜபண்டாரம், காசி நயினார், பெரியபிள்ளை, எதிர் மனசிங்கன் போன்ற மன்னர்கள் யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்டிருக்கின்றார்கள். அவ்வாறெனின், ஏன் மேற்கூறப்பட்ட சங்கிலி மன்னரும், மற்றைய தமிழ் மன்னரும் ஆரியச் சக்கரவர்த்திகள் என்ற வம்சப் பெயரிட்டு அழைக்கப் படவில்லை? அவர்களையும் ஆரியச்சக்கரவர்த்திகள் என்று அழைத்திருக்கலாம் அல்லவா?

ஏனெனில் போர்த்துக்கீச ஆவணங்களில் சங்கிலி மன்னன் என்றே யாழ்ப்பாண இராச்சிய மன்னன் குறிப்பிடப்பட்டிருக்கின்றான். ஏனைய மன்னர்களின் பெயர்களும் உள்ள்வாறே இடம் பெறுகின்றன. இதனால் பதினேழாம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் எழுதப்பட்டதாகக் கருதப்படும் கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவ மாலை போன்றவற்றின் நூலாசிரியர்களால் தமது பாரம்பரிய வரலாற்று மரபைப் பேணமுடியவில்லை போலும்.

வரலாற்று ஆதாரங்கள் கிடைக்கப்படாத ஒரு நிலையில், தமிழ் வரலாற்று நூல்கள் வாய்வழி வந்த கதைகளையும் ஐதீகங்களையும் அடிப்படையாகக் கொண்ட, சிங்கள, தென்னிந்திய வரலாற்று மரபுகளைப் பின்பற்றி தமிழ்நாட்டிலிருந்து வந்த ஆரியச்சக்கரவர்த்தி வம்சம் யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்டதாகக் கதையை வழி நடத்தியிருக்கலாம் எனக் கொள்ள முடிகிறது.

மேற்கூறப்பட்டவற்றின் அடிப்படையில் இலங்கைத் தமிழர்கள் தான் யாழ்ப்பாண அரசையும், தொடர்ந்து யாழ்ப்பாண இராச்சியத்தையும், அதன் முடிவுவரை தொடர்ச்சியாக ஆட்சி செய்திருக்கலாம்

“குறிப்பாக, வடமேற்குப் பிரதேசத்தின் புத்தளம், கற்பிட்டி, சிலாபம் உள்ளி ட்ட பகுதிகள், வடமத்திய பிரதேச மாகிய அநுராதபுரம், பொலநறுவை ஆகிய பகுதிகள், வவுனியா மாவட்டத்தின் தெற்குப் பகு திகள், இலங்கை சுதந்திரம் அடை ந்த பின்னர் நடைபெற்ற திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத் திட்டங்களின் விளைவாகச் சிங்கள மயமாக்கப்பட்டிருக்கின்றன”

## யாழ்ப்பாண இராச்சியமும் வன்னிச் சிற்றரசுகளும் (கி.பி. 1200-கி.பி. 1500)

என்றே கருதமுடிகிறது.

இடையிடையே வலுவுள்ள வேறு ஆதிக்க ஆட்சியாளர்களினால் யாழ்ப்பாண அரசும், யாழ்ப்பாண இராச்சியமும் ஆளப்பட்டிருக்கலாம். எதிர்கால அகழ்வாராய்ச்சிகளும், மேலாய்வுகளும் வரலாற்றுத் தேடல்களுமே மேற்கூறப்பட்ட அனுமானங்களுக்குப் பதில் காண வேண்டும்.

### வன்னிச் சிற்றரசுகள்

யாழ்ப்பாணப் பிரதேசத்தின் வரலாற்றைப் போன்றே வன்னிப் பிரதேச வரலாறும் மிகத் தொன்மை வாய்ந்தன.

வன்னி என்பது இலங்கையின் நிலப்பரப்பில் பெரும் பாகத்தில் பரந்து கிடக்கும் வரட்சிப் பிரதேசங்களை உள்ளடக்கிய, காடு சார்ந்த பிரதேசங்களைக் குறிக்கும் ஒரு பொதுச் சொல்லாகும்.

வன்னி என அழைக்கப்படும் சிற்றரசுகள் இலங்கையின் வடக்கு, கிழக்கு, வடமேற்கு, வடமத்திய, தெற்குப் பகுதிகளிலெல்லாம் இலங்கையின் வரலாற்றுக் காலந்தொட்டு இருந்திருக்கின்றன. இலங்கையின் வடமத்திய கால வரலாற்றில் முக்கியத்துவம் பெறும் யாழ்ப்பாணம், கண்டி, கோட்டை இராச்சியங்களில் பல்வேறுபட்ட இராச்சியங்களின் ஆதிக்கத்தின் கீழும், சில சிற்றரசுகள் மேற்கூறப்பட்ட இராச்சியங்களின் ஆதிக்கத்தின் கீழும், சில சிற்றரசுகள் சுதந்திரமாகவும் இருந்திருப்பதை அறியமுடிகிறது.

தற்கால நடைமுறையில் வன்னி என்னும் பெயர் சிறப்பாக இலங்கையின் வடக்கிலுள்ள வன்னிப் பெரு நிலப்பரப்பாகிய கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களையே குறிப்பதாகக் காணப்படுகின்றது.

ஆனால் வன்னிப் பிரதேசம் எனப் பொதுப்படக் கருத்திற்கொள்வது மேற்கூறப்பட்ட ஒரு பரந்த பிரதேசத்தையேயாகும். இதனால், இலங்கைத் தமிழர்களின் வன்னிப் பிரதேசமாகிய கிளிநொச்சி, முல்லைத் தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, புத்தளம் ஆகிய வன்னிப் பிரதேசங்களிலுள்ள சிற்றரசுகள் பற்றியதாக இப் பகுதி இடம்பெறுகின்றது.

அத்தோடு யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாற்றோடு பின்னிப் பிணைந்ததாக இவ்வன்னிப் பிரதேச வரலாறு காணப்படுகின்றது. மேலும், யாழ்ப்பாண இராச்சியம் கி.பி பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்து வலிமை பெறத் தொடங்கியதிலிருந்து, அவ் இராச்சியத்தின் கீழ் மேற்படி வன்னிச் சிற்றரசுகள் இயங்கி வந்திருக்கின்றன.

குறிப்பாக கி.பி. பதினான்காம் நூற்றாண்டில் யாழ்ப்பாண இராச்சியம் மிக வலிமை பொருந்திய அரசாக எழுச்சி பெற்ற கால கட்டத்திலிருந்து, அது ஐரோப்பியர்களான போர்த்துக்கீசரின் ஆதிக்கத்துக்கு உட்படும் காலம்வரை, வன்னிச் சிற்றரசுகள் பொதுவாக, யாழ்ப்பாண இராச்சியத்தின் கீழ் அதன் ஆணையை ஏற்றுநடக்கும் ஒரு நிலையிலேயே இருந்திருக்கின்றன என்று கூறுவதில் தவறு இருக்க முடியாது

இருந்தும், மற்ற இரு இராச்சியங்களான கண்டி, கோட்டை இராச்சியங்கள் பலம்பெற்ற வேளைகளில், இடையிடையே குறிப்பாக, கிழக்கில் உள்ள வன்னிச் சிற்றரசுகள் மேற்படி இராச்சியங்களின் மேலாண்மையை ஏற்ற நிலைமையினையும் காண முடிகிறது.

எது எப்படியிருப்பினும், வரலாற்றுக் காலத்திலிருந்து, இலங்கையின் வடக்கு, கிழக்கு, வடமத்திய, வடமேற்குப் பிரதேசங்கள் தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களாக இருந்து வந்திருக்கின்றன என்பது முன்னைய அத்தியாயங்களில் மிகவும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

இப் பிரதேசங்கள் இலங்கையின் மத்திய காலத்திலும், அதனைத் தொடர்ந்தும் தமிழர் வாழ்கின்ற பிரதேசங்களாகவே இருந்து வந்திருக்கின்றன. ஆனால் குறிப்பாக, வடமேற்குப் பிரதேசத்தின் புத்தளம், கற்பிட்டி, சிலாபம் உள்ளிட்ட பகுதிகள், வடமத்திய பிரதேசமாகிய அநுராதபுரம், பொலநறுவை ஆகிய பகுதிகள், வவுனியா மாவட்டத்தின் தெற்குப் பகுதிகள், இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் நடைபெற்ற திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத் திட்டங்களின் விளைவாகச் சிங்கள மயமாக்கப்பட்டிருக்கின்றன.

மேலும், இப்பிரதேசங்களில் வாழ்ந்த தமிழர் சிங்களவர்களாகவும், முஸ்லிம்களாகவும் மாறியிருக்கின்றார்கள் அல்லது மாறும் சூழ்நிலைக்கு இட்டுச் செல்லப் பட்டிருக்கிறார்கள் எனவும் கூறலாம். இவைபற்றிப் பிறிதோர் அத்தியாயத்தில் விரிவாக விளக்கப்படும்.

வன்னி, வன்னியர் என்ற சொல் இலங்கையிலும், தென்னிந்தியாவில் தமிழ்நாட்டிலும் உபயோகிக்கப்படுகின்ற ஒரு பொதுவான பெயராக இருப்பதைக் காணமுடிகிறது. வன்னியர் அல்லது வன்னி என்ற சொற்பதம் 'வன்ய' என்ற சமஸ்கிருதச் சொல்லின் தமிழ் வடிவமாகும். 'காடவன்' என்னும் தமிழ்ச்சொல் சமஸ்கிருதத்தில் 'வன்ய' என அமையும்.

(தொடரும்)

# முதலாவது பாராளுமன்றத் தேர்தலின் பின் நடந்த
# அரசியல் மாற்றங்களும் தமிழர் பிரச்சினையும் 04



கலாநிதி
க. தவலிங்கம்,
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு

ஆரம்பத்திலிருந்தே தேசிய கீதம் பொது வைபவங்களில் தேவைக்கேற்ப சிங்களம் அல்லது தமிழ் மொழியில் பாடப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கதாகும். ஆரம்ப காலங்களில் சுதந்திர தின நிகழ்வுகளில் தேசியகீதம் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் பாடப்பட்டு வந்தது. பின்னர் சிங்கள மொழியில் மட்டும் பாடப்பட்டது.

தமிழ் மொழிபெயர்ப்பை உத்தியோகபூர்வமாக நீக்க இலங்கை அரசின் அமைச்சரவை கலந்துரையாடல்களை டிசெம்பர், 2010 இல் நிகழ்த்தியது. இதற்கு இலங்கைத் தமிழ்க் கட்சிகள் கண்டனம் தெரிவித்தன. இதன் பின்னர் தமிழ்மொழி தேசிய கீதத்தை நீக்கும் உத்தேசம் தமக்கு இல்லை என இலங்கை அரசு அறிவித்தது. 2015 இல் புதிதாகப் பதவியேற்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமிழில் தேசிய கீதம் பாடுவதைத் தடை செய்யப் போவதில்லை எனத் தாம் சுற்று நிருபம் ஒன்றை வெளியிடவிருப்பதாக 2015ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் அறிவித்தார்.

இவ்வறிவிப்பு பௌத்த தேசியவாதிகளின் கண்டனத்திற்கு உள்ளானது. தற்போது இலங்கையின் சுதந்திரதின விழாக் கொண்டாட்டங்களின் முடிவில் தேசிய கீதம் தமிழிலும் பாடப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.



INDEPENDENCE COMMEMORATION

*February 4, 1949*

NATIONAL SONGS

In Sinhalese and Tamil to be sung on the occasion of the Inauguration of the Independence Memorial Building at Torrington Square

சுதந்திர ஞாபகார்த்தம்–பிப்ரவரி 4, 1949

முதலாவது சுதந்திர தின நிகழ்வில் இரு மொழிகளிலும் பாடுவதற்கு கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்


ஆரம்பத்தில் பி. பி. இலங்கசிங்க, லயனல் எதிரிசிங்க என்னும் இருவரால் எழுதப்பட்ட "ஸ்ரீலங்கா மாதா பல யச மஹிமா" என்று தொடங்கும் பாடல் தெரிவு செய்யப்பட்டு, 1948 பெப்ரவரி 4ஆம் திகதி இலங்கையின் சுதந்திர நாளன்று வானொலியிலும் ஒலிபரப்பப்பட்டது. இரண்டாவது, மூன்றாவது சுதந்திர தினங்களில் ஆனந்த சமரக்கோனின் பாடல் உத்தியோகபூர்வமற்ற முறையில் பாடப்பட்டு வந்தன. 1950இல் அக்காலத்தில் நிதியமைச்சராக இருந்த ஜே. ஆர்.ஜெயவர்த்தனவின் ஆலோசனையை ஏற்று ஆனந்த சமரக்கோனின் "நமோ நமோ மாதா" என்று தொடங்கும் பாடலைத் தேசியகீதமாக ஏற்க முடிவு செய்யப்பட்டது.1951 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22 ஆம் திகதி இதற்கு முறைப்படியான அங்கீகாரமும் கிடைத்தது. இப்பாடலுக்கான இசையும் ஆனந்த சமரக்கோன் அமைத்ததே. தொடர்ந்து வந்த நாட்டின் நான்காவது சுதந்திர தினத்தன்று இப் பாடல் முதல் முதலாக பாடப்பட்டு வானொலி மூலம் நாடெங்கும் ஒலிபரப்பட்டது. 1956இல் எஸ்.டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கவின் அரசாங்கத்தின் காலத்தில் இப் பாடலின் ஆரம்ப வரிகள் நமோ நமோ என ந என்னும் எழுத்துடன் தொடங்குவது அபசகுனம் என்றும், அது நாட்டுக்கு துரதிர்ஷ்டத்தைக் கொண்டு வரும் என்றும் ஒரு பகுதியினர் குரல் எழுப்பினர். தொடர்ந்து வந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சியின்போது, 1961 இல், செல்வத்தைக் குறிக்கும் ஸ்ரீ என்னும் மங்கள எழுத்துடன் தொடங்கும், ஸ்ரீலங்கா மாதா என்ற வரி முதல் வரியாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டது. இப்பாடலை எழுதிய ஆனந்த சமரக்கோன் இந்த மாற்றத்தைக் கடுமையாக எதிர்த்தார் என்றும் இது தொடர்பான விமர்சனங்களுக்குப் பதிலளித்துப் பல கட்டுரைகளை அவர் எழுதியதாகவும் கூறப்படுகின்றது. எனினும் இம் முயற்சியில் அவர் வெற்றியடையவில்லை. இப்பாடல் பின்னர் பொருள் மாறுபடாமல் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டது. 1950ஆம் ஆண்டில் தமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி தமிழ்மொழிக்கு மொழிபெயர்த்தார்.

### தமிழ்க் காங்கிரசின் பிளவும் தமிழரசுக் கட்சியின் தோற்றமும்

1948ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சியால் அமைக்கப்பட்ட முதலாவது அரசாங்கத்தில் சேர்ந்து கொண்டதும், மலையகத் தமிழரின் குடியுரிமை பற்றிய பிரச்சினைகளில் ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் அணுகுமுறைகளையும் ஏற்றுக் கொள்ளாத எஸ்.ஜே.வி.செல்வநாயகம் மற்றும் சில தலைவர்கள் தமிழ்க் காங்கிரஸிலிருந்து வெளியேறினர். எஸ்.ஜே.வி.செல்வநாயகத்துடன் மற்றைய பாராளுமன்ற உறுப்பினரான சி. வன்னியசிங்கம் மற்றும் செனட்டர் டாக்டர் இ.மு.வி. நாகநாதன் ஆகியோரும் வெளியேறியது குறிப்பிடத்தக்கதாகும். தமிழ்க் காங்கிரஸில் இருந்து பிரிந்த எஸ்.ஜே.வி.செல்வநாயகம், வன்னியசிங்கம், நாகநாதன் முதலிய தலைவர்கள் தமிழரசுக் கட்சி என அழைக்கப்பட்ட சமஷ்டிக் கட்சியை (**Federal Party**) 1949இல் உருவாக்கினர். தமிழ்க் காங்கிரஸைவிட தமிழ்த்தேசியவாத கட்சியாக அடையாளம் காணப்பட்ட இக் கட்சியின் செல்வாக்கு வளர்ந்தபோது தமிழ்க் காங்கிரசின் செல்வாக்குக் குறையத் தொடங்கியது.

### இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் ஆரம்ப மாநாடு

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் ஆரம்ப மாநாடு மருதானையிலுள்ள அரசாங்க இலிகிதர் சேவைச் சங்க மண்டபத்தில் 18-12-1949 அன்று நடந்த போது, கட்சியின் ஸ்தாபகத் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அதன் முதல் தலைவராக தெரிவுசெய்யப்பட்டார். அவரின் அன்றைய சொற்பொழிவு புத்தகத்தொடராக வெளியிடப்பட்டது.



I. T. A. K. Booklet Series No. 1.

Presidential Address

of

Mr. S. J. V. Chelvanayagam, K. C.,

Member of Parliament—Ceylon.

delivered at

The Inaugural and

First Business Meeting

of

THE ILANKAI TAMIL ARASU KADCHI

(The Federal Freedom Party of the Tamil-speaking People of Ceylon)

on 18th December, 1949,

at

the G. C. S. U. Hall, Colombo.

Price Cts. 50

1951ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் திருகோணமலையில் நடைபெற்ற தமிழ் அரசுக் கட்சியின் முதலாவது மாநாட்டில் சமஷ்டி ஏற்பாடு ஒன்றைக்கோரும் தீர்மானம் உட்பட பல தீர்மானங்களை நிறைவேற்றியது. அவை கீழே கூறப்பட்டுள்ளன.

1.தமிழ் பேசும் மக்கள் ஒரு தேசிய இனமெனக் கணிக்கப் பெறுதற்கு அவர்களுக்குள்ள மறுக்கவொண்ணா உரித்துவத்தை எடுத்துரைப்பதுடன், அரசியல் சுயாதீனம் பெறுதற்கு அவர்களுக்குள்ள உரிமையும், சிங்களவர்களுடன் சமஷ்டியமைப்பு முறையில் இணைவதற்கு அவர்களுக்குள்ள விருப்பையும் இம் மாநாடு பிரகடனப்படுத்துகிறது எனக் கூறிடும் தீர்மானம்.

2.சோல்பரி அரசியலமைப்புத் திட்டம் அறிவுக்கொவ்வாதெனவும், தமிழ் பேசும் மக்களை அடிமை கொள்வதற்கேதுவானதெனவும் இம் மாநாடு கண்டிக்கிறது எனக் கூறிடும் தீர்மானம்.

3.தற்போதைய அரசியலமைப்பின் கீழ் தமிழ் பேசும் மக்களும் அரசியல் அவமதிப்பையும் குடியுரிமைச் சட்டங்களின் கீழ் அவர்களுக்கேற்பட்ட அவமானத்தையும் இம் மாநாடு கண்டிக்கிறது எனக் கூறிடும் தீர்மானம்.

4.தற்போதைய அரசியலமைப்புத் திட்டங்களின் கீழும் தற்போதைய அரசாங்கத்தின் கீழும் தமிழ் மொழியும், கலாசாரமும் எதிர் நோக்கியிருக்கும் பேராபத்தை இம் மாநாடு சுட்டிக்காட்டுகிறது எனக் கூறிடும் தீர்மானம்.

5.அரசாங்கத்தின் காணி அபிவிருத்திக் கொள்கையும், குடியேற்றத்திட்டக் கொள்கையும் இலங்கையிலுள்ள தமிழ் பேசும் மக்களின் நிலைபேறான வாழ்வுக்கே ஓர் அச்சுறுத்தலாகும் என இம் மாநாடு கண்டிக்கிறது எனக் கூறிடும் தீர்மானம்.

6.இலங்கையின் அதிகாரபூர்வமானகொடியில், சிங்க சின்னமானது அக்கொடியின் முக்கியமான பாகமாக முழுமையாக புனிதமுடன் பேணப்பட்டிருக்க, தமிழ்பேசும் மக்களுக்கு சிங்கக்கொடிக்கு புறத்தே ஒருவொட்டுகளாக அமைந்துள்ள இரண்டு குறுகிய கோடுகள் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளமையால், இலங்கைத் தமிழரசுக்கட்சியின் இம் முதலாவது தேசிய மாநாடு இலங்கையின் அதிகாரபூர்வமானகொடியை இத்தீவிலுள்ள தமிழ்பேசும் மக்களுக்கு இழைக்கப்பட்ட வேண்டாத ஒரு நிந்தனையெனக் கணித்து நிராகரிக்கிறது எனக் கூறிடும் தீர்மானம்.

7. மொழிவாரித் தமிழ் அரசினை, அனைவர்க்கும் சுதந்திரம் -அனைவர்க்கும் சமத்துவம் - அனைவர்க்கும் நீதி என்ற உயர்ந்த இலட்சியங்களின் மீது நிறுவுவதற்கு இம் மாநாடு உறுதியளிக்கிறது எனக் கூறிடும் தீர்மானம்.

இத் தீர்மானங்களைக் கொள்கையாகக் கொண்ட தமிழ் அரசுக் கட்சியை தமிழ்பேசும் மக்கள் 1952ஆம் ஆண்டுத் தேர்தலில் ஏன் நிராகரித்தார்கள் என்பதற்கு வேறுபட்ட அரசியல் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

### தமிழரசுக் கட்சியின் சமஷ்டிக் கொள்கை

இலங்கையின் அனைத்துச் சமூகங்களுக்கும் சமத்துவ உரிமைகளை உறுதிப்படுத்தும் அமைதியான, நீதியான எதிர்காலத் தொலைநோக்கே சமஷ்டி எண்ணக்கரு. இதன் கட்டமைப்பு ஐக்கிய இலங்கையாகும். 1926 இல் இலங்கைக்கு ஒரு சமஷ்டி ஆட்சிமுறை குறித்த ஒரு யோசனையை எஸ் டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா முன்வைத்திருந்தார். இது தொடர்பாக பண்டாரநாயக்க வெளியிட்ட கருத்து ஆறு கட்டுரைகளாக 1926 ஆம் ஆண்டு மே - ஜூன் மாதங்களில் சிலோன் மோர்னிங் லீடர் பத்திரிகையில் வெளியிடப்பட்டிருந்தது என்று பதிப்பாசிரியர் லயனல் குருகேவால் வெளியிடப்பட்ட "இலங்கையில் சமஷ்டி எண்ணக்கருவின் தோற்றமும் வளர்ச்சியும் (1926-2005)" என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது. அது வருமாறு: "இலங்கையில் வாழ்ந்து வரும் பல இன மக்கள் ஒருவரை ஒருவர் சந்தேகக் கண்கொண்டு நோக்கி வருகின்றனர். அவர்களுக்கிடையில் நிலவி வரும் வேறுபாடுகள் அடிப்படையான வேறுபாடுகளாக இருந்து வரவில்லை எனக் கருதுவது தவறானதாகும். சுமார் நூறு வருடங்களுக்கு முன்னர் அத்தகைய வேறுபாடுகள் இருந்து வரவில்லை. தமிழர்கள், மலை நாட்டுச் சிங்களவர்கள் மற்றும் கரையோரச் சிங்களவர்கள் ஆகிய அனைவரும் ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் இருந்து வந்த காரணத்தினால் அத்தகைய வேறுபாடுகள் தலைதூக்கவில்லை. ஆனால், ஆட்சியதிகாரத்தை தமது கைகளில் எடுத்துக் கொள்ள வேண்டுமென இலங்கை மக்கள் குரலெழுப்பத் தொடங்கியமையை உடனடுத்து, உள்ளே அமுங்கிக் கிடந்த இத்தகைய வேறுபாடுகள் தீப்பொறிகள் போல வெளிக் கிளம்பத் தொடங்கின.

தமிழர்கள், கரையோரச் சிங்களவர்கள் மற்றும் மலைநாட்டுச் சிங்களவர்கள் ஆகிய சமூகப் பிரிவினர் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக இந்நாட்டில் வாழ்ந்து வந்திருந்த போதிலும், ஒருவருடனொருவர் இணைந்து கொள்வதற்கு அவர்கள் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் ஆயத்தமாக இருந்து வரவில்லை என்ற விடயத்தையே வரலாறு எமக்கு எடுத்துக்காட்டுகின்றது. அவர்கள் தங்களுடைய பழக்கவழக்கங்கள், மொழி மற்றும் சமயம் என்பவற்றை தனித்தனியாகப் பின்பற்றி வருகின்றனர்.

இந்த வேறுபாடுகள் காலப் போக்கில் ஒழிக்கப்பட்டு விடுமென ஒரு முட்டாள் மட்டுமே கருதிக் கொள்ள முடியும். சமஷ்டி ஆட்சி முறையின் கீழ் இடம்பெறும் ஒரு விடயம் அனைத்து சமஷ்டி அலகுகளுக்கும் தன்னாதிக்கம் கிடைப்பதாகும்.

அதேவேளையில், அனைத்து அலகுகளும் ஒன்றாக இணைந்து காணப்படுகின்றன. முழு நாட்டையும் பாதிக்கக்கூடிய பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடுவதற்கு அவர்களுக்கு ஒரு அரசாங்கச் சபை அல்லது இரு அரசாங்க சபைகள் இருந்து வருகின்றன.

ஐக்கிய அமெரிக்காவில் இத்தகைய ஒரு ஆட்சி முறையே காணப்படுகின்றது. கனடா, அவுஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்கா போன்ற சுயாட்சிக் குடியரசுகளிலும் அத்தகைய ஒரு ஆட்சி முறையே இருந்து வருகின்றது. சுவிட்சர்லாந்தில் காணப்படும் ஆட்சி முறை இலங்கைக்கு மிகவும் பொருத்தமான ஒரு முன்மாதிரியாக இருந்து வருகின்றது. அது மிகவும் சிறிய ஒரு நாடாகும். எனினும், அங்கு பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளைச் சேர்ந்த சமூகக் குழுக்கள் வாழ்ந்து வருகின்றன. சுவிட்சர்லாந்தில் சமஷ்டி வகையைச் சேர்ந்த ஆட்சி முறை மிகவும் வெற்றிகரமாக இடம்பெற்று வருவதனைக் காண முடிகின்றது.

இலங்கையின் ஒவ்வொரு மாகாணத்துக்கும் முழுமையான சுயாட்சி உரிமை இருந்து வருதல் வேண்டும். நாட்டின் விசேட வருமானங்கள் மற்றும் செலவுகள் என்பன குறித்த முடிவுகளை மேற்கொள்வதற்கு ஒரு அரசாங்க சபை அல்லது இரு அரசாங்க சபைகள் இருத்தல் வேண்டும்.

# மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய வலுவான சக்தி ஊடகத்துறை

## அமைச்சர் மங்கள சமரவீர சுட்டிக்காட்டு



(கொழும்பு)

நாட்டின் அரசாங்கத்தையும் ஏனைய தனியார் துறையினரையும் நேர்மையாக செயற்பட வைக்கும் ஆற்றல் ஊடகங்களிடம் உள்ளது. ஊடகத்துறை என்பது மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய வலுமிக்க சக்தியாகும். ஜனநாயகத்தை நிலைநாட்டுவதிலும் அதற்கு பங்குண்டு என நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தினால் ஊடக சுதந்திரமும் சமூகப் பொறுப்பும் பற்றிய கொழும்பு பிரகடனத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கொழும்பில் நிகழ்வொன்று நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஏற் பாடு செய்யப்பட்டிருந்தது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கருத்து சுதந்திரம், ஊடக சுதந்திரம் ஆகிய இரண்டும் அடிப்படை மனித உரிமைகள் என்பதே எமது கொள்கையாகும். 2016 ஆம் ஆண்டில்அரசாங்கத்தினால்கொண்டு வரப்பட்ட தகவலறியும் உரிமைச்சட்டத்தின் மூலம் அரச தலையீடு இன்றி ஊடகவியலாளர்களால் செயற்பட முடியும் எனும் விடயம் உறுதி செய்யப்பட்டது. அதே போல் கடந்த காலங்களில் வீழ்ச்சி கண்டிருந்த ஊடக சுதந்திரம் 2015 இற்கு பின்னர் மேம்பட்டுள்ளது.

உலகளாவிய ரீதியில் ஊடக சுதந்திர குறிகாட்டியில் 138 ஆவது நிலையிலிருந்த எமது நாடு 2018 இல் வெளியிடப்பட்ட அறிக்கையின் படி 131 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

இதில் முதல் நிலையினை அடைவதற்கு பல வருடங்கள் தேவைப்படும். எனினும் தற்போது முன்னேற்றகரமான நிலையினை நோக்கியே நகர்ந்து வருகின்றோம்.

எனினும் ஊடகங்கள் சரியான செய்தியினை வழங்குவதிலும் பார்க்க பரபரப்பு செய்திகளை வழங்குவதிலேயே கவனம் செலுத்தி வருகின்றன. சிங்கப்பூர் உடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போது அவ்விடயம் தொடர்பில் வெளிவந்த தவறான பரப்புரைகளை இதற்கு சிறந்த உதாரணமாக குறிப்பிடலாம்.

சரியான தகவல்களை மக்களுக்கு வழங்குவதன் மூலம் ஊடக சுதந்திரம் மேலும் வலுவடையும். சுய தணிக்கைப்படுத்தலுடனான தகவல்களை அடிப்படையாகக் கொண்ட செய்திகளே மக்களுக்கு தேவையாகும். அதனையே நாங்களும் எதிர்பார்க்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அறநெறிப்பாடசாலையின் விளையாட்டு விழா நாளை

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் தலையாழி சாமுண்டாதேவி சமேத ஸ்ரீ ஞான வைரவர் ஆலய அறநெறிப் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா நாளை 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் ஆலய அறநெறிப் பாடசாலை அதிபர் எஸ்.பி.காசிநாதன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேசசபை உப தவிசாளர் இ.ஜெயகரன், சிறப்பு விருந்தினர்களாக ராஜா கிறீம் ஹவுஸ் உரிமையாளர் சி.சண்முகநாதன், கௌரவ விருந்தினராக நல்லூர் பிரதேச செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி.நகுலாரபேந்திர ராஜா ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

# அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக நாளை கவனயீர்ப்புப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

உண்ணாவிரதமிருக்கும் தமிழ்அரசியல் கைதிகளின் கோரிக்கையை நிறைவேற்று, அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனே ரத்துச் செய் போன்ற கோரிக்கைகளை முன் வைத்து நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் மாத்தளை நகரில் மணிக்கூட்டு கோபுரத்துக்கு அருகில் கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெறவுள்ளது.

அரசியல் கைதிகளின் விடுதலையை ஆதரிக்கின்ற அரசியல் கட்சிகள், பொது அமைப்புகள் மற்றும் ஆர்வலர்களைப் போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறு சமூக நீதிக்கான மலையக வெகுஜன அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (இ)

# இந்தியர் மீது பாய்ந்த பயங்கரவாதச் சட்டம்

## 3 மாதம் விளக்கமறியல்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்டவர்களைப் படுகொலை செய்யும் சதித் திட்டம் தொடர்பாக கைது செய்யப்பட்ட இந்தியரை 3 மாதங்கள் தடுத்து வைத்து விசாரணை செய்ய கோட்டே நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

இந்தப் படுகொலைச் சதித் திட்டம் குறித்து வெளிப்படுத்திய நாமல் குமாரவின் இல்லத்துக்கு அடிக்கடி சென்றார் என்ற குற்றச்சாட்டில் கேரளாவைச் சேர்ந்த மர்சிலி தோமஸ் என்ற இந்தியர் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டார். அவரை நேற்று முன்தினம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கோட்டே நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர்.

அப்போது, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ், 3 மாதங்கள்அவரைத்தடுத்து வைத்து விசாரணை செய்ய குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அனுமதி கோரப்பட்டது.

இதற்கு அனுமதி அளித்த கோட்டே நீதவான், ஒக்டோபர் 23ஆம் திகதி குறித்த இந்தியரை மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்த உத்தரவிட்டார். (இ-7)

# ஜனாதிபதி கொலைச்சதி; இந்தியத் தூதரகம் திசைதிருப்ப திட்டமென திலங்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி மற்றும் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரை இலக்கு வைத்த கொலை சதித்திட்டத்தை அரசாங்கம் சாதாரணமாக எடுக்கக்கூடாது.

நாட்டில் தேசிய தலைவர்கள் கொலைசெய்யப்பட்ட வரலாறு இருக்கின்றது. அத்துடன் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டவர் மன நிலை பாதிக்கப்பட்டவர் என்ற இந்தியத் தூதரகத்தின் அறிவிப்பு விசாரணையை திசை திருப்பும் திட்டமாகவும் இருக்கலாம் என பாராளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால குற்றம் சாட்டினார்.



ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மாற்று அணி நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடப் போவதாக ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது. அவருக்கு போட்டியாக கோத்தபாய ராஜபக்ஷவே இருக்கின்றார்.

அதனால் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவானவர்கள் இவ்வாறான சதித் திட்டத்தில் இறங்கலாம்.

அதேபோன்று கொலை சதித்திட்டம் வெற்றியளித்தால் அரசியல் ரீதியாக பயன் கிடைக்கப் போவதும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்காகும். அதனால் இதனை சாதாரணமாக கருத முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஊடகங்கள் உண்மைச் செய்திகள் மூலம் ஜனநாயகத்தை உறுதிப்படுத்த முடியும்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில்ஜனநாயகம்நிலை நாட்டப்படுவதற்கு ஊடக சுதந்திரம் இன்றியமையாததாகும். ஊடக சுதந்திரத்தினைப் பயன்படுத்தி ஊடகங்கள் சுயாதீனமாக சரியான செய்திகளை வெளியிடுவதன் மூலம் நாட்டில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்த முடியும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.


ஊடகங்களால் மிக அதிகமாக விமர்சிக்கப்பட்ட நபர் நான் என்பதை அறிவேன். எம்முடைய அரசாங்கம் புதிய வீட்டுத்திட்டம், மாணவர் புலமைப்பரிசில் திட்டம், வீதி அபிவிருத்தி, சுகாதார விருத்தி உள்ளிட்ட பல்வேறு முன்னேற்றகரமான செயற்பாடுகளை மேற்கொண்டுள்ள போதிலும் எதிர்மறையான விடயங்களை மாத்திரமே ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட சிறந்த செயற்றிட்டங்களை வெளிக்காட்டாதது ஏன்? எனவும் கேள்வி எழுப்பினார்.

ஊடக சுதந்திரமும் சமூகப் பொறுப்புணர்வும் பற்றிய கொழும்பு பிரகடனத்தின் 20 ஆவது வருட பூர்த்தியினை முன்னிட்டு இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நான்கு நாட்கள் இடம்பெறவுள்ள மாநாடு நேற்று முன்தினம் வியாழக்கிழமை சினமன் கிரான்ட் ஹோட்டலில் ஆரம்பமாகியது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

ஊடக சுதந்திரமும் சமூகப் பொறுப்புணர்வும் பற்றிய கொழும்பு பிரகடனத்திற்காக பல ஊடகவியலாளர்கள் தொடர்ந்து போராட்டங்களை மேற்கொண்டனர். பல துன்பங்களை அனுபவிக்க நேர்ந்தது. பல உயிர்கள் பறி போனது. அவ்வாறு போராடி பெற்ற கொழும்பு பிரகடனம் 20 வருடங்களை அடைந்துள்ளது.



ஊடக சுதந்திரத்திற்காக போராடிய லசந்த விக்கிரமதுங்க, பிரகீத் எக்னலிகொட, கீத் நொயர் போன்றவர்கள் பாதிப்புக்களை எதிர்கொண்டனர்.

முன்பை விட இப்போது ஊடக சுதந்திரம் உயர் நிலையில் உள்ளது. ஊடக சுதந்திரத்தின் ஓர் அங்கமாகவே எமது அரசாங்கத்தினால் தகவல் அறியும் உரிமைச் சட்டம் கொண்டு வரப்பட்டது. கடந்த அரசாங்கத்தினைப் போலன்றி இந்த அரசாங்கத்தில் ஊடகவியலாளர்களால் சுயாதீனமாக செயற்பட முடிகின்றது.

எனினும் இன்றளவில் ஊடகங்கள் உண்மையான செய்திகளை வெளியிடுகின்றனவா என சிந்திக்க வேண்டியுள்ளது. நாட்டில் ஜனநாயகம் உறுதியாக நிலைநாட்டப்பட வேண்டும் எனில் அங்கு ஊடக சுதந்திரம் உருவாக வேண்டும்.

உண்மையான செய்திகள் மக்களைச் சென்று சேரும் போது ஜனநாயகம் வலுவடையும். ஆனால் தற்போது ஊடகங்கள் அரசாங்கம் மேற்கொண்டுள்ள சிறந்த செயற்றிட்டங்களை வெளிக் கொணர்வதில்லை. எதிர்மறையான விடயங்களை மாத்திரமே மக்களிடம் கொண்டு சேர்க்கின்றன. இரு வகையான செய்திகளையும் மக்களிடம் சேர்ப்பதே ஊடக சுதந்திரம் ஆகும்.

ஊடகவியலாளர்கள்மீதான தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளவில்லை என குற்றம் சாட்டுகின்றனர். லசந்த விக்கிரமதுங்க, பிரகீத் எக்னலிகொட, கீத் நொயர் தொடர்பில் பேசியவர்களும் விசாரணைகளை ஆரம்பித்தவர்களும் யார் என சிந்தித்து பார்க்க வேண்டும்.

ஊடகவியலாளர்கள்மீதான வன்முறை தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள எமது அரசாங்கமே நடவடிக்கை எடுத்துள்ளது. அதேபோல் ஊடகங்களால் மிக அதிகமாக விமர்சிக்கப்பட்ட நபராக நான் இருக்கின்றேன். அதற்கான சுதந்திரம் ஊடகங்களிடம் உண்டு. ஊடகவியலாளர்கள் போராடி பெற்ற சுதந்திரத்தை அவர்களால் மாத்திரமே இல்லாமல் செய்ய இயலும். எனவே ஊடக சுதந்திரத்தின் ஊடாக சரியான செய்திகளை வழங்கி சுயாதீனமான முறையில் ஊடகங்கள் செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)




# மானமே பெரிது

(நேற்றைய தொடர்ச்சி...)

வெண்ணிப் பறந்தலைப் போர் நிகழ்ந்து சில திங்கள் கழிந்தன.

வழக்கம்போல அரசவை கூடி இருந்தது. அரியணையில் கரிகாற் பெருவளத்தான் அமர்ந்திருந்தார். அவையினர் அவரவர் இருக்கையில் இருந்தனர்.

வீரன் ஒருவன் உள்ளே வந்து அரசரை வணங்கினான்.

"வெற்றி வேந்தே வாழி! பெரும் புலவர் வெண்ணியக் குயத்தியார் வந்து கொண்டிருக்கிறார்" என்றான்.

"ஆ! பெரும்புலவர் வெண்ணியக் குயத்தியாரா? இங்கு வருகிறாரா? அவர் வருகையால் நம் நாடே பெருமை பெற்றது" என்று அரியணையில் இருந்து இறங்கினார் அரசர்.

புலவர் வெண்ணியக் குயத்தியார் உள்ளே நுழைந்தார்.

அவரை வரவேற்ற அரசர் "வாருங்கள்! வெண்ணியக் குயத்தியாரே! வாருங்கள்" என்று மலர்ந்த முகத்துடன் வரவேற்றார்.

அவையினர் எல்லோரும் எழுந்து "புலவர் வெண்ணியக் குயத்தியார் வாழ்க" என்று வாழ்த்தொலி எழுப்பினார்கள்.

உயர்ந்த இருக்கை ஒன்றைக் காட்டிய அரசர் "புலவரே! இதில் அமருங்கள்" என்று வேண்டினார்.

தனக்கு அளிக்கப்பட்ட வரவேற்பைக் கண்டு மகிழ்ந்தார் புலவர். அந்த இருக்கையில் அமர்ந்தார்.

அரசரும் அரியணையில் அமர்ந்தார்.

புலவர் எழுந்து நின்று "நானிலம் காக்கும் அரசே வாழி! செங்கோல் தவறாத அரசே வாழி! பகை நடுங்கும் வெற்றி வேந்தே வாழி! தமிழின் மீது நீர் கொண்டிருக்கும் பேரன்பை உலகமே போற்றுகிறது.

உம்மைப் போல் புலவர்களை மதிக்கும் அரசர் யார் இருக்கிறார்கள்? உம்மோடு உரையாடி மகிழவே இங்கு வந்தேன். நான் சில நாட்கள் இங்கே தங்குவதாகத் திட்டம் போட்டுள்ளேன்" என்றார்.

"தமிழ் கூறும் நல்லுலகம் போற்றும் புலவர் பெருந்தகையே! கிடைத்தற்கு அரிய பெரும் பேறாகக் கருதுகிறோம். உங்கள் வருகையால் இந்தச் சோழ நாடே சிறப்புப் பெற்றது. நீங்கள் இங்கேயே நிலையாகத் தங்கினால் பெரிதும் மகிழ்வோம்" என்றார் அரசர்.

"வெற்றி வேந்தே! எங்கள் அறிவுச் செல்வம் ஒரு நாட்டிற்கு உரியது அல்ல. உலகிற்குப் பயன்பட வேண்டும். பல நாடுகளையும் சுற்றி விட்டுச் சேர நாடு சென்றேன். அங்கே சில நாட்கள் தங்கினேன். அங்கிருந்து இங்கு வந்தேன்" என்றார் அவர்.

"சேர நாட்டிலிருந்தா வருகிறீர்கள்? எனக்கும் சேர அரசனுக்கும் நிகழ்ந்த போரைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

அதைப்போன்று கடுமையான போர் எங்கும் நிகழ்ந்தது இல்லை.

அந்தப் போரில் அடைந்த வெற்றி எனக்குப் பெரும் புகழைத் தந்தது. அதைப் போற்றிப் புகழாத புலவர்களே இல்லை.

அந்தப் போரைப் பற்றி நீங்களும் கேள்விப்பட்டிருப்பீர்கள். அதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்டார் அரசர்.

"அரசே! போர் முடிந்து விட்டது: சேர நாட்டு நிகழ்ச்சிகள் எதுவும் உமக்குத் தெரியாதா?"

"புலவரே! சேரரின் படையைப் போர்க்களத்தில் சந்தித்தேன். என் வேலால் தாக்கப்பட்ட சேர அரசன் நிலத்தில் வீழ்ந்தார். வெற்றிக்காகப் போர் செய்தேன். என் எண்ணம் நிறைவேறியது.

தோல்வி அடைந்த அவர்களால் பல ஆண்டுகள் போரிட முடியாது. அதனால் அங்கு என்ன நிகழ்ந்தது என்பதை நான் பொருட்படுத்தவில்லை"

"அரசே! உங்கள் வேலால் தாக்கப்பட்டார் அரசர் நெடுஞ்சேரலாதன். அவர் உயிர் பிழைத்து விட்டார். அந்தச் செய்தியாவது உங்களுக்குத் தெரியுமா?"

"புலவரே" என்னால் நம்ப இயலவில்லையே. என் வேல் நெடுஞ் சேரலாதனின் மார்பைத் துளைத்து ஆழமாகப் பாய்ந்தது. அப்படியே நிலத்தில் அவர் வீழ்ந்தார். அவர் உயிர் பிழைக்க வாய்ப்பே இல்லையே"

"அரசே! சேர நாட்டு மூலிகைகளின் ஆற்றல் அளவிட முடியாதது. அவை இறந்தவரின் உயிரையே மீட்கும். அப்படி இருக்கையில் படுகாயம் அடைந்த அரசரின் உயிரையா மீட்காது?"

"மூலிகைகளால் சேர அரசர் உயிர் பிழைக்கட்டும். என்னிடம் தோற்ற பழி அவரை விட்டு நீங்காதே. அதற்கு அவர் போர்க்களத்திலேயே இறந்து இருக்கலாம். உயிர் பிழைத்துப் பழி சுமக்கின்ற கொடுமை யாருக்கு வேண்டும்?"

"அரசே! சேர அரசர் உயிர் பிழைத்ததால் புகழில் உயர்ந்து விட்டார். புலவர்கள், சான்றோர்கள் எல்லோரும் சேர அரசரையே புகழ்ந்து பேசுகிறார்கள். நீங்கள் போரில் அடைந்த வெற்றிப் புகழும் மங்கி விட்டது"

"புலவரே! போரில் பெருவீரம் காட்டி வென்றவன் நான். என்னிடம் தோற்று உயிர் பிழைத்தவன் சேர அரசன். அவனை இந்த உலகம் புகழ்கிறதா? கேட்பதற்கு வேடிக்கையாக உள்ளதே?"

"அரசே! உங்கள் வேல் சேர அரசரின் மார்பில் ஆழமாகப் பாய்ந்தது. முதுகைத் துளைத்து வெளியே வந்தது"

"என் வீரத்திற்கும் வலிமைக்கும் அந்த வேலே சான்று ஆகிறதே"

"அரசே! உங்கள் வேலால் நிலத்தில் வீழ்ந்தார் சேர அரசர். வீரர்கள் அவரைக் கருவூருக்கு எடுத்துச் சென்றார்கள். வைத்தியர்கள் அரிய பச்சிலைகள் கட்டினார்கள்.

ஒரே திங்களில் அவர் மீண்டும் பழைய வலிமையைப் பெற்றார்.

மார்பிலும் முதுகிலும் வேல் குத்திய வடு இருப்பை அறிந்து துடித்தார்"

"இதில் துடிப்பதற்கு என்ன இருக்கிறது? புலவரே"

"அரசே! விழுப்புண் பட்ட வடு மார்பில் இருந்தால் பெருமை. நேருக்கு நேர் நின்று போர் செய்தவர். எதிரியின் படைக் கலங்களை மார்பில் தாங்கியவர் என்று புகழ்வார்கள். முதுகில் வடு இருந்தால் புறமுதுகு காட்டி ஓடி வந்தது ஆகாதா? அது வீரர்களுக்கு மாறாப் பழி தரும் செயல் அல்லவா?"

"ஆம் புலவரே! புறமுதுகிட்டு ஓடுவது மிக இழிவான செயல். அப்படிப்பட்டவனை ஈன்ற தாய் வேண்டாள். மனைவி விரும்பாள். உற்றாரும் மற்றோரும் வெறுப்பார்கள்.

இதில் சேர அரசர் துடிப்பதற்கு என்ன இருக்கிறது? என் வேலை அவர் மார்பில் தாங்கியதை எல்லோரும் அறிவார்களே. அதே வடுதானே முதுகில் உள்ளது"

"அரசே! சேர அரசர் மானம் மிக்கவர். முதுகில் வடு உள்ளது. உண்மை அறியாதவர்கள் என்ன நினைப்பார்கள்? புறமுதுகு காட்டியதால் ஏற்பட்ட வடு என்று தானே நினைப்பார்கள். என்ன செய்வது என்று கலங்கினார்.

அந்தப் பழி நீங்க வடக்கிருந்து உயிர் துறக்கும் முடிவிற்கு வந்தார்."

"என்ன! செய்யாத் பழிக்காக வடக்கிருக்க நினைத்தாரா? இதைப் புலவர்களும் சான்றோர்களும் தடுக்க வில்லையா?"

அரசே! சேர அரசரின் செயலை எல்லோரும் தடுக்க முயற்சி செய்தார்கள்.

ஆனால் அவரோ எம் சேரர் குடி மானம் மிக்க குடி. என் முன்னோர் ஒருவன் பகைவரால் சிறையிடப்பட்டான். காலந்தாழ்த்து வந்த நீரைப் பருகாமல் உயிரை விட்டான்.

அப்படிப்பட்ட உயர்ந்த மரபில் வந்தவன் நான். என்னைப் புறப்புண் கண்டவன் என்றால் குடிக்கே இழுக்கு நேருமே. என் முடிவில் எந்த மாற்றமும் இல்லை. நான் வடக்கிருந்து உயிரைத் துறப்பது உறுதி என்றார்.

"பிறகு என்ன நடந்தது புலவரே?"

"வேறு வழி அவர்களுக்குத் தெரியவில்லை. அரசர் வடக்கிருப்பதற்கு உரிய இடத்தைத் தேர்ந்து எடுத்தார்கள். அங்கேயே வடக்கிருந்து உயிர் துறந்தார் அவர்"

"ஆ! என்ன சேர அரசரின் மானச் சிறப்பு! செயற்கருஞ் செயலை அல்லவா அவர் செய்து விட்டார். செய்யாத பழிக்காக இதுவரை யார் உயிரைத் துறந்து இருக்கிறார்கள்? அவர் புகழ் என்றும் நிலைத்து நிற்கும்"

"அரசே! போரில் பெரு வீரம் காட்டி வெற்றி பெற்றவர் நீங்கள். உங்களிடம் தோற்ற சேர அரசரோ புறப்புண்ணுக்கு நாணினார்.

வடக்கிருந்து உயிர் துறந்தார். உங்கள் புகழை விட அவர் புகழையே சிறப்பித்துப் பாடுகிறார்கள் புலவர்கள்"

"புலவரே! என் வீரத்திலும் சேர அரசரின் மானம் உயர்ந்து நிற்கிறது. வென்ற நான் தோற்றவனாகி விட்டேன்.

தோற்றும் அவர் புகழில் என்னை வென்று விட்டார். வாழ்க அவர் புகழ்" என்று உணர்ச்சி பொங்கச் சொன்னார் கரிகாற் பெருவளத்தான்.

(முற்றும்)




- ❖ 1993-மகாராஷ்டிரா மாநிலத்தில் ஏற்பட்ட நில நடுக்கத்தில் 10,000 பேர் கொல்லப்பட்டனர்.
- ❖ 1998-இலங்கை, பலாலி விமான நிலையத்திலிருந்து இரத்மலானை நோக்கி 56 பேருடன் புறப்பட்ட லயன் எயார் பயணிகள் விமானம் புறப்பட்டு 10 நிமிடங்களில் காணாமல் போனது.
- ❖ 2003-சூறாவளி ஜுவான் கனடாவின் ஹாலிபாக்ஸ் துறைமுகத்தைத் தாக்கிப் பேரழிவை விளைவித்தது.

**பிறப்புகள்**

- ❖ 1809-வில்லியம் கிளாட்ஸ்டோன், ஐக்கிய இராச்சியத்தின் பிரதமர் (இ.1898)
- ❖ 1881-இராஜா அண்ணாமலை செட்டியார், தமிழிசை இயக்க செயற்பாட்டாளர் (இ.1948)
- ❖ 1892-ந.சிவராஜ், தமிழக அரசியல்வாதி, நீதிக் கட்சித் தலைவர் (இ.1964)
- ❖ 1901-என்ரிக்கோ பெர்மி, நோபல் பரிசு பெற்ற இத்தாலிய-அமெரிக்க இயற்பியலாளர் (இ.1954)
- ❖ 1912-சி.சு.செல்லப்பா, எழுத்தாளர், இலக்கிய விமர்சகர் (இ.1998)
- ❖ 1920-அரங்க.சீனிவாசன், தமிழகக் கவிஞர், எழுத்தாளர் (இ 1996)
- ❖ 1926-திருமெய்ஞானம் நடராஜசுந்தரம் பிள்ளை, த்மிழக நாதஸ்வரக் கலைஞர் (இ.1981)
- ❖ 1927-கே.டி.முகம்மது, மலையாள நாடக, திரைக்கதை ஆசிரியர் (இ.2008)
- ❖ 1929-சையது அலி கிலானி, ஜம்மு- காஷ்மீர் அரசியல்வாதி
- ❖ 1940-கரு ஜெயசூரிய, இலங்கை அரசியல்வாதி
- ❖ 1947-மா.சுதர்சன நாச்சியப்பன், தமிழக அரசியல்வாதி
- ❖ 1970-குஷ்பு, தென்னிந்திய நடிகை, அரசியல்வாதி
- ❖ 1973-ம.திலகராஜா, இலங்கை மலையகத் தமிழ்க் கவிஞர், அரசியல்வாதி
- ❖ 1986-நிதேந்திர சிங் ராவத், இந்திய மாரத்தான் ஓட்டப்பந்தய வீரர்

**இறப்புகள்**

- ❖ 1910-அ.சிவசம்புப் புலவர், ஈழத்துப் புலவர்.
- ❖ 1961-பி.சீனிவாசராவ், தமிழக அரசியல்வாதி (பி. 1906)
- ❖ 1964-ந.சிவராஜ், தமிழக அரசியல்வாதி, நீதிக் கட்சித் தலைவர் (பி. 1892)
- ❖ 1969-சி.டபிள்யூ.டபிள்யூ.கன்னங்கரா, இலங்கையில் இலவசக்கல்வித் திட்டத்தை அறிமுகப்படுத்தியவர் (பி. 1884)
- ❖ 2004-பாலாமணியம்மா, மலையாளக்கவிஞர் (பி. 1909)

**சிறப்பு நாட்கள்**

- ❖ கண்டுபிடிப்பாளர்களின் நாள் (ஆர்ஜென்டீனா)
- ❖ உலக இருதய நாள்




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 50 | 80 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 80 | 70 | 100 | 120 |
| தக்காளி | 30 | 40 | 40 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 | 50 |
| கோவா | 150 | 90 | 120 | 100 |
| கரட் | 140 | 140 | 160 | 200 |
| பூசணி | 40 | 50 | 50 | 60 |
| புடோல் | 80 | 50 | 50 | 80 |
| வாழைக்காய் | 80 | 110 | 80 | 160 |
| சின்ன வெங்காயம் | 120 | 80 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 140 | 200 | 140 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 40 | 80 |
| கருணைக் கிழங்கு | 50 | 60 | 80 | 80 |
| பயற்றங்காய் | 100 | 60 | 50 | 160 |
| லீக்ஸ் | 80 | 90 | 100 | 80 |
| பீற்றூட் | 50 | 60 | 60 | 80 |
| கறிமிளகாய் | 100 | 120 | 100 | 120 |
| முருங்கைக்காய் | 150 | 140 | 100 | 100 |
| போஞ்சி | 150 | 140 | 140 | 160 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | — | 100 |
| கீரை - 1பிடி | 50 | 25 | 30 | 40 |
| தேசிக்காய் | 200 | 120 | 160 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 55 | 50-55 | 30-50 |
| இராசவள்ளி | 140 | 140 | 160 | 200 |
| வெங்காயப்பூ | 120 | 140 | 120 | 160 |
| முள்ளங்கி | 50 | 50 | 50 | 80 |
| பொன்னாங்காணி | 50 | 30 | 40 | 30 |
| வல்லாரை | 15 | 40 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | — | 50 | 100 |

இளநீர் குடித்தவன் போய்விடுவான்.
கோம்பை தூக்கியவன் தண்டிக்கப்படுவான்.

– யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# அடுத்தவன் வீட்டு சிரட்டையைப் பார்க்கமுன் உன் வீட்டு வாய்க்காலைப் பார்

டெங்கு கட்டுப்பாட்டு வேலைத்திட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

இந்தப் பணியில் சுகாதாரப் பிரிவினர், பொலிஸார், இராணுவம் எனப் பலரும் ஈடுபட்டிருப்பதைக் காணமுடிகின்றது.

டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கை தொடர்பில் சுகாதார உத்தியோகத்தர்களின் பணி பாராட்டுக்குரியது.

சுட்டெரிக்கும் வெயிலிலும் சுகாதாரப் பணியாளர்கள் வீடு வீடாகச் சென்று நுளம்பு பெருகுகின்ற இடங்களை இனங்கண்டு அவற்றை அழிப்பதில் கடுமையாகப் பாடுபடுகின்றனர்.

இவர்களுடன் பொலிஸாரும் படைத்தரப்பும் இதர சேவையாளர்களும் இணைந்துள்ளனர்.

வீடு வீடாகச் சென்று டெங்கு நுளம்பு பெருகக்கூடிய இடங்களைத் தேடித் திரிந்து அவற்றை இனங்கண்டு அதனை அழித்து விடுகின்ற போதிலும் டெங்கு நுளம்பு கட்டுப்பட்டதான தரவுகள் திருப்தியாக இல்லை.

அப்படியானால் இதற்குக் காரணம் என்ன என்றால், இங்குதான் பல காரணங்கள் முன்னெழுகின்றன.

அதாவது டெங்கு ஒழிப்புப் பணியில் ஈடுபடுகின்றவர்கள் பூட்டிக் கிடக்கின்ற பற்றைக் காணிகளையும் பூட்டி இருக்கின்ற வீடுகளையும் பார்ப்பதில்லை.

மாறாக ஆட்கள் இருக்கின்ற வீடுகளையும் வளவுகளையும் பார்த்து விட்டு, சிரட்டைக்குள் இருந்த தண்ணீரில் டெங்கு நுளம்புக்குரிய குடம்பிகள் இருந்தன என்ற குற்றச்சாட்டில் வழக்குப் பதிவு செய்கின்றனர்.

அடுத்த வளவில் நிறைந்த பற்றை, பியர் போத்தல்கள், ரயர், மீன்ரின் என ஏகப்பட்ட குப்பைகள்.

ஆனால் அதுபற்றி எந்த நடவடிக்கையும் இல்லை. பூட்டிக்கிடப்பதால் அறிவித்தல் துண்டை ஒட்டிவிடுவதுடன் அவர்களின் நடவடிக்கை நின்று போகிறது.

இவ்வாறு வீட்டில் இருந்தவருக்குத் தண்டனை. இல்லாதவர் தப்பித்துக் கொண்டார் என்பதாக நிலைமை இருக்கும்போது,

டெங்கு கட்டுப்பாட்டில் பொதுமக்களின் ஆதரவைப் பெறுவதென்பது கடினமாகவே இருக்கும்.

இதுதவிர, உள்ளூராட்சி அமைப்புக்கள் வடிகால்களையும் வாய்க்கால்களையும் குளங்களையும் வீதிகளையும் முறையாகப் பராமரிக்காததாலும் அவற்றை புனரமைக்காததாலும் நீர்தேங்கி நின்று டெங்கு நுளம்பு பெருகுகின்ற ஆபத்துத் தாராளமாக இருக்கிறது.

அதிலும் குறிப்பாக சில குளக்கரையோரத்தில் குவிந்து கிடக்கும் பிளாஸ்ரிக் போத்தல்கள், இளநீர்க் கோம்பைகள், பொலித்தீன் பைகள் என்பவற்றைப் பார்க்கும்போது டெங்கு நுளம்பின் உற்பத்தி நிலையம் இவைதானோ என்று நினைக்கவும் தோன்றும்.

ஆக, நம் கல்வி அதிகாரி ஒருவர் கூறியது போல, அடுத்தவன் வீட்டுச் சிரட்டையைப் பார்க்க முன் உன் வீட்டு வடிகாலைப் பார்த்து அதனைச் செப்பனிடு என்ற தத்துவமே ஞாபகத்துக்கு வருகிறது.

# தமிழர்கள் பிரிந்து நிற்பதனால்தான் துன்பங்கள், துயரங்கள் வருகின்றன

## இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் சுட்டிக்காட்டு

(கரணவாய்)

வடமாகாணசபை உரிய முறையில் செயற்பட்டு வருகிறது. அதன் செயற்பாடு எதிர்காலத்தில் இன்னும் அதிகரிக்கப்பட வேண்டும்.

அடுத்த தேர்தல் வரும்போது எல்லோரும் ஒற்றுமையாக இருந்து வட மாகாணத்தின் ஆளுமையை கட்டியெழுப்பக்கூடிய நிலையை உருவாக்க வேண்டும்.

தமிழர்கள் பிரிந்து நிற்பதனால்தான் துன்பங்கள், துயரங்கள் வருகின்றன என கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் சுட்டிக் காட்டியுள்ளார்.

கரவெட்டி ஸ்ரீநாரதா வித்தியாலயத்தின் பொன் விழா நேற்று வெள்ளிக்கிழமை அதிபர் ச.சுபேந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

நகரத்தை நோக்கி பாய்ச்சல் கொடுக்கிற காலத்திலே கிராமப்புற பாடசாலைகள் முன்னேறுவது என்பது சற்று சிரமமான காரியம்.

பாடசாலைகளில் எதிர்வரும் காலங்களில் மாணவர்களின் தொகையை அதிகரிக்க வேண்டும்.

முன்பு ஒரு குடும்பத்தில் 8 , 10 பிள்ளைகள் இருப்பார்கள். ஆனால் இப்போது 2 பிள்ளைகளுடன் சிறிய, நல்ல குடும்பம என இருக்கிறார்கள்.

பாடசாலைகளில் மாணவர்களின் தொகை அதிகரிக்கப்பட வேண்டும். இல்லாது போனால் பல பாடசாலைகளை மூடவேண்டிய சூழ்நிலை ஏற்படும்

அதற்கான திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டும். தமிழர்கள் பிரிந்து நிற்பதனால்தான் துன்பங்கள், துயரங்கள் அதிகமாக வருகின்றன.

அதனாலேயே 13ஆவது திருத்தச் சட்டம் விசேடமாக வடமாகாணத்திற்கு கொண்டு வரப்பட்டது.

வடமாகாணசபை இன்னும் 3, 4 மாதங்களில் தேர்தலை நோக்கிப் பயணிக்கவுள்ளது.

அப்போது இங்குள்ள தமிழர்கள் உறுதியாக 13ஆவது திருத்தச் சட்டத்தை நல்ல முறையில் இயக்கக்கூடிய, இயக்கிக் கொண்டிருக்கிற மாகாண சபையை இன்னும் மேன்மேலும் வளர்ச்சிப் பாதையிலே செல்வதற்கான நடவடிக்கையினை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-60)

# ஆசிரியர்களின் சம்பளம் திருட்டு

## போராட்டம் நடத்த முஸ்தீபு

(கொழும்பு)

இலங்கையிலுள்ள அரச பாடசாலைகளில் சேவையாற்றும் அதிபர், ஆசிரியர்களது பெருமளவான சம்பளப்பணம் திருடப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

உலகிலுள்ள நாடுகளில் ஆசிரியர்களுக்கு அந்தந்த நாட்டு அரசாங்கம் முதன்மையளித்து கூடிய சம்பளம் வழங்கி வருகின்ற அதே வேளை இலங்கையில்உள்ள ஆசிரியர்களுக்கு குறைந்த சம்பளம் வழங்கி வருவதுடன் ஆசிரியர்களது சம்பள நிலுவைப் பணங்களையும் வழங்கமறுத்து அரசாங்கம் கொள்ளையடித்து வருவதாகவும் இலங்கை ஆசிரியர் சேவைச்சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

இலங்கையிலுள்ளஏனைய துறைசார் அரச ஊழியர்களை விட ஆசிரியர்களுக்கு மிகவும் குறைந்தளவான சம்பளமே வழங்கப்பட்டு வருவதாகவும் 20 வருடங்களுக்கும் மேலாக அதிபர், ஆசிரியர்களின் சம்பளத்தில் பாரிய முரண்பாடுகளுடனும் குழப்பகரமான சம்பள முறைமைகளுடனும் ஆசிரியர்களுக்கான சம்பளம் வழங் கப்பட்டு கொள்ளையடிக்கப்ப ட்டு வருவதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

பெருமளவான ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சம்பள நிலுவைப்பணங்களை அரசாங்கம் வழங்காது இழுத்தடிக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கவை.

இலங்கையில் கல்வி நிர்வாக சேவையிலுள்ளவர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தை விட 29055 ரூபாய் பணம் குறைவாகவே ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஆசிரியர்களது சம்பளப் பணம் கொள்ளையடிக்கப்பட்டு அநீதி இழைக்கப்படுவதற்கு எதிராக இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் நாடளாவிய ரீதியில் பாரிய போராட்டம் ஒன்றினை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தமிழ்த் தொண்டு நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கந்தரோடை தந்த தமிழறிஞர் ந.சி.கந்தையாபிள்ளையின் தமிழ்த்தொண்டு எனும் நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சுன்னாகம் கிழக்கு, 118 ஸ்ரேசன் லேனில் வலிகாமம் உதவிக் கல்விப்பணிப்பாளர் சு.ஸ்ரீகுமரன் தலைமையில் இடம் பெறும். (இ

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணி வரை யாழ்.பிரதேசத்தில் வாழைத்தோட்டம், ஸ்ரான்லி வீதி, மணிக் கூட்டு வீதி, கஸ்தூரியார் வீதியில் ஒரு பகுதி, மின்சார நிலைய வீதி, பருத்தித்துறை வீதியில் ஒரு பகுதி, ஹற்றன் நஷனல் வங்கியின் பிராந்திய அலுவலகம், பீப்பிள் லீசிங் அன் பினான்ஸ் கம்பனி ஸ்ரான்லி வீதி, மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி, சிறிநதியாநகைமாளிகை, Raja Talkies, LOLC, ஞானம்ஸ் விடுதி, ரொப்பாஸ், அன்னைநாகா பூட் சிற்றி, வல்லிபுரம், உதய கதிர்காமம், புனித நகர், கற்கோவளம், மாதனை, நெல்லண்டை, பருத்தித்துறை, வெளிச்சவீடு, சிவப்பிரகாசம், 3ஆம் குறுக்குத்தெரு மற்றும் 4ஆம் குறுக்குத் தெரு பிரதேசம், பிறவுண் வீதி, அரசடி வீதி, புகையிரத கடவையிலிருந்து தட்டா தெரு சந்தி வரை, கே.கே.எஸ். வீதி நாச்சிமார் கோவிலிலிருந்து சிவன் கோவில் வரை, நாவலர் வீதியில் ஐந்து சந்தியிலிருந்து இலுப்பையடி சந்திவரை, கஸ்தூரியார் வீதியில் அரசடி வீதி சந்தியிலிருந்து ஸ்ரான்லி வீதி சந்திவரை, மானிபபாய் வீதியில் ஓட்டுமடம் சந்தியிலிருந்து கே.கே.எஸ்.வீதி வரை, அசாத் வீதி, பீ.ஏ.தம்பி லேன், பிரப்பங்குளம் வீதி, பொன்னையா வீதி, சிவலிங்கப்புளியடி, கன்னாதிட்டி, மணிக்கூட்டு வீதி, சிவன் பண்ணை வீதி, காதி அபூபக்கர் வீதி, ஹரிஹரன் அச்சகம் பிறைவேட் லிமிட்டெட், அண்ணா மலையான் ஸ்ரீராகவேந்திரா எண்டபிறை சஸ் பிறைவேட் லிமிட்டெட், வியாபார அபிவிருத்தி முகாமையாளர் பி.எல்.சி., கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை, மன்னார் பிரதேசத்தில Southbar sub மன்னார் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# மூத்த பிரஜைகள் தினம்

(யாழ்ப்பாணம்)

சிறுப்பிட்டி கிழக்கு, J/271 கிராம சேவகர்பிரிவைச் சேர்ந்த முதியவர்களை உள்ளடக்கிய மூத்த பிரஜைகள் தினம் நாளை மறுதினம் திங்கட் கிழமை பிற்பகல் 3 மணிக்கு சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் புத்தூர் வலி. கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராஜா நிரோஷ் பிரதம விருந்தினராகவும் சிறுப்பிட்டி கிழக்கு கிராம அலுவலர் ஐ.சிவானந்தம் மற்றும் சிறுப்பிட்டி தெற்கு இ.த.க.பாடசாலை அதிபர் ந.கிருஸ்ணகுமார் சிறப்பு விருந்தினராகவும் வலி.கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் செ.தவநாயகம் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம)

# ஹயஸ் விபத்து; இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வேகக்கட்டுப்பாட்டை இழந்த ஹயஸ் வாகனம் வர்த்தக நிலையத்துக்குள் புகுந்தது. இவ் விபத்தில் தம்பதியர் படுகாய மடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியில் நேற்று நண்பகல் இந்த விபத்து இடம்பெற்றது. விபத்தில் வர்த்தக நிலையத்தின் முகப்பில் நின்று கொண்டிருந்த தம்பதியரே படுகாயமடைந்தனர். அவர்கள்அண்மையில்வெளி நாட்டிலிருந்து தாயகம் திரும்பினர் என்று தெரிவிக்கப்பட்டது.

எஸ்.சிறிதரன் (வயது-50), அவரது துணைவி வதனி (வயது-48) ஆகியோரே படுகாயடைந்தனர். அவர்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ம-9)

# நிகழ்ச்சித்திட்ட உதவியாளருக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் பணியாற்றுவதற்காக நிகழ்ச்சித்திட்ட உதவியாளருக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரிகள் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இளமாணிப் பட்டத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அத்துடன் தகவல் தொழில்நுட்பத்தில் சிறப்புத்தேர்ச்சி அடைந்திருத்தல் விசேடதகைமையாகக் கொள்ளப்படும்.

விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரி சுயமாக தயாரிக்கப்பட்ட சுயவிபரக் கோவை அடங்கிய விண்ணப்பப் படிவத்தை எதிர்வரும் 10.10.2018 இற்கு முன்பதாக உதவிப்பணிப்பாளர், இலங்கைத்திறந்த பல்கலைக் கழகம், யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம் பிறவுண் வீதி, கொக்குவில் எனும் முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் . (இ

# ஜொலிஸ்ரார் வெற்றிக்கிண்ணம்-2018

# அதிரடி வீரர்களின் துடுப்பாட்டம் நாளை இந்து கல்லூரி ஆடுகளத்தில்







ஜொலிஸ்ரார் வெற்றிக்கிண்ணத்திற்காக ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் வருடா வருடம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமையன்று யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக வடமாகாண உள்ளூராட்சி அரசாங்க திணைக்களத்தின் ஆணையாளர் பற்றிக் டிரஞ்சன் கலந்து கொள்வார். இவ் இறுதிப் போட்டியில் சென்றலைட்ஸ் அணியும் கே.சி.சி.சி அணியும் கலந்து கொள்ளவுள்ளன.

சென்றலைட்ஸ் அணி 2வது சுற்றில் விங்ஸ் அணியை 101 ஓட்டங்களாலும் கால்இறுதிப்போட்டியில் T.C.C அணியை 87 ஓட்டங்களாலும் அரை இறுதியில் யாழ். பல்கலைக்கழக அணியை 6 இலக்குகளாலும் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளன.

கே.சி.சி.சி.அணி முதலாவது சுற்றில்யாழ்.ஜொனியன்ஸ்அணியை 3 இலக்குகளாலும் 2 ஆவது சுற்றில் ஓல்ட்கோல்ஸ் அணியை கால் இறுதியில் யூனியன்ஸ் அணியை 7 இலக்குகளாலும் அரை இறுதியில் AB அணியை 6 இலக்குகளாலும் வெற்றி பெற்று இறுதி போட்டிக்கு தகுதி பெற்றுள்ளன. இவ்விரு அணிகளும் AB விளையாட்டுக் கழகத்தினரால் நடத்தப்படும் யாழ். கிரிக்கெட் லீக் தொடரில் 3ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (கு)




அரியாலை சரஸ்வதி சன சமூக நிலையம் 2019ஆம் ஆண்டு தனது நூற்றாண்டு விழாவை மிகவும் சிறப்பாகக் கொண்டாடத் திட்டமிட்டுள்ளது. அதன் முதல் நிகழ்வாக யாழ்.மாவட்ட உதை பந்தாட்ட அனுமதியுடன் அரியாலை சரஸ்வதியின் நோர்வேவாழ் அங்கத்தவர்களினது பேராதரவுடனும் சரஸ்வதி இளைஞர் அணியின் பூரண ஒத்துழைப்புடனும் வடக்கின் கில்லாடி யார் என்ற தொனிப் பொருளில்உதைபந்தாட்டத் தொடரை அரியாலை திறந்தவெளி அரங்கில் (யாழ்.உதைபந்தாட்ட பயிற்சித்திடல்) நடத்தி வருகின்றது. இதில் வடக்குமாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 32 அணிகள் பங்குபற்றியிருந்தன. மின்னொளியில் நான்கு காலிறுதிப் போட்டிகளும் அதனைத் தொடர்ந்து அரையிறுதி ஆட்டங்களும் இறுதி ஆட்டம் மற்றும் 3 நிலைக்கான ஆட்டம் என ரசிகர்களுக்கு விருந்தளிக்கக் காத்திருக்கின்றது. இது தொடர்பான பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்று 2018.09.25 மாலை 6 மணியளவில் அரியாலை திறந்த வெளி அரங்கில் (யாழ்.உதை பந்தாட்ட பயிற்சித்திடல்) அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத் தலைவர் தவநாதன் ஹரிசாந்த் தலைமையில் நடைபெற்றது.

இதற்கு பிரதம விருந்தினராக யாழ்.மாநகர சபை முதல்வரும் யாழ்.மாவட்ட உதைபந்தாட்டச் சங்கத் தலைவருமான, ஆனோல்ட் கலந்து சிறப்பித்தார். சிறந்த உதை பந்தாட்ட வீரரும் ஓய்வுபெற்ற புனிதபரியோவான் கல்லூரி ஆசிரியருமான அன்ரனிப்பிள்ளை மற்றும் யாழ்.மாவட்ட உதைபந்தாட்டச் சங்கச் செயலாளர் ஏ.அஜித்குமார் காலிறுதிப் போட்டியில் பங்குபற்றும் மெலிஞ்சிமுனை இருதயராஜா அணி, யாழ்.குருநகர் பாடும்மீன் அணி, கிளிநொச்சி உதயதாரகை அணி,கிளிநொச்சி உருத்திரபுர அணி, இளவாலை யங்ஹென்றிஸ் அணி,அச்செழு வளர்மதி அணி,நவிண்டில் கலைமதி அணி ஆகிய ஏழு அணித் தலைவர்களும் அதன் முகாமையாளரும் பங்குபற்ற அவர்களின் கருத்துக்கள் அணி தொடர்பான நிலை ரசிகர்களின் நிலை போன்றன தொடர்பாக கருத்துப் பகிர்வுகள் முன்வைக்கப்பட்டன. அனைத்து அணித் தலைவர்களும் முகாமையாளர்களும் தம்மாலான முழுப் பலத்தையும் காண்பித்து வெற்றி பெற முயற்சிப்பதாக அறிவித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

## இலங்கை தேசிய கராத்தே தெரிவுக்குழு உறுப்பினராக அன்ரோ டினேஸ் தெரிவு



இலங்கை தேசிய கராத்தே தெரிவுக்குழு உறுப்பினராக சென்சேய் அன்ரோ டினேஸ் விளையாட்டுத்துறை அமைச்சினால் 2018-2019 ஆம் ஆண்டுகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

தேசிய கராத்தே சம்மேளனத்தினால் சிபாரிசு செய்யப்பட்டு விளையாட்டுத்துறை அமைச்சினால் இந்நியமனத்தைப் பெற்றுள்ளார். இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி வெளிநாடுகளில் நடைபெறும் அங்கீகரிக்கப்பட்ட கராத்தே சுற்றுப் போட்டிகளில் பங்குபெறும் தேசிய வீரர்களை தெரிவுசெய்யும் கடமை இவர்களுக்குரியதாகும். (க)

## கோல் மழையில் நனைந்தது மைதானம்; குருநகர் பாடும்மீன் அரையிறுதியில்




அரியாலை சரஸ்வதி விளையாட்டுக்கழகம் தமது நூற்றாண்டு விழாவையொட்டி "வடக்கின் கில்லாடி யார்" என்னும் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் நடத்தி வருகின்றது.

வருடாவருடம் யாழின் கில்லா என நடத்தப்பட்டு வந்த இந்தச் சுற்றுப்போட்டியானது, இந்த வருடம் வடக்கின் கில்லாடியாக மாற்றப்பட்டு, வடமாகாணம் தழுவிய வகையில் மொத்தம் 32 அணிகளுக்கிடையில் இந்தச் சுற்றுப்போட்டியானது நடைபெற்று, தற்போது சுற்றுப் போட்டியின் காலிறுதியாட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இந்தச் சுற்றுப்போட்டியின் முதலாவது காலிறுதியாட்டம் கடந்த 27 ஆம் திகதி வியாழக்கிழமை அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து மெலிஞ்சி முனை இருதயராசா அணி மோதியது. இதில் மிகவும் சிறப்பாக ஆடிய பாடும்மீன் அணி, 05:00 என்ற கோல்கள் கணக்கில் இலகுவாக வென்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது. பாடும்மீன் அணி சார்பாக, கீதன், ஜெறிங்சன், விசோத், மயூரன் மற்றும் கெயின்ஸ் ஆகியோர் தலா ஒரு கோலை அடித்தனர். ஆட்டநாயகனாக கெயின்ஸ் தெரிவு செய்யப்பட்டார். (க-26-106)

## பாம்புக்கடிக்கு...

41வயதான கி.கிருஸ்ணதாசன் நாக பாம்புக்கடிக்கு இலக்கான நிலையிலும், மட்டுவிலைச் சேர்ந்த 59வயதான க.மகாதேவன், பளையைச் சேர்ந்த 26 வயதான யோ. துஸ்யந்தன் ஆகிய இருவரும் புடையன் பாம்புக்கடிக்கு இலக்கான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேலும் மீசாலையைச் சேர்ந்த 33 வயதான ரஜித்தன் குளவிக்கொட்டுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-30)

## நீரில் மூழ்கி...

நான்கு பிள்ளைகளின் தந்தையான வேலுப்பிள்ளை உதயகுமார் (வயது 46) என்பரே உயிரிழந்தவராவார்.

இச் சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

இவரது மரணம் சம்பந்தமாக கிளிநொச்சி திடீர் மரண விசாரணை அதிகாரி நா.அரியரத்தினம் மரண விசாரணையை மேற்கொண்டார். (ம-84)

## பெண்ணின் சங்கிலி...

டார் சைக்கிளில் சென்ற பெண்ணை பின்தொடர்ந்த இருவர் அவரது சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பி சென்றுள்ளனர்.

அப் பெண் அந்த இடத்தில் விழுந்து முகத்தில் படுகாயமடைந்துள்ளார். அருகில் நின்ற இளைஞர்கள் குறித்த திருடர்களை துரத்தி சென்று பிடித்துள்ளனர். அப்போது மோட்டார் சைக்கிள் ஓட்டிச்சென்றவர் தப்பி சென்றதுடன் பின்னால் இருந்தவரை இளைஞர்கள் பிடித்துள்ளனர்.

பின்னர் மானிப்பாய் பொலிசாருக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டு அங்கு வந்த பொலிஸாரிடம்குறித்த நபரை இளைஞர்கள் ஒப்படைத்துள்ளனர். (ம-9)

## தங்கச் சங்கிலி...

ள்ளது

நேற்று காலை புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை பகுதியில் உள்ள வீட்டு முற்றத்தை குடும்ப பெண் ஒருவர் சுத்தம் செய்து கொண்டிருந்துள்ளார்.

அப்போது அந்த வீதியில் சென்ற இருவர் அந்த இடத்தை கடந்து சென்று பின்னர் மீண்டும் திரும்பி அவ்விடம் வந்துள்ளனர்.

குறித்த குடும்ப பெண்ணிடம் சாதுவாக பேச்சுக்கொடுத்துவிட்டு உடனடியாக கழுத்தில் இருந்த சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பி சென்றுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.(ம-9)

## பதின்ம வயது திருமண...

தலைமையில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் நேற்று நடைபெற்றது.

யாழ்.மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலக பிரிவுகளையும் சேர்ந்த சிறுவர் பாதுகாப்பு அலுவலர்கள், சிறுவர் நன்நடத்தை அலுவலர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

இதன்போது பிரதேச செயலக ரீதியாக சிறுவர் மற்றும் பெண்கள் பாதுகாப்புத் தொடர்பில் கூட்டத்தில் பங்கேற்ற தரப்பினரால் எடுத்துரைக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 16 வயதுக்குட்பட்ட பெண் பிள்ளைகளும் 18 வயதுக்குட்பட்ட ஆண் பிள்ளைகளும் இணைந்து வாழ்கின்ற சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. அதற்கு சட்டத்தில் இடமில்லை. அத்துடன், பல்வேறு குடும்ப வன்முறைகளுக்கும் இந்தச் செயற்பாடு வழிவகுக்கின்றது என்று கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலர் பிரிவுகள் அனைத்திலும் பதின்ம வயதுத் திருமணங்கள் மற்றும் இணைந்து வாழ்கின்ற சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடுகள் உள்ளன. அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

பதின்ம வயது திருமணங்கள் மற்றும் இணைந்து வாழ்கின்றவர்களுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்படும். இருவரது பெற்றோர் இணக்கமாகச் சென்றாலும் குற்றமிழைத்த பதின்ம வயதினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் உறுதியளித்தனர். (ம)

# யாழ்.மாநகர சபையில் ஒப்பந்த அடிப்படையில் வேலைக்கு சேர்க்கப்பட்ட ஊழியர்களிடம் இலஞ்சம்

## முறைகேடுகளை அவதானிக்கும் குழு சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

மாநகரசபையில் ஒப்பந்த அடிப்படையில் வேலைக்கு சேர்க்கப்பட்ட ஊழியர்களிடம் இலஞ்சம் பெறப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள யாழ்.மாநகரசபையின் லஞ்ச ஊழல் மற்றும் முறைகேடுகளை அவதானிக்கும் குழு, மாநகரசபையின் அனுமதி இன்றி பல நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளது.

யாழ்.மாநகரசபையின் 6 ஆவது அமர்வு நேற்று இடம்பெற்றது. அதில் யாழ்.மாநகர சபையின் இலஞ்ச ஊழல் மற்றும் முறைகேடுகளை அவதானிக்கும் குழு உறுப்பினர் ஜெ. ரஜீவ்காந் விசாரணை அறிக்கையில் உள்ள விடயங்கள் குறித்து சபையில் முன்வைக்கையில்,

யாழ்.மாநகரசபையால் வாய்க்கால் வேலைக்காக ஒப்பந்த அடிப்படையில் 30 பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். அவர்களிடம் தொழிற்சங்கத்தால், இலஞ்சம் பெறப்பட்டதாக எமக்கு முறைப்பாடு கிடைத்தது. அதன் அடிப்படையில் எமது குழு விசாரணை செய்தபோது 12 ஊழியர்களிடம் மொத்தமாக 42 ஆயிரம் ரூபாய் பெறப்பட்டுள்ளதாக எழுத்து மூலம் ஊழியர்கள் தெரிவித்துள்ளார்கள்.

சபையின் அனுமதி இன்றி பல நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளது. இந்த நியமனத்தால் சபையின் நிதி வீண்விரயம் செய்யப்படுகிறது. குறிப்பாக சில வேலைகளுக்கு மேலதிகமாக நியமனம் வழங்கப்பட்டுள்ளதுடன் அதில் குறித்த நியமனம் புதுப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் இடமாற்றம் வழங்கப்பட்ட அதிகாரி ஒருவருக்கு மீள நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

நவீன சந்தையில் பணியாற்றும் மேற்பார்வையாளர் ஒருவர், ஒரே நேரத்தில் இரு இடத்தில் பணிபுரிவதாக கையொப்பமிட்டுள்ளார்.

மேலும் சின்னக்கடை பகுதியில் மாநகர சபையின் அனுமதி இன்றி மாட்டு இறைச்சி வெட்டப்படுவதாக பொதுமக்களால் அறிவித்தல் வழங்கப்பட்டது. அந்த இடத்துக்கு நாம் சென்று விசாரித்த போது எம்மை தகாத வார்தையால் பேசினார்கள், விசாரணைக்காக அதிகாரிகளை வரவழைக்கும் நேர இடைவெளிக்குள் இறைச்சி வேறு இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் கவனத்தில் கொள்ள வேண்டும்.

குழுவினால் விசாரணை செய்யப்பட்டு கண்டுபிடிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படும் என முதல்வர் அறிவித்தார். அந்த நடவடிக்கைக்கு தாம் ஒத்துழைப்பதாக ஆணையாளர் அறிவித்தார். (ம-9)

### திருக்கோணேஸ்வரர் ஆலய

# முன்னாள் அர்ச்சகரின் தூக்கினை உறுதி செய்தது உயர் நீதிமன்று

(திருகோணமலை)

திருகோணமலையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய அம்பிகா கொலை வழக்கின் எதிரியான கோணேஸ்வரர் ஆலயத்தின் முன்னாள் பிரதம அர்ச்சகரான சிவகடாட்சக் குருக்கள் விசாகேஸ்வர சர்மாவுக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை உயர் நீதிமன்றின் சிறப்பு அமர்வு உறுதி செய்தது.

திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி எம்.இளஞ்செழியன் வழங்கிய தூக்குத் தண்டனைத் தீர்ப்பை மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த பெப்ரவரி மாதம் உறுதி செய்த நிலையில், எதிரியின் இறுதி மேன்முறையீட்டு வாய்ப்பான உயர் நீதிமன்றமும் தண்டனையை உறுதி செய்து தீர்ப்பளித்தது.

சிவகடாட்சக் குருக்கள் விசாகேஸ்வர சர்மா, திருகோணேஸ்வரர் ஆலயத்தின் பிரதம அர்ச்சகராகப் பணியாற்றிய காலத்தில் 1996ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 13ஆம் திகதி தனது மனைவியான அம்பிகா என அழைக்கப்படும் சொக்கலிங்கம் சிவபாதசுந்தரம்பிள்ளை புவனேஸ்வரியை நைலோன் கயிற்றினால் கழுத்தில் சுருக்கிட்டு கொலை செய்தார்.

அவரின் சடலத்தினை ஆலய வளாகத்தில் தான் வசித்து வந்த விடுதி வளவுக்குள் புதைத்திருந்தார். இது தொடர்பான மேன்முறையீட்டு வழக்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் நடைபெற்றது.

இந்த நிலையில் கடந்த புதன்கிழமை உயர் நீதிமன்ற சிறப்பு அமர்வு, எதிரியின் மேன்முறையீட்டு மனுவை நிராகரித்து, அவருக்கு மேல் நீதிமன்றால் வழங்கப்பட்ட தூக்குத் தண்டனையை உறுதி செய்தது.(ம)

## வடக்கில் குற்றங்களை...

கண்டி - தலதா மாளிகைக்கு நேற்று முற்பகல் சென்றிருந்த இராணுவத் தளபதியிடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் சட்டவிரோத குழுக்களை கட்டுப்படுத்த இராணுவத்தினருக்கு அதிகாரம் அவசியம் என யாழ்ப்பாண மாவட்ட கட்டளைத் தளபதி அண்மையில் தெரிவித்திருந்ததை குறிப்பிட்ட ஊடகவியலாளர்கள், அந்த குறித்த அதிகாரத்தைப் பெற்றுக் கொடுக்க கவனம் செலுத்தப்பட்டுள்ளதா என இராணுவத் தளபதியிடம் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்துள்ள இராணுவத் தளபதி, இது குறித்து எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அத்துடன், பாதுகாப்பு சபை மற்றும் புலனாய்வு பிரிவின் கலந்துரையாடல்களின் போதும் இது குறித்து கலந்துரையாடப்படும்.

இதேநேரம், இராணுவத்தின் புலனாய்வு தகவல்களை பொலிஸாருக்கும் விசேட அதிரடிப் படையினருக்கும், வழங்குவது குறித்து எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி கூறியுள்ளார்.

இந்த நிலையில், குறித்த விடயம் தொடர்பில் அரசாங்கம் உடனடியாக தீர்மானத்தை மேற்கொண்டு குறிப்பிட்ட சில அதிகாரங்களை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டும் வழங்கினால் அதனை தம்மால் சரியாக செயற்படுத்த முடியும். என்றும் இராணுவத் தளபதி கூறியுள்ளார். (ம)

## இறுதி யுத்தத்தின் இரு...

அவர்கள் மீண்டெழுந்து விமானத்தில் வந்து கொழும்பு நகரைத் தாக்கி அழிக்கலாம் என்ற அச்சம் அரசாங்கத்திடம், மேலோங்கி இருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் காரணமாக, தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக இறுதி தருணத்தில் ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்புச் செயலாளர், இராணுவத் தளபதி ஆகியோர் நாட்டை விட்டு வெளியேறியிருந்த நிலையில், தானே யுத்தத்தினை முடித்து வைத்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட ஜனாதிபதி, இலங்கையில் இடம்பெற்ற யுத்தம் நிறைவடைந்த இறுதி தருணங்களை எல்லோரையும் விட நானே நன்கு அறிந்தவன். யுத்தத்தின் இறுதி இரு வாரங்கள் நானே நாட்டின் பதில் பாதுகாப்பு அமைச்சராக இருந்தேன்.

முன்னாள் ஜனாதிபதியோ, முன்னாள் பிரதமரோ, இராணுவத் தளபதியோ, முன்னாள் பாதுகாப்புச் செயலாளரோ யுத்தத்தை வெற்றி கொண்ட இரு வாரங்களில் நாட்டில் இருக்கவில்லை.

இது குறித்து பலருக்கு ஞாபகம் இருக்காது. அவர்கள் ஏன் நாட்டை விட்டு சென்றார்கள் என்று கூட யாருக்கும் தெரியாது. ஆனால் அவர்கள் ஏன் சென்றார்கள் என்று எனக்கு தெரியும்.

விடுதலைப்புலிகள் விமானம் மூலம் வந்து கொழும்பில் தாக்குதல் நடத்தும் போது, கொழும்பில் ஒரு பதற்றமான நிலைமை ஏற்பட்டிருந்தது.

விடுதலைப் புலிகள் யுத்தத்திலிருந்து பின்வாங்கப் போவதில்லை. அவர்கள் தென்னிந்தியாவில் அதாவது சென்னையிலோ, அல்லது வேறு எங்கு காட்டுப்பகுதியிலிருந்தோ விமானம் மூலம் வந்து கொழும்பில் குண்டு மழை பொழிந்து கொழும்பை நாசப்படுத்துவார்கள் என்று, அரசாங்கத்திற்கு தகவல் கிடைத்திருந்தது.

அதனால்தான் அவர்கள் அனைவரும் பயந்து நாட்டை விட்டு வெளியேறினார்கள். இதுதான் உண்மைக் கதை. இந்த இரு வாரங்களில் நான் கொழும்பில் இருக்கவில்லை.

என் இருப்பிடத்தை அறிந்து கொள்வார்கள் என்ற காரணத்தினால் நாட்டின் ஒவ்வொரு பகுதிகளிலேயே தங்கியிருந்தேன். இதுதான் யுத்தத்தின் அனுபவம். விடுதலைப் புலிகளின் ஐந்து தாக்குதல்களை எதிர் கொண்டவன் நான் என தெரிவித்துள்ளார். (ம)

## வாள்வெட்டுக் குழு...

தாக்கி சேதப்படுத்திவிட்டு தப்பி சென்றுள்ளனர்.

இந்த சம்பவம் குறித்து யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-9)


**தன நிதானய**

திகதி 2018-09-28
சீட்டிழுப்பு இலக்கம் 55
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கங்கள் 05 26 52 79

**மஹஜன சம்பத**

திகதி 2018/09/28
சீட்டிழுப்பு இலக்கம் 3756
ஆங்கில எழுத்து P
வெல்லப்பட்ட இலக்கங்கள் 5 1 7 5 8 1

**கொவிசெத**

திகதி 2018.09.28
சீட்டிழுப்பு இலக்கம் 1896
ஆங்கில எழுத்து M
வெல்லப்பட்ட இலக்கங்கள் 12 40 65 78

**மெகா பவர்**

திகதி 28.09.2018
சீட்டிழுப்பு இலக்கம் 285
வெற்றி எழுத்து V
சுப்பர் இலக்கம் 24
வெற்றி இலக்கங்கள் 23 30 34 70

தேசிய லொத்தர் சபை

## யாழ். பொது நூல...

மாநகரசபையில் தீர்மானம் நிறைவேற் றப்பட்டுள்ளது.

யாழ் மாநகரசபையின் 6 ஆவது அமர்வு நேற்று இடம்பெற்றது. அதில் மேற்குறித்த விடயம் தொடர்பில் உறுப்பினர் ந.லோகதயாளன் பிரேரணை ஒன்றை சமர்ப்பித்தார். அதாவது யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆளுகைக்குட்பட்ட யாழ். பொது நூலகம் மீள புனரமைக்கப்பட்ட பின்னர் கடந்த 2004 ஆம் ஆண்டு முன்னாள் ஆணையாளர் இராமலிங்கமும் நூலகர் தனபாலசிங்கமும் இணைந்து திறந்து வைத்தனர்.

ஆனால் நூலகத்தின் நுழைவாயில் உள்ள கல்வெட்டிலே 2003 ஆம் ஆண்டில் வீ.ஆனந்தசங்கரியால் திறந்து வைக்கப்பட்டதோடு மாநகர சபையின் உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டதாக பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.

ஓர் மூத்த அரசியல்வாதியின் பெயரைப் பதித்து தவறான வரலாற்றை கூறும் அந்தக் கல் அகற்றப்பட வேண்டும். சபை தீர்மானிக்கும் பட்சத்தில் சரியான கல்லை வைக்கலாம் என்ற பிரேரணையை முன்மொழிந்தார்.

இந்த கல்வெட்டை அகற்றுவது தொடர்பாக சில உறுப்பினர்கள் தமது எதிர்ப்பினை தெரிவித்தனர். தவறாக பதியப்பட்டிருந்தால் குறித்த கல்வெட்டு அகற்றப்பட வேண்டும் என பல உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

அதன்போது கருத்து தெரிவித்த உறுப்பினர் சொலமன் சூசைப்பிள்ளை சிறில் குறித்த நூலகம் மீளப் புனரமைக்கப்பட்ட போது மாநகர முதல்வராக செல்லன் - கந்தையா இருந்தார். அப்போது ஆட்சியில் இருந்த கட்சியின் தலைவரை (ஆனந்தசங்கரி) திறப்பு விழாவிற்கு அழைக்க வேண்டாம் என முதல்வரிடம் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் சார்பில் நேரில் சென்று கோரிக்கை விடப்பட்டது. அதன் தலைவர் என்ற வகையில் நானும் சென்றேன். இருப்பினும் எமது கோரிக்கை ஏற்கப்படவில்லை.

இதனால் மக்களை திரட்டி மறியல் போராட்டத்தையும் முன்னெடுத்தோம். இதன் காரணமாக குறித்த திகதியில் நூலகம் திறக்கப்படவில்லை என்பதே உண்மையானது. இந்த நிலையில் நீண்ட காலத்தின் பின்னர். எந்த விதமான ஆரவாரமும் இன்றி திறக்கப்பட்டது.

அந்த கல்லில் உள்ளவர்கள் அப்போது கலந்துகொள்ளவில்லை. அவரது பெயரை பொறித்தால் வரலாறு ஏற்றுக்கொள்ளாது. எனவே இந்த தீர்மானத்தை நான் வழிமொழிகின்றேன் என தெரிவித்தார்.

இதனையடுத்து மாநகர முதல்வர் குறித்த விடயம் தொடர்பில் தெரிவிக்கையில்,

திறக்கப்படாத நூலகத்தை திறந்ததாக கல்வெட்டு எனும் தலைப்பில் வடக்கு மாகாண சபையின் முறைப்பாட்டுக்குழுவிற்கு கிடைத்த கடிதம் எமக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நூலகத்தை திறக்க பலர் ஆசைப்பட்டனர். ஆனால் நிறைவேறவில்லை.பின்னர் ஊழியர்களால் ஆரவாரம் இன்றி திறந்து வைக்கப்பட்டது

இந்த நிலையில், நூலகம் வீரசிங்கம் ஆனந்தசங்கரியால் திறந்து வைக்கப்பட்டது என பொறிக்கப்பட்ட கல் களஞ்சிய அறையில் இருந்து எடுக்கப்பட்டு கடந்த ஈ.பி.டி.பி ஆட்சிக் காலத்தில் இருந்த மேயரால் பொறிக்கப்பட்டது. இது வரலாற்று மோசடி என தெரிவித்து கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதை எமக்கு அனுப்பிவைத்துள்ளார்கள். எனவே உண்மை நிலைமையை கண்டறிந்து அங்கே பொறிக்கப்பட்டுள்ள கல் தவறு என்றால் திருத்தம் செய்யப்பட்டு பொறிக்கப்படும் என மேலும் தெரிவித்தார். (ம-9)

## உணவு தவிர்ப்பு...

உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு 9 வருடங்களுக்கு மேலாக சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 10 கைதிகள், தம்மை அரசு குறுகிய புனர்வாழ்வு அளித்து விடுதலை செய்ய வேண்டும் அல்லது வழக்குகளை விரைவுபடுத்தி விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து உடல்நிலை மோசமடைந்த நிலையில் ஒரு வாரமாக தொடர்ச்சியான உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் குறித்த கைதிகளை சந்தித்து ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் பேசி ஒரு தீர்வை தருவதாக கூறியிருந்த நிலையில் இதுவரை எந்த முடிவும் தெரிவிக்கப்படவில்லை.

இந்நிலையில் இதுவரை மருத்துவ சிகிச்சைகளை பெற்று வந்த இவர்கள் நேற்றில் இருந்து அவற்றை நிறுத்தியுள்ளனர். உணவு ஒறுப்பில் ஈடுபட்டுவரும் கைதிகளின் உடல்நிலை மிகவும் பலவீனமடைந்து காணப்படுவதாக அவர்களின் உறவுகள் தெரிவித்துள்ளார்கள். (ம-9)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் - பலாலி வீதியில் வடக்கு புன்னாலைக் கட்டுவன் சந்திக்கு அருகில் ஏழு பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 0755432918 (5830)

## Win Work Shop

உங்களுக்கான ஓர் அரிய சந்தர்ப்பம்...

- சகல விதமான குளிர்சாதன பெட்டிகள், சலவை இயந்திரம், A/C அனைத்தும் உங்கள் வீடுகளுக்கே வந்து சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும்.
- சிறிய, பெரிய அளவிலான வர்ணப்பூச்சு (Painting)வேலைகள் செய்து தரப்படும்.

குறைந்த செலவில் நிறைந்த சேவை 0779648942 (5844)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத் தருகின்றோம்


## நிறஞ்சன் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, உடுப்பிட்டி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு:
நிறஞ்சன் நகைமாடம் சந்தை வீதி, உடுப்பிட்டி. 0763836129 (5824)

## NEW SCIENCE HALL

KANNATHIDDY JAFFNA

### 2019 A/L DAY CLASSES

2018 August பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்குரியது.
Mon, Tue, Wed, Thu, Fri

ENGLISH MEDIUM

Biology : 7.30 - 9.30
Mr.S.P.Naahanathan

Chemistry : 9.30 - 11.30
Mr.S.V.Selvaranjan

Physics : 11.30 - 1.30
Mr.V.S.Sothylingam

Com. Maths : 6.00 - 7.00 Sat & Sun 9.30 - 11.30
Mr.K.Sivakaran

ஆரம்பமாகிவிட்டது (C-5988)

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தில் வயோதிபப் பெண்ணொருவரைப் பராமரிப்பதற்கு பணிப் பெண் தேவை.
தொடர்புகளுக்கு: 0779967037 (5827)

## H.A.C

சித்தன்கேணி
A/L 2019, 2020 Day Class
இரசாயனவியல் வகுப்பு ஆரம்பம்
01.10.2018 - பிற்பகல்: 4.00 மணி
ஆசிரியர் : J.உதயன்
(B.Sc with Edu. (Hons), P.G.D.E, M.Sc in Science Edu) (5840)

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு


DELIVERY IN 3-5 DAYS

UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

0768226240
- மானிப்பாய்
- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி
- நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

V2 TRAVELS

வெளிநாடு- உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை
WESTERN UNION 070 330 5500 WESTERN UNION
அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி (C-3943)
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும் நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்
3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்
வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்
முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை

## சிற்றி சிக்கன் ஹோம் சப்பிளை

உங்களுக்கு கோழி இறைச்சி தேவையா? அழையுங்கள்... உங்கள் வீடுகளுக்கே கொண்டு வந்து தருகின்றோம்.எம்மிடம் புறொயிலர், ஊர்ச் சேவல் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். (C-359)
0778380158, 0764719951, 0217223535, 0217223636
M.S.V பாம் டீலேர்ஸ் - கொக்குவில்

## வீடு விற்பனைக்கு

பருத்தித்துறை நகரில், பிரதான வீதிக்கு அண்மையாக பூதராயர் ஒழுங்கையில் நல்ல கல்வீடு விற்பனைக்கு உண்டு. விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும். தொடர்புகளுக்கு:
0762863971 (5829)


## மேன்...

விஜித் மலல் கொட ஆகியோர் முன்னிலையில் இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த மனு மூவரடங்கிய நீதியரசர்கள் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என நேற்று தீர்மானித்த நீதியரசர்கள் குழாம், மனு மீதான விவாதத்தை ஒத்திவைத்தார்கள்.

வட மாகாண முன்னாள் அமைச்சர் பா.டெனீஸ்வரன் தாக்கல் செய்த மனுவை பரிசீலனை செய்த மேன்முறையீட்டு நீதிமன்றம், அவரை அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கி வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வெளியிட்ட வர்த்தமானிக்கு அமைய செயற்படுவதை இடைநிறுத்தி கடந்த ஜுன் மாதம் 20 ஆம் திகதி இடைக்காலக் கட்டளையைப் பிறப்பித்தது குறிப்பிடத்தக்கது.(ம)

## மாநகர எல்லைக்...

அதாவது யாழ் மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வர்த்தக நோக்கில் அல்லது சேவை நோக்கில் அமைந்துள்ள விடுதிகள் மற்றும் மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உணவுகள். தின்பண்டங்கள் விற்பனை செய்வோர் அனைவரும் ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்ய வேண்டும். அது தொடர்பான மேலதிக விபரம் பத்திரிகைகள் ஊடாக பிரசுரிக்கப்படும்.

மேலும் பண்ணைக் கடற்கரையில் உள்ள சிற்றுண்டிச்சாலை மற்றும் அதனை அண்டிய பகுதிகளை தூய்மையாக வைத்திருப்பதற்கும், மக்களுக்கான சிறந்த பொழுதுபோக்கு இடமாக மாற்றுவதற்கும் ஏற்ற கருத்திட்ட முன்மொழிவுகள் அடுத்த மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும்.

யாழ். நகரப்பகுதிகளில் அமைந்துள்ள கடைகளில் வியாபாரிகள் தமது கடைகளுக்கு வெளியே பொருட்களை காட்சிப்படுத்தி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இதனால் பாதசாரிகளுக்கு இடையூறு ஏற்படுகிறது. இந்த நடவடிக்கை உடனடியாக நிறுத்தப்படவேண்டும். மீறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

நெல்சன் மண்டேலாவின் சிலை நூலகத்தில் நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால் அதற்கு மாநகரசபை நிதி பயன்படுத்தப்படாது.

மேலும் சபை அமர்வுகள் தொடர்பான அறிக்கைகள் பிரதியிடுவதற்கு அதிக செலவீனம் ஏற்படுவதால் இனிவரும் காலங்களில் உறுப்பினர்களுக்கு மின் அஞ்சல் ஊடாகவே அறிக்கைகள் அனுப்பப்படும் என மேலும் தெரிவித்தார். (ம-9)


## Techno World

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.

கடந்த பரீட்சை வெற்றியைத் தொடர்ந்து (65 மாணவர்கள் பல்கலைக்கழகம்) A/L 2018 இல் தோற்றிய மாணவர்களுக்கு செயன்முறை வகுப்பு மற்றும் பரீட்சைகள் (தொடர்ச்சியாக 30 நாட்கள்)

உயிர்முறைமைகள் தொழில்நுட்பம்

- 20 - செயன்முறை வகுப்பு
- Spot Exam - 5
- B1, B2 - 5

(C-4001)

பதிவுகள் ஆரம்பம் : 30.09.2018

(ஒவ்வொரு குழுவிலும் மட்டுப்படுத்திய மாணவர்கள் மாத்திரம்)
அனைத்து மாணவர்களும் பங்குபற்றலாம்
தொடர்புகளுக்கு: 0770175346


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.09.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.